விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

35°c - 25°c

தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 121 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 13, சனிக்கிழமை 26.03.2016

ரோமில் முஸ்லிம் அகதிகளின் கால்களைக் கழுவினார் பாப்பரசர்



பக். 14-15

# போர்க்குற்ற விசாரணையை தடுப்பதற்குச் சிலர் முயற்சி

## சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 26
போர் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்து கொள்வது மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, உண்மையைக் கண்டறியும் பொறிமுறைமையைச் சீர்குலைப்பதற்கு சில அரசியல் தலைமைகள் முயற்சித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
நல்லிணக்கத்தை நோக்கி முன்னகர வேண்டுமாயின், போர் பற்றிய பின்னணி மற்றும் அது குறித்த ஏதுக்களை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
சர்வதேச உண்மை அறியும் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் பங்கேற்றபோது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இதன்போது, அவர் மேலும் கூறியுள்ளதாவது:-
உண்மையைக் கண்டறியும் பொறிமுறைமையை சீர்குலைப்பதற்கு சில அரசியல் தலைமைகள் முயற்சிக்கின்றன. பக். 23

" உண்மையைக் கண்டறியும் பொறிமுறைமையைச் சீர்குலைப்பதற்கு சில அரசியல் தலைமைகள் முயற்சிக்கின்றன.
போரின் போதும், அதன் பின்னரும் சில அரசியல் தரப்புகள் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தவே முயற்சித்து வருகின்றன. "



## ஐ.எஸ். அமைப்பின் இலக்கில் இலங்கை

கொழும்பு, மார்ச் 26
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் நடத்துவதற்கு அடையாளப்படுத்தியுள்ள நாடுகளில் இலங்கையும் உள்ளதாக, அமெரிக்க ஆய்வு நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.
சர்வதேச பாதுகாப்பு நிலைமை, மோதல்கள் குறித்து ஆய்வு செய்யும் அமெரிக்க நிறுவனமான 'சர்வதேச மோதல் நிலை தொடர்பான ஆய்வு நிலையம்' இறுதியாக மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
இந்த அமைப்பினால் கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆள்சேர்ப்புப் பரப்பு மற்றும் இலக்கு வைத்த தாக்குதல் தளம் என்பன உள்ளடங்கிய வரைபடத்தில் இலங்கை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.
கடந்த பக். 23

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க ஐ.நா. தயார்

### பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவிப்பு

நியூயோர்க், மார்ச் 26
இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்குமெய்யான ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கி, உதவத்தயார் என ஐ. நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.



உண்மையை அறிந்து கொள்ளும் சர்வதேச தினத்தை முன்னிட்டு, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் ஐ. நா. பொதுச் செயலாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-
பாதிக்கப்பட்டவர்கள் உண்மையை அறிந்து கொள்ளவும், நீதியைப் பெற்றுக்கொள்ளவும் அந்தந்த நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
பெரியளவில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு, இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது பக். 23

## சீன விமானப்படை அதிகாரிகள் கொழும்புக்கு ரகசியப் பயணம்

கொழும்பு, மார்ச் 26
சீன விமானப்படையின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கொழும்புக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டு, இலங்கை விமானப்படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளது.
கொழும்புக்குப் பயணம் மேற்கொண்ட ஆறு பேர் கொண்ட சீன விமானப்படை அதிகாரிகள் குழுவுக்கு, சீன விமானப்படையின் அரசியல் ஆணையாளர் லெப்.ஜெனரல் யூ சோங்பூ தலைமை தாங்கினார். இவர் சீன விமானப்படைத் தளபதிக்கு அடுத்த நிலையில் உள்ளவராவார்.
இந்தக் குழுவில், சீன விமானப் படையைச் சேர்ந்த இரண்டு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.
இவர்கள் கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கை விமானப்படைத் தலைமையகத்தில், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ககன் புலத்சிங்கள தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.
இலங்கை விமானப்படையின் தற்போதைய பலம் குறித்தும், எதிர்கால சவால்களைச் சமாளிப்பதற்கான திட்டங்கள் குறித்தும் இவர்கள் இலங்கை விமானப் படை பக். 23

முச்சந்தி முரளி



அதிகாரம் உங்களிடம் யாரால தடுக்க முடியும்



## கல்லாறு கடற்கரையில் 51 கிலோ கஞ்சா சிக்கியது

### கடத்தியவர்கள் தலைமறைவு

மன்னார், மார்ச் 26
மன்னார் - சிலாபத்துறை கல்லாறு கடற்கரைப் பகுதியிலிருந்து சுமார் 52 லட்சம் ரூபா பெறுமதியுடையது என மதிப்பிடப்படும் 51 கிலோ 500 கிராம் எடை கொண்ட போதைப் பொருளான கேரளக் கஞ்சாப் பொதிகளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கைப்பற்றியுள்ளதாக மன்னார் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப்பிரிவினர் தெரிவித்தனர்.
மன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி உதவி பொலிஸ் பரிசோதகர் எச்.எம்.டபிள்யு.ஹெரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முசலிப் பகுதிக்கு விரைந்துள்ளனர்.
சிலாபத்துறை கடற்படையுடன் இணைந்து, சிலாபத்துறை-கல்லாறு பகுதியில் தேடுதல் நடத்தினர். எனினும் அவர்கள் அங்கு செல்வதற்கிடையில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் 14 பொதிகளில் அடைக்கப்பட்ட கேரளக் கஞ்சாப் பொதிகளை பக். 23

## மக்களுக்குப் பாதகம் ஏற்படின் சம்பூரில் அனல்மின் நிலையம் அமைக்கவிடோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

மூதூர், மார்ச் 26
சம்பூர் அனல்மின் நிலையம் அமைக்கப்படின், அதனால் பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிவோம். எனவே, இது தொடர்பில் எமது மக்களுக்குப் பாதகம் ஏற்படுத்தும் அளவுக்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான பக். 23



## மூளைக்காய்ச்சல் பீடித்த மாணவன் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 26
மூளைக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 15 வயது மாணவன் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்துள்ளான்.
அச்சுவேலி - இடைக்காட்டைச் சேர்ந்த ஸ்ரீநிவாசன் தர்சிகன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தான்.
இடைக்காடு மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் குறித்த மாணவன், கடந்த புதன்கிழமை பாடசாலைக்குச் சென்று திரும்பும் போது காய்ச்சல் என்று கூறியுள்ளான்.
இதனால் பனடோல் மாத்திரை போட்டுவிட்டு, மறுநாள் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.
பின்னர் மேலதிக பக். 23

## நான்கு நாள்களுக்கு அதிக வெப்பநிலை

கொழும்பு, மார்ச் 26
இன்று முதல் நான்கு நாள்களுக்கு சூரியக் கதிர் நேரடியாக இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளைத் தாக்க இருக்கின்றது.
எனவே, பக். 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டத்தில் ஊடகவியலாளர்களை ஏமாற்றியது அரசு

## வங்கிக் கடனில் வாங்கியதை அமைச்சர் கையளிக்கிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 26
ஊடகவியலாளர்களுக்கான மோட்டார் சைக்கிள் வழங்குவதில், அரசு ஏமாற்றி விட்டதாக ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தீர்வையற்ற மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் என்று தெரிவித்த போதும், இறுதியில் வங்கிக் கடன் அடிப்படையிலேயே மோட்டார் சைக்கிள் வழங்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

ஊடகவியலாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் என்று நல்லாட்சி அரசு பதவியேற்கும் போது தெரிவித்திருந்தது. அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று தீர்வையற்ற மோட்டார் சைக்கிளே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, 5 வருடங்கள் ஊடகத்துறையில் பணியாற்றியவர்கள் மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டது. இவ்வாறு விண்ணப்பித்தவர்கள் நேர்முகத் தேர்வுக்கு கொழும்புக்கு அழைக்கப்பட்டனர். இதன் பின்னர், மோட்டார் சைக்கிள் பெற்றுக் கொள்ளத் தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது.

பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னரே, தீர்வையற்ற மோட்டார் சைக்கிள் வழங்கப்படாது என்றும், வங்கிக் கடன் அடிப்படையிலேயே மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் என்றும் அரசினால் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் ஊடாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படும். இந்தக் கடனை, சாதாரண கடன் எவ்வாறு பெற்றுக் கொள்வதோ, அதனைப் போன்று பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கடன் தொகை மற்றும் அதற்குரிய 2 சதவீத வட்டியை ஊடகவியலாளர்கள் செலுத்த வேண்டும். அரசு 7 சதவீத வட்டியை மாத்திரமே செலுத்தும்.

இவ்வாறு ஊடகவியலாளர்களுக்கு கிடைக்கப் பெறும் மோட்டார் சைக்கிளையே, அரசு தான் வழங்குவது போன்று விம்பத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாக ஊடகவியலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

வடக்குக்கு இன்றைய தினம் வருகை தரும் ஊடக அமைச்சர், ஊடகவியலாளர்கள் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் இந்த மோட்டார் சைக்கிளை, அவரது கையினால் வழங்கி வைக்கவுள்ளார். இதற்கான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, அரசினால் வழங்கப்படும் மோட்டார் சைக்கிளை 'உதயன்' ஊடகவியலாளர்கள் எவரும் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
(வ-5)

# பாரம்பரியத்தை நினைவு கூர்ந்த திருமண நிகழ்வு




யாழ்ப்பாணம், மார்ச் 26
உரும்பிராயில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றில், தமிழர் பாரம்பரியத்தை நினைவு கூருவதாக, மணமகனும் மணமகளும் மாட்டு வண்டிலில் அழைத்துச் செல்லப்பட்ட நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

குறித்த திருமணபந்தத்தில் இணையும் மணமகன் கோண்டாவிலைச் சேர்ந்தவர், மணமகள் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவர்.

கோண்டாவிலிலிருந்து மணமகனும் தோழனும் சைக்கிளில் உரும்பிராய்க்குச் சென்றனர். அங்குள்ள பிள்ளையார் ஆலய மண்டபம் ஒன்றில் திருமண நிகழ்வு இடம்பெற்றது. அதன் பின்னர் தம்பதியர் இருவரும் திருக்கல் மாட்டு வண்டிலில் புன்னாலைக் கட்டுவனிலுள்ள மணமகள் வீட்டுக்குப் பயணித்தனர். (வ-4)

# விகாரைகள் அமைப்பதை நிறுத்த சம்பந்தனின் அழுத்தம் வேண்டும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
போரின் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பௌத்த விகாரைகள் அமைக்கும் நடவடிக்கைகள், இராணுவக் குடியிருப்புக்கள் அமைத்தல் போன்றவற்றை உடனடியாக நிறுத்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்த அரசை வலியுறுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்களின் குரலுக்கு அரசு செவிசாய்க்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நீர்வேலியிலுள்ள அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ்பிரேமசந்திரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களை எவ்வாறு சிறுபான்மையினராக்கினார்களோ அதே போன்று வடக்கில், தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகிந்த அரசின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் தற்போதைய அரசாலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இன நல்லிணக்கம், தொல்பொருள் ஆராய்ச்சி என்று பல்வேறு பெயர்களில் தமிழ் மக்களின் காணிகள் பறிக்கப்பட்டு சிங்கள மயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

வவுனியாவில் நாமல் கமவில் 600 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. மன்னாரில் நரிக்காடு என்ற இடத்தில் 50 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். மடுவில் நூறு சிங்களக் குடும்பங்கள் வரையிலும், மணலாற்றில் 2 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் வரையிலுமாகக் குடியேற்றப்பட்டுள்ளார்கள். போரின் பின்னர் இடம்பெற்ற சட்டவிரோதக் குடியேற்றங்கள் இவை.

இதேபோன்று, கனகராயன்குளம், மாங்குளம், வவுனியாவில் சேமமடு, கொக்கிளாய், திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களில் பௌத்த விகாரைகள் முளைத்துள்ளன. யாழ்ப்பாணத்தில் நாக விகாரை மற்றும் கிளிநொச்சியில் முன்னர் பௌத்த விகாரைகள் இருந்தன. அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. போரின் பின்னர் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைகளைப் பற்றியே சொல்கின்றோம்.

வவுனியாவில் இராணுவக் குடியிருப்பு திறந்து வைக்கப்படவுள்ளது. இதில் வவுனியாவிலுள்ள சிங்கள மக்களுக்கு கொடுப்பதில் பிரச்சினையில்லை. ஆனால் வேறு இடங்களில் இருந்து கொண்டு வந்து குடியேற்றுவது தான் பிரச்சினைக்குரியது. இதனூடாக இனப் பரம்பலை மாற்றியமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு தமிழ் மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளை இந்த அரசுதான் விரும்பியவாறு முன்னெடுக்கின்றது. இதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தேர்தல் அறிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டது. அதில் வடக்கு - கிழக்கு இணைப்பு, தமிழ் மக்களின் மீள்குடியமர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் குறிப்பிட்டிருந்தது.

அதனை நிறைவேற்றவேண்டும். கொடுத்த வாக்குறுதிகளைப் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அரசு எதேச்சதிகாரமாகச் செயற்பட்டு இனப் பரம்பலை மாற்றியமைக்க மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு இரா.சம்பந்தன் கோரிக்கை விடுக்க வேண்டும். அதற்குரிய அழுத்தத்தையும் வழங்க வேண்டும். தமிழ் மக்களின் குரலுக்கு அரசு செவிசாய்க்கவும் வேண்டும் - என்றார்.
(த-ஐ-5)

# தந்திரிமலை பாலத்துக்கு விமோசனம்

வவுனியா, மார்ச் 26
வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் உள்ள தந்திரிமலை பாலம் தற்போது திருத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலம் நீண்டகாலமாக திருத்தப்படாமையால் மழை காலத்தில் இந்தப் பாதையூடாக பயணிக்க முடியாமல் பலர் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டனர்.

அதனால் செட்டிகுளம் பகுதி மக்கள் அதனைத் திருத்தித்தருமாறு கடந்த வருடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் தற்போது அது திருத்தப்படுகிறது. (த-ஐ-4,402)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தின் பழைய மாணவர்சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி சு.சூரியராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. கூட்டத்துக்குக் கல்லூரியின் பழைய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.
(ஐ-402)



கிறிஸ்தவ ஆலயங்களில் நேற்று புனித வெள்ளி வழிபாடுகள் நடைபெற்றன. இயேசுவின் சிலுவைப்பாடுகள் இதன்போது நினைவு கூரப்பட்டது.

# "காலத்தின் விளிம்பு" நூல் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளும் அவற்றைப் பாதுகாத்தலும் என்ற விடயம் சார்ந்த - பாக்கியநாதன் அகிலனின்-
"காலத்தின் விளிம்பு" நூலின் வெளியீடு, நாளை ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில், முற்பகல் பத்து மணிக்கு நடைபெறும்.

விழாவின் பிரதமவிருந்தினராக, வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.

பேராசிரியர் அ.நோ.கிருஷ்ணவேணி (தலைவர், நுண்கலைத்துறை யாழ்.பல்கலைக்கழகம்) தலைமையில் விழா நடைபெறும்.

யாழ். அரச அதிபர் பொ.வேதநாயகன், யாழ். மாநகரசபை ஆணையாளர் மா.வாகீசன், ம.நிலாந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர்.

குழந்தை செபமாலை, வைத்திய கலாநிதி பூ.லக்ஷ்மன், ந.குணரத்தினம், சுதேச வைத்திய கலாநிதிகள் க.ஜீவானந்தம், ஜி.புவனலோஜினி, வ.ஜெயக்கொடி ஆகியோர் சிறப்புப் பிரதிகளை வழங்குவர்.

யஸ்ரின் [illegible] குழுவினர் பாரம்பரிய நாடக அரங்கப் பாடல்களை வழங்குவர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சரணடைந்த பாலகுமாரனை மீட்டுத்தருமாறு கோரிக்கை

## ஆணைக்குழு முன் உறவினர் சாட்சியம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரும், அரசியல் ஆலோசகருமான வேலுப்பிள்ளை பாலகுமாரன் மற்றும் அவருடைய மகன் பாலகுமாரன் சூரிய தீபன் இருவரையும் தேடித்தருமாறு பாலகுமாரனின் மனைவியின் சகோதரி, ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு வழங்கியுள்ளார்.

காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு,முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வின் போதே அவர் இவ்வாறு கேட்டுள்ளார்.

இதன்போது, அவர் தனது சாட்சியத்தில்:-

போரின் இறுதிக்கட்டத்தில் தந்தையும் மகனும் ஒன்றாக வந்தவர்கள். முதலில் பாலகுமாரன்தான் சரணடைந்தவர். பின்பு மகனும் இருப்பதாக அறிந்த இராணுவம் அவருடைய பெயரைச்சொல்லி அழைத்துச் சென்றதாக அங்கு இருந்தவர்கள் கூறியிருந்தனர். இராணுவத்திடம் சரணடைந்தபோது, பாலகுமாரனும் அவருடைய மகனும் மற்றும் அவருடைய மெய்ப்பாதுகாவலன் ஆகியோரை இராணுவத்தினர் குந்தி இருக்கவைத்தது போன்ற ஒளிப்படம் ஒன்று பத்திரிகையில் வெளிவந்திருந்தது - என்றார்.

இந்த அமர்வு நேற்றுக்காலை 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

மக்ஸ்வெல் பரணகம, டயிள்யூ ஏ.ரி. ரத்னாயக்க, சுரன்யனா விஜயரட்ண, எச்.சுமணபால ஆகியோரால் நேற்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. குறித்த அமர்வு தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளன. நேற்றுப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட முறைப்பாட்டாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இன்று புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக முறைப்பாட்டாளர்களும் நாளைமறுதினம் துணுக்காய், மாந்தைகிழக்கு, கரைதுறைப்பற்று பிரதேச செயலக முறைப்பாட்டாளர்களும் தங்கள் முறைப்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர். அரசினால் வழங்கப்படும் எந்தச் சலுகைகளையும் பெற்றுக் கொள்ள காணாமற்போனவர்களின் உறவினர்கள் தயாராக இல்லை. எமது பிள்ளைகளைத் தேடித்தருமாறே ஆணைக் குழுவினரைக் கேட்கின்றோம் என மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

(வ-4,ரி7)

## 14 வர்த்தகர்களுக்கு 42 ஆயிரம் அபராதம்

மல்லாகம் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த 14 வர்த்தகர்களுக்கு 42 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மல்லாகம் நீதிமன்று.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினரால் குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ததாகச் சபையின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

14 வர்த்தக நிலையங்களில் இரண்டு நவீன சந்தைகள் என்றும் அவர் குறிப்பிட்டார். தாக்கல் செய்யப்பட்ட ஒவ்வொரு வழக்குகளும் தனித் தனியாக மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

குற்றம் சாட்டப்பட்ட வர்த்தகர்கள் தங்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான் எச்சரிக்கை செய்து அபராதம் விதித்தார். (ஐ-4-107)

**தேவை**

யாழ்ப்பாணத்தில் மில் வேலையில் அனுபவம் உள்ளவர் பழக விரும்புபவர் (ஆண்,பெண்) பில்கிளாக், பொதியிடல், உதவியாளர்கள் (பெண்கள்) என்பவற்றிற்கு ஆள்கள் தேவை.

தொர்புக்கு : 0771746101

**வீடு வாடகைக்கு தேவை**

மூன்று பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு யாழ் மாநகர சபை எல்லைக்குள் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு: 077 5537310

**காணி விற்பனைக்கு**

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கடற்கரை வீதி, பொலிகண்டியில் கடற்கரைக்கு முன்பாக 17 பரப்புக்காணி உடைந்த வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. உல்லாச ஹோட்டல் கட்டுவதற்கு உகந்த இடம்.

077 742 0240

**வேலை வாய்ப்பு**

ஆங்கில மருந்தகத்திற்கு ஆள்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் 26.03.2016 சனிக்கிழமை நேரில் வரவும்.

மயூரா மருந்தகம்
பலாலி வீதி திருநெல்வேலி
T.P: 021 222 2946

**வேலை வாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ உதவியாளர்-ஆண் (Management Assistant Male) பதவிக்கு வெற்றிடம் காணப்படுகிறது.

தகைமை:
G.C.E (A/L)
ஆங்கிலம் மற்றும் கணினி அறிவு
19-25 வயது

ஆர்வமுள்ளவர்கள் 30.03.2016 அன்று காலை 9.00 மணிக்கு சுய விவரக் கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு :
021 720 0777
021 222 0727

Wisdom business Academy-Jaffna
No-154 A/I, Navalar road
Jaffna

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 25.03.2016 | 1959 | சிவப்பு |

துலாம்

வெற்றி இலக்கங்கள்
23 29 33 35

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB (space) LOT (space) LW
1919

வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 39,31,840/-

நியத்த ஜய

| | |
| --- | --- |
| வெற்றி வாரம் | 448 |
| திகதி | 25.03.2016 |
| வர்ணம் | நீலம் |

வாசி தஹச

விஷேட வெற்றி இலக்கம்
1013

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜாக்பொட் பரிசுத்தொகை
ரூ 1,46,36,480/-

வெற்றி இலக்கங்கள்
18 22 43 56

ஆங்கில எழுத்து
L

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB (space) LOT (space) NJ vd ilg; nra;J
1919
Tel: 011 4 824 824

29.03.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



சிவாகம கிரியா கலாநிதி
சிவஸ்ரீ இரத்தினசாமி குருக்கள்
பாலகிருஸ்ணக்குருக்கள்
பிரதமகுரு கொம்மாந்துறை மனோன்மணி அம்மன் ஆலயம்
அவர்கட்கு இலங்கை சமாஜசேவா நலன்புரி சம்மேளனத்தினால் 19.03.2016 அன்று அநுராதபுரத்தில்
தேசமான்னிய
எனும் கௌரவபட்டம் வழங்கப்பட்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்.

**வாடகைக்கு**

நல்லூர் கோயில் தெற்கு வீதியில் 70அடி நீளம் A/C வசதி கொண்ட முதலாவது மாடியில் கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0776510434
0212219732

**வாடகைக்கு**

முற்றிலும் பிரத்தியேகமான அனெக்ஸ் (தனியறை, சமயலறை, இணைந்த குளியலறை) வாடகைக்குண்டு.
2 பெண்கள் வசிக்கலாம்.

தொடர்புக்கு: 075 5549402

**விற்பனையாளர் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள மருந்தகம் ஒன்றுக்கு மருந்து விற்பனையாளர் தேவை (பெண்) அனுபவமுள்ளவர்கள் மட்டும்.

தொடர்புக்கு : 0777301455

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் மேற்கு, K.K.S வீதி, முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1¾ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

076 702 3565

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது நிறுவனத்துக்கு கீழ்க் காணும் தகுதிகளுடன் கூடிய விற்பனை மேற்பார்வையாளர் (Supervisor) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

- வயதெல்லை 21இற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- பூரண கணினி அறிவு இருத்தல் வேண்டும்.
- சிங்களம் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
GHADE Silva & Company
இல.96, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7080 / 077 003 4130

**கட்டடம் வாடகைக்கு**

திருநெல்வேலிச் சந்திக்கு மிக அண்மையில் கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு : 0752431018

**வேலையாள்கள் தேவை**

புதிதாகத் திறக்கப்பட்ட உணவகம் ஒன்றுக்கு

- சமையல் ஆள்
- ரொட்டி போடுபவர்
- பலகாரம் செய்பவர்
- உதவியாளர்
- பரிமாறுபவர்

2வருட அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

இல.1037, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 205 4538, 077 078 2375

**Study MBBS**

**100% SCHOLARSHIPS** **

Dhaka Medical College
Chittagong Medical College

Approved by Sri Lankan Medical Council
UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO



* Raiga Strands University - Latvia
* IMU - Malaysia
* Manipal University - India / Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* China Medical University - China
* Tongji University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* Gomel State Medical University - Belarus
* Vitebsk State Medical University - Belarus

** Conditions Apply

Admission Open for the Year 2016

iCS Study Medicine Abroad

77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்.
107, B-1/1 Galle Road, Colombo 06.
011 4343322 , 021 4926222

Appointments
077 3013060

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months

(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 :02.04.2016
Batch 2 :06.04.2016
Batch 3 :09.04.2016
Batch 4 :11.04.2016

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna Tel :021-2224550

Hotlines
077 036 5728
0777585913, 0777222422, 071429935

வார நாள்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வந்த சொகுசு பஸ்ஸுக்குள் இளைஞர், யுவதிகள் அட்டகாசம்

## வயோதிபர், குழந்தைகள் சிரமம்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் பயணித்த இளைஞர், யுவதிகளின் அட்டகாசம் சகிக்க முடியாத பயணிகள் பொலிஸ் நிலையத்துக்கு பஸ்ஸை விடுமாறு கோரியபோதிலும், சக பயணிகளின் வேண்டுகோளால் பஸ் தொடர்ந்தும் பயணத்தை மேற்கொண்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் சொகுசு பஸ் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து ஆசன முற்பதிவு செய்யப்பட்ட தனியார் சொகுசு பஸ்ஸில் நோயாளர்கள், சிறுகுழந்தைகள் போன்றோரும் பயணம் மேற்கொண்டனர். குறித்த பஸ்ஸில் பயணித்த உயர்கல்வி மாணவர்கள் எனக் கணிக்கப்படுவோர் புத்தளம் வரை அமைதியாக இருந்துள்ளனர். புத்தளத்துக்கு அப்பால் பஸ்ஸின் விளக்குகள் அணைக்கப்பட்டவுடன் அவர்கள் கூக்குரலிட்டு கும்மாளம் போட்டதால் பஸ்ஸில் இருந்த வயோதிபர்கள், குழந்தைகள் நித்திரை செய்ய முடியாத நிலையில் சிரமப்பட்டனர்.

இவர்களின் அட்டகாசம் தாங்க முடியாத சிலர் பஸ் நடத்துநரிடம் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்துக்குப் பஸ்ஸைக் கொண்டு செல்லுமாறும், அங்கு கும்மாளம் அடிப்பவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்போவதாகவும் தெரிவித்துள்ளனர். அவ்வேளையில் அங்கிருந்த ஏனைய பயணிகள், கும்மாளம் அடிப்பவர்கள் தமிழ் பேசும் இளைஞர், யுவதிகள் என்பதாலும், இருட்டான வேளையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால் அவர்களைப் பொலிஸார் இறக்கி விடுவார்கள் எனவும் சமாதானம் செய்து பஸ்ஸைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லாமல் தடுத்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதனால் இடைநடுவில் பஸ்ஸின் விளக்குகள்ளியவிடப்பட்டுதிரைப்படம் ஒளிபரப்பப்பட்டதெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆசன முற்பதிவு செய்து பயணிகளை ஏற்றிவரும் பஸ்களை நடத்துவோர் பதிவின்றி ஏற்றுவோருக்கு நிபந்தனை விதித்து ஏற்றவேண்டும். கொழும்புக்குச் சிகிச்சை நிமித்தம் மற்றும் கடமை நிமித்தம் சென்று திரும்புவோரும், குழந்தைகளுடன் வருவோரும் பயணிப்பதால் பஸ்ஸுக்குள் கும்மாளம் அடிப்பதைத் தடுக்க வேண்டும். இல்லையெனில் அவ்வாறான பஸ்களில் ஆசன முற்பதிவுகளை மேற்கொண்டு நோயாளர்கள் மற்றும் குழந்தைகளுடன் வருவோர் பயணிப்பது குறைவடையலாமெனவும் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் சொகுசு பஸ்களில் பக்திப் படங்கள், சமுதாயம் சார் திரைப் படங்களை ஒளிபரப்புமாறும், பஸ்களில் பல்வேறு வகையான நோயாளர்கள் பயணிப்பதால் சண்டைக்காட்சிகள் நிறைந்த காட்சிகளைக் கொண்ட திரைப் படங்களை ஒளிபரப்புவது பயணிகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாமெனவும் கருத்துத் தெரிவித்தனர். (த-ஐ-9)

**விற்பனைக்கு**
40 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
021 224 2966

**யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு**
யாழ்.சுண்டுக்குளி பாடசாலைக்கு அண்மையில் ஈச்ச மோட்டையில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434

**வீடு விற்பனைக்கு**
நாரந்தனை மத்தி வடக்கில் நான்கு அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
077 956 2755, 075 623 1549

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 செப்டெம்பர் 02, நட்சத்திரம் ரேவதி, 53½ கிரகபாவம் 7இல் சூரியன், செவ்வாய் Development Officer மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள்தேவை.
077 906 2476, 021 221 3763

**IELTS UK KU Education**
MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
0777-302882 (A,G&L) IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய. அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம்.IELTS Life Skills-A1-B1
K.U Education,No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.

**வேலை ஆள்கள் தேவை**
தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கணினிப் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஆள்கள் தேவை. (மானிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பெண்கள் விரும்பத்தக்கது)
077 027 4890

**காணி விற்பனைக்கு**
பண்டத்தரிப்பு கோயிற்பற்று. மாதகலையும் பெரிய விளானையும் இணைக்கும் தாரிடப்பட்டு புனரமைக்கப்பட்ட வீதியில் முன்பு நெற்செய்கை செய்யப்பட்டதும் தற்சமயம் பயன் தரும் பல பனைகளைக் கொண்டதுமான 15 பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு.
077 474 7277 மேபிள்
Eamil: bachellar@gmail.com

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

கடந்த சனிக்கிழமை வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளில் எமக்குக் கிடைத்த பாடசாலை ரீதியான முடிவுகள்.

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**
பூ.துவாரகா 8ஏ,சி, யோ.யசிதா 6ஏ,2பி, செ.லேஜனா 5ஏ,3பி,சி, ந.சாரங்கா 5ஏ, 2பி,சி,எஸ், ச.வான்மதி 4ஏ,3பி, சி,எஸ், ம.கௌதமி 3ஏ,4சி,2எஸ், யோ.பிரியா 3ஏ,பி,சி,3எஸ், வி.சன்சியா 2ஏ,3பி, 2சி,எஸ், இ.விஸ்னுயா 2ஏ, 2பி,4சி,எஸ், கு.தர்மினி 2ஏ,2பி,2சி, 3எஸ், த.பிறேமினி 2ஏ,2பி,2சி,3எஸ், சி.தர்மிகா 2ஏ, 3பி,சி,3எஸ், செ.தர்சிகா 2ஏ, 2பி,4எஸ்.

**யாழ்ப்பாணக் கல்லூரி**
ம.கிரிதரன், சி.நர்த்தனா, சி.அபிநயா ஆகியோருக்கு 9ஏ (ஆங்கிலமொழி மூலம்), ஆ.கஜீபன், பு.சரவணன், கோ.மாதங்கி, கு.சங்கீதா ஆகியோருக்கு 9ஏ (தமிழ்மொழி மூலம்), லோ.ஸ்ரீகர்சன் 8ஏ,பி (ஆங்கிலமொழி மூலம்), மோ.பெடல் கஸ்ரோ 7ஏ,2பி (ஆங்கில மொழி மூலம்), கி.ரீகா 7ஏ,2சி(தமிழ்மொழி மூலம்), ம.விஜிஸ்னராஜ் 6ஏ,3சி (தமிழ் மொழி மூலம்), சா.சரண்யா 5ஏ,3பி,எஸ் (தமிழ்மொழி மூலம்).

**பெரியபுலம் மகா வித்தியாலயம்**
யோ.நிஷாந்தன் 4ஏ,4பி,சி, ந.மஞ்சுதன் 4ஏ,2சி,2எஸ், செ.தனுஷா 2ஏ,2பி,4சி, க.அனிஸ்ரலா 2ஏ,2பி,சி,3எஸ், பி.லிபேக்கா ஏ,4பி,2சி,எஸ், ம.நிகழ்ஜன் ஏ,2பி,4சி,2எஸ், வி.விந்துஜன் ஏ,2பி, 4சி,2எஸ், ம.டிசானுகா ஏ,பி,5சி,2எஸ், செ.டினேஸ்குமார் ஏ,பி,2சி,3எஸ், க.கபில்றாஜ் ஏ,4சி,2எஸ், தி.சுவேகன் ஏ,6சி,எஸ், இ.தனுசிகன் 2பி,4சி,2எஸ், க.ரட்ணாங்கி பி,8சி, சா.சாளினி பி,5சி, 3எஸ், ஜெ.நிலக்ஷன் 2பி,2சி,4எஸ், தி.நிந்துஜா 4சி,4எஸ்.

**விக்ரோறியாக் கல்லூரி**
சூ.சேயோன் 9ஏ, ரா.ஹரன் 9ஏ, தி.நகுல்ராஜ் 8ஏ,சி, வி.கோபிதாஸ் 8ஏ,எஸ், வி.ராகவன் 7ஏ,2பி, சி.கோபிகா 7ஏ,சி, எஸ், த.துஷியந்தி 6ஏ,3பி, ப.கௌரி சங்கர் 6ஏ,2பி,எஸ், க.கஜானி 6ஏ, 2பி, எஸ், து.ஹேமா 6ஏ,2சி,எஸ், செ.யசோதரன் 6ஏ,பி,சி,எஸ், ர.பிரியங்கா 6ஏ,சி,எஸ்.

**புற்றளை மகா வித்தியாலயம்**
ஜ.யூடோ கொன்சிகன் 8ஏ,பி, வ.மதியழகன் 7ஏ,பி,சி, இ.துசேனிகா 7ஏ,பி,சி, இ.கிருத்திகா 4ஏ,4பி,சி, ந.கிருஸ்ணபவானி 3ஏ,4பி,சி,எஸ், செ.தாரகா 3ஏ,பி,3சி,எஸ், நி.நிமணன் 2ஏ,4பி,சி, எஸ், சி.சிலக்ஷன் 2ஏ,2பி,4சி,எஸ், ஜெ.சுகன்யா 2ஏ,2பி,சி,4எஸ், யோ.டிஜிந்தன் ஏ,4பி,சி,3எஸ், ச.கஜீகரன் ஏ,பி, 6சி,எஸ், வி.அரவிந்தன் 2ஏ,3சி,3எஸ், ச.அஸ்வினி ஏ,2பி,2சி,2எஸ், நா.சருஜா ஏ,3சி,5எஸ், க.சஜந்தன் 3பி,5சி,எஸ்.

**காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி**
சு.கஜந்தன் 7ஏ,2சி, தே.றொபின்சியா 6ஏ,2பி,சி, இ.பத்மலோஜன் 5ஏ,3பி,சி, ச.பிரதீபா 5ஏ,2பி,2சி, ச.ரோகினி 4ஏ,4பி,எஸ், மோ.கிர்சிகா 3ஏ,3பி, சி,எஸ், சி.செந்தூரன் 3ஏ,2பி,3சி, சி.சுகந்தன் 3ஏ,பி,4சி, கே.டிசாந்தன் 3ஏ,பி,2சி,2எஸ், சி.நவநீதன் 2ஏ,3பி, 3சி,எஸ், ஸ்ரீ.சிவரஞ்சன் 2ஏ,2பி,சி,3எஸ், சோ.நிரோஜினி 2ஏ,2பி,சி,3எஸ், ப.துவாரகா 2ஏ,பி,3சி,2எஸ்.

**தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை**
சு.கமிலன் 4ஏ,3பி,சி,எஸ், சி.சோபனா 4ஏ,3பி,சி,எஸ், ப.பவியா ஏ,பி,4சி,3எஸ், சு.சியாமளா ஏ,6சி,2எஸ், ம.லிவேஜினி 4ஏ,2பி,சி,எஸ், பி.விக்னேஸ்வரன் 2ஏ,பி,4சி,எஸ், கு.கஸ்தூரி 2ஏ,பி, 3சி,2எஸ், க.ஜீவகரன் ஏ,2பி,2சி,3எஸ், ந.ரேணுஜன் ஏ,3பி,சி,3எஸ், லோ.டிலாஜினி ஏ,4சி,2எஸ், ம.லவேகா ஏ,3சி, 4எஸ், ச.விதுசிகா ஏ,பி,4சி,2எஸ், த.அபர்ணா பி,4சி,3எஸ்.

# 10 வீதிகளின் புனரமைப்புக்கு ரூபா 75.25 மில்லியன் ஒதுக்கீடு

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 10 வீதிகள் வடபிராந்திய வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின்மூலம் புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென வடக்கு மாகாண சபையின் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் இருந்து 75.25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் முரசுமோட்டை கொக்காவில், கரிப்பட்ட முறிப்பு வீதி 5.02 மில்லியன் ரூபா செலவிலும், பன்றிசுட்டான் கண்டாவளை வீதி 5.01 மில்லியன் ரூபா செலவிலும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் வன்னேரிக்குளம் பல்லவராயன்கட்டு 5.45 மில்லியன் ரூபா செல விலும், செம்மன்குண்டு பாலாவி கிராஞ்சி வீதி 7.30 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படும்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் முறிகண்டி அக்கராயன் வன்னேரிக் குளம் வீதி 10.70 மில்லியன் ரூபா செலவிலும், புதுக்குடியிருப்பு கோணாவில் வீதி 5.43 மில்லியன் ரூபா செலவிலும், அக்கராயன்குளம் நல்லூர் வீதி 5.46 மில்லியன் ரூபா செலவிலும், புதுக்குடியிருப்பு இணைப்பு வீதி 5.45 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டத் தில் முல்லைத்தீவு பிரதேச செயலர் பிரிவில் தண்ணீரூற்று குமுழமுனை-அலம்பில் வீதி 16.42 மில்லியன் ரூபா செலவிலும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் குமிழமுனை அக்கராயன் வீதி 9.01 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இவற்றின் புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பமாகி 6 மாதங்களில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-ஐ-173)

**TCT MULTI TRADE CENTRE**
**பதவி வெற்றிடம்**
எமது நிறுவனத்தில் பின்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**01. விற்பனையாளர் :- (ஆண் / பெண்)**
க/பொ/த சாதாரணதரம் பூர்த்தி
* ஆண் :- 18- 35 வயதுக்கு உட்பட்டவர்கள் (தங்கி நின்று வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது)
* பெண்:- 18 - 25 வயதுக்கு உட்பட்டவர்கள் (மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

**02. காசாளர் :- பெண்**
* 18 - 25 வயதுக்கு உட்பட்டவர்கள்
* உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்
* மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**03. பாதுகாப்பு உத்தியோகத்தர் :- ஆண்**
45 வயதுக்கு உட்பட்டவர்கள்

**04. விற்பனை மேற்பார்வையாளர்**
30 -45 வயதுக்குட்பட்டவர்கள்

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
பூரணப்படுத்தப்பட்ட சுயவிவரக் கோவையை 31.03.2016 இற்கு முன் கீழ்காணும் முகவரிக்கு நேரிலோ, தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

General Manager
TCT Multi Trade Centre
No.527, Navalar Road, Nallur, Jaffna.
021 745 1895

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கக்கல் மோதிரத்தை தொலைத்த அமைச்சர் எஸ்.பி

## ரூபா 5 லட்சம் பெறுமதியான அது தேடுதலின் பின்னர் மீட்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 26
ஐந்துலட்சம்ரூபாபெறுமதியான மாணிக்கக் கல் பதிந்த மோதிரத்தை அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்காக தொலைத்து சில மணி நேரத்தில் மீட்டெடுத்துள்ளார். கண்டி லுனுகம என்ற இடத்தில் நிகழ்வு ஒன்றில் அமைச்சர் நேற்று முன்தினம் பங்கேற்றார். இதன்போது தனது மாணிக்கக்கல் பதித்த மோதிரத்தை காணவில்லை என்று அமைச்சர் கூறியதும்- அந்த இடத்தில் பதற்றநிலை தோன்றியது. இதனையடுத்து அனைத்து இடங்களிலும் தேடியபோதும் கிடைக்கவில்லை. அமைச்சர் குறித்த நிகழ்வுக்கு வருவதற்கு முன்னர் உடுநுவர பிரதேச சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அதனடிப்படையில் அங்கு தேடுதல் நடத்தியபோது அந்த வீட்டின் கழிப்பறையிலிருந்து மோதிரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-5)

# மதுபானச்சாலை நடத்தும் எம்.பிக்களின் விவரத்தைக் கோருகின்றார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 26
மதுபானச்சாலை அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிதி அமைச்சர் ரவி கருணநாயக்கவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் மதுபானச்சாலை அனுமதிப் பத்திரங்கள் வைத்திருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.
இது தொடர்பில் கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது மகிந்த சமரசிங்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
நல்லாட்சி அரசு மதுபானச்சாலை அனுமதிப் பத்திரங்களை வழங்கவில்லை. இது குறித்து ஐயமின்றி தகவல்களைத் தெரிந்து கொள்ள அறிக்கை ஒன்று வெளியிடப்படவேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பிலான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி, நிதி அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க இணங்கியுள்ளார். (த-ஜ-5)

# பல்வேறு நெருக்கடிக்குள் வடக்கில் சிங்கள மக்கள்

## பாகுபாடு காட்டுகிறது அரசு என்கிறார் ஞானசார தேரர்

கொழும்பு, மார்ச் 26
வடக்கில் சிங்கள மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ஆனால், அரசு அவர்களுக்கு எந்தவித உதவிகளையும் வழங்காமல் பாகுபாடு காட்டுகின்றது. இவ்வாறு செயற்படாமல் வடக்கு சிங்கள மக்களுக்குச் சகல உதவிகளையும் வழங்கவேண்டும். இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமது சொந்த இன மக்களை எவ்வாறு மதிக்கவேண்டும் என்பதை, தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்களைப் பார்த்து, சிங்கள அரசியல் தலைவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும்.
தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எப்போதுமே தமது இன மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே முயற்சிக்கின்றனர். ஆனால், சிங்கள அரசியல் தலைவர்களோ, தமது இன மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர்.
வடக்கு- கிழக்கில் உள்ள சிங்களக் கிராமங்களின் தேவைகளை இலங்கை அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகின்றது. தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அத்தகைய பிரச்சினைகளை எதிர் கொள்ளவில்லை.
போரினால் இடம்பெயர்ந்த அனைவருக்கும், எந்தப் பாகுபாடுமின்றி, சமமான வசதிகளைச் செய்து கொடுப்பதில், மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், கவனம் செலுத்த வேண்டும்.
அங்குள்ள சிங்கள மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.
அவர்களின் தேவைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-5)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 15 மில்லியன் செலவில் கட்டடம்

பளை,மார்ச் 26
பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைமை அலுவலகம் 15 மில்லியன் ரூபா செலவிலும், இயக்கச்சிப் பொதுச் சந்தை 2 மில்லியன் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.
இவைகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் அண்மையில் பிரதேச சபை செயலாளர் திருமதி மோ.சந்திராதேவி தலைமையில் நடைபெற்றன.
பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு நீண்டகாலமாகத் தலைமை அலுவலகக் கட்டடம் இல்லாததால் புலோப்பளை உப அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.
பளை நகரை அண்டிய பகுதியில் சபைக்கென காணி இல்லாததால் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம், புலோப்பளை உப அலுவலகக் கட்டடத்தில் பொது நூலகம் ஆயுள்வேத மருந்தகம் ஆகியவையும் இயங்கி வருகின்றன.
போர்க் காலத்தில் பிரதேச காணிக்குள்ளிருந்த கட்டடங்கள் அனைத்தும் சேதமடைந்தன. பின்னர் புதிய மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு தளப் பகுதியில் நூலகமும் மாடியில் தலைமையலுவலகம் புலோப்பளை உப அலுவலகம் ஆகியவை சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றன.
இந்த நிலையில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலரின் முயற்சியால் பளை அங்கலிக்கன் திருச்சபைக்கு அருகில் உள்ள அரச காணி பெறப்பட்டு பிரதேச சபையின் தலைமை அலுவகத்துக்கான மாடிக் கட்டடம் அமைக்க அண்மையில் அடிக்கல் நடப்பட்டது.
அத்துடன் போர்க் காலத்தில் முழுமையான சேதம் ஏற்பட்டு பின்னர் பிரதேச சபையினால் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு இயங்கிவரும் இயக்கச்சிப் பொதுச் சந்தைக்கும் புதிய கட்டடம் நிர்மாணிக்க அடிக்கல் நடப்பட்டது.
கிளிநொச்சி பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பிரபாகரன், பளை பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன், பிரதேச சபையின் ஓய்வுநிலை செயலாளர் சி.சிவப்பிரகாசம் உட்பட்பலர் புதியகட்டடங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.
இதேவேளை- புலோப்பளை உப அலுவலகப் பிரிவுக்கான ஆயுள்வேத மருந்தகம் 2 மில்லியன் ரூபா செலவில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், புலோப்பளை உப அலுவலகப் பிரிவில், அதற்கான இடத் தெரிவு நடைபெற்று வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-9)

# ராணுவத் தலைமையகத்தை பாதுகாக்க முடியாத பொன்சேகா

## கோத்தபாய குற்றச்சாட்டு



கொழும்பு,
மார்ச் 26
தனது இராணுவத் தலைமையகத்தைப் பாதுகாக்க முடியாமல்போன இராணுவத் தளபதி பொன்சேகா போரை முடிவுக்குக் கொண்டு வந்தது தாமே என்று கூறுவதை என்னவென்று கூறுவது என்று- முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்குச் சென்று திரும்பும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
இராணுவத் தலைமையகத்துக்குள் நுழைந்து இராணுவத் தளபதி மீது தாக்குதல் நடத்தும் அளவுக்கு பலவீனமடைந்திருந்த பாதுகாப்பைச் சரி செய்ய முடியாமல் போன ஒருவர் தான் இந்த சரத் பொன்சேகா.
போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு விமானப்படை, கடற்படை மற்றும் புலனாய்வுத்துறை போன்ற அமைப்புக்கள் பெரிய பங்களிப்பை வழங்கின. இவற்றை மறந்து எப்படி ஒருவர் மாத்திரம் இதனைச் செய்தார் என்று கூறுவது. 2 ஆயிரம் வாக்குகளைக் கூட பெற முடியாமல் போன ஒருவருக்கு நாடாளுமன்றஉறுப்பினர் பதவியும், அமைச்சும் கிடைக்கப் பெற்றால், இவ்வாறுதான் தங்களுக்கு உதவியவர்களுக்கு விசுவாசத்துக்காக எதையும் கூறுவார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-ஜ-5)

# பொது மலசலகூடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
கல்வியங்காட்டு சந்தை வளாகத்தில் உள்ள பொது மலசலகூடம் உலக வங்கியின் உதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்படுவதாக யாழ்.மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
சந்தை வளாகத்தில் உள்ள மலசலகூடத்தில் பாவனை தற்போது அதிகரித்துள்ளது. அத்துடன் சந்தைக் கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும். இந்தச் சந்தை மக்களைக் கவரும் வகையில் அழகுபடுத்தி புனர்நிர்மாணம் செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அத்துடன் சந்தை வளாகத்தில் உள்ள இந்த மலசல கூடத்தை உலக வங்கியின் உதவியுடன் புனரமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் ஆணையாளர் -தெரிவித்தார். (த-ஜ-17)






**யாழ் மண்ணில் புதிய உதயம்**

ஆண், பெண், சிறுவர்கள் அனைவருக்குமான மனம் கவர்ந்த ஆடைகளைக் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

300/= ரூபாய்க்கு உட்பட்ட தரமாக இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள்.

IZZY Garments
127/5,யுபிலி [illegible]
தொடர்பு : 071 664 7692

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**நடேசு நந்தாவதி**

தோற்றம்
1966.04.02

மறைவு
2015.04.07

திதி: பங்குனி தேய்பிறை திருதியை

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் – எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் – உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

இல.6C, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை மத்தி

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## முதலாம் வருட நினைவலைகள்



திருமதி
**முத்துப்பிள்ளை வல்லிபுரம்**

மண்ணில்
10.04.1928

விண்ணில்
07.04.2015

திதி: அபரபக்க திருதியை -
(26.03.2016)

அன்புடன் எமை வளர்த்து ஆளாக்கி அவனியில் போற்ற வைத்த
எம் அன்புத் தெய்வம் எம்மைப் பிரிந்து
நாள்கள் மாதங்களாகி வருடமொன்று சென்றதுவே
ஓராண்டு என்ன பல ஆண்டுகள் சென்றாலும்
மாறாத உம் நினைவுகளை மனதிலே வரைந்து கொண்டு
தீராத வேதனையில் தினம் தினம் துடிக்கின்றோம்

என்றுமே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளையும் காளியையும் வணங்கித் தொழுது நிற்கின்றோம்.

காளி கோவிலடி,
டச்சு வீதி, சாவகச்சேரி.

(A/22234)(11.18)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
10.11.1930

விண்ணுலகில்
07.04.2015

அமரர் திருமதி **மீனாட்சி செல்லத்துரை**

திதி: அபரபக்க திருதியை (26.03.2016)

அன்புத் தெய்வம் எம்மைப்பிரிந்து
நாள்கள் மாதங்களாகி வருடமொன்று சென்றதம்மா
அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
நல்வழிகாட்டி எம்மையெல்லாம் வழிநடத்தி நற்பெயர்பெற்று
சமூகத்தில் தலைநிமிர்ந்து திகழ்கின்றோம்
உங்கள் அன்பை பாசத்தை உயிர் உள்ளவரை மறவோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக அனுதினமும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.589, கே.கே.எஸ். வீதி,
இணுவில் மத்திய கல்லூரி
ஆரம்ப பாடசாலை அருகில்
இணுவில்.

(70224) (13.18)

தங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## நீங்கா நினைவுகளுடன் மூன்று ஆண்டுகள்

'கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்' - பிலிப்பியர் 1:21

**கிறிஸ்துதாஸ் தேவரத்தினம்
(CHRISTODAS THEVARATNAM)**



அன்னையின்
மடியினில்
02.05.1934

கர்த்தரின்
அடியினில்
26.03.2013

கால வெள்ளத்திலே மூன்றாண்டுகள்
காற்றாய்ப் பறந்திட
கர்த்தரவர் உம்மை அழைத்து
கருணையுடன் இளைப்பாற வைத்தாலும்,

எம் பாசமானது பாரிருக்கும் வரை
எமைவிட்டுப் பிரியாதப்பா!

பாரினிலே சான்றோனாய்
பண்பிலே சிகரமாய்- நல்
பாதையிலே எமை வளர்த்த செம்மலே - அப்பா!
எம் உயிரிருக்கும் வரை
உமை அனுதினமும் நேசிக்கின்றோம்

அப்பா ! கர்த்தரின் அடியினிலே அமைதியாயிருந்து
எமை வழிநடத்துவீர்களாக

அனுதினமும் உங்கள் நினைவுகளுடன்...

பாடசாலை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

(70197) (11.18)

குடும்பத்தினர்.

## பதினோராம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
05.03.1952

மறைவு
26.03.2005

**அமரர் கதிர்காமு சந்திரலிங்கம்**

பதினொரு ஆண்டுகள் நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி
வாழ்வை அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

8/22, கற்குளம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்,
சந்திரலிங்கம் வர்த்தகநிலையம்,
இல.24, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்.
மயூரன்ஸ் நகைமாளிகை,
41, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
மயூரன்ஸ் நகை மாளிகை
95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சந்திரலிங்கம் [illegible]
41, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்


## சைக்கிள் பாதுகாப்பு தரிப்பிடம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்26
யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளத்துக்கு முன்பாக சைக்கிள் பாதுகாப்பு தரிப்பிடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் மின்சார சபை சேவை நிலையக் கட்டடத்துக்கு அருகில் இயங்கி வந்த இந்தத் தரிப்பிடம் முனீஸ்வரன் வீதிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

(த-ஜ-17)

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட எழுவர் கைது

கொழும்பு, மார்ச் 26
பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெசல்கமுவ ஓயா ஆற்றுப்பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஏழு பேரை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது, மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் பலாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.

(இ)

## 75 லட்சம் ரூபாவை கடத்த முயற்சி

கொழும்பு, மார்ச் 26
75 லட்சம் ரூபாவைக் கடத்துவதற்கு முயன்ற இந்தியப் பிரஜையொருவரை கைது செய்துள்ளதாக விமான நிலைய சுங்கப்பிரிவு அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட தொகைப் பண நோட்டுக்களை சென்னைக்குக்கொண்டு செல்வதற்கு முயன்றபோதே, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

1,000 ரூபாத்தாள்கள் அடங்கிய 75 லட்சம் ரூபாவையே அவர் கடத்துவதற்கு முயன்றுள்ளார் என்று சுங்கப் பிரிவு அறிவித்துள்ளது.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அனுமதியில் முறைகேடு; விசாரிக்க குழு அமைக்காதது ஏன்?

## எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சபையில் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாண நகர ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக வழங்கப்பட்ட அனுமதிகளில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் வழங்கிய பதில் திருப்தியில்லை. எனவே இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்த மாகாணசபை உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை அமைக்குமாறு கோரியிருந்தேன். எழுத்து மூலம் கோரிக்கை வழங்கினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கு அமைய அவைத் தலைவரான உங்களிடம் கடிதத்தை கையளித்தும், இதுவரையில் ஏன் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

வடக்கு மாகாண சபையின் 48 ஆவது அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், கடந்த ஆண்டுக்குரிய நிதிக் கூற்றை நான் கோரியிருந்தேன். அது எனக்கு இதுவரையில் கிடைக்கவில்லை. மாகாண சபையின் இணையத் தளத்தில் இருப்பதை வைத்து கேள்வி எழுப்பினால் முதலமைச்சர், இணையத்தளத்தில் வருவதற்குத் தான் பதிலளிக்க முடியாது என்கின்றார். எனவே உத்தியோக பூர்வ நிதிக்கூற்று அறிக்கையை வழங்குமாறு கோரியிருந்தேன். இன்று வரையில் அது வழங்கப்படவில்லை. இது தொடர்பில் பொறுப்பான ஒருவர், எப்போது எனக்குக் கிடைக்கும் என்ற பதிலை வழங்குங்கள்.

இதனை விட நெல்சிப் திட்டத்தில் ஊழல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டு அது தொடர்பில் விசாரணை நடத்த மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவென்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை இங்கு மாகாண சபையில் சமர்ப் பிக்கப்படவில்லை. அதற்கு என்ன நடந்தது ? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவைத் தலைவர், நிதிக் கூற்று அறிக்கையை அடுத்த அமர்வுக்கு முன்னதாக வழங்குவதாகத் தெரிவித்தார். அத்துடன் நெல்சிப் ஊழல் மோசடி தொடர்பிலான அறிக்கை பிரதம செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஆளுநரின் வழிகாட்டலில் பிரதம செய லாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் பரிந்துரையையும் இதனையும் இணைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று குறிப்பிட்டார்.

நடவடிக்கை எடுக்கட்டும். ஆனால் அறிக்கையை இங்கே மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்குங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

மாகாண சபையின் 43 ஆவது அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா, குடாநாட்டில் முதலாம் வகுப்பு மாணவர்களுக்கான அனுமதியை வழங்கும் போது அரசியல் செல்வாக்கே மேலோங்கியுள்ளது. யாழ். பொஸ்கோ ஆரம்பப் பாடசாலை, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை என்பவற்றில் இந்த ஆண்டுக்கான அனுமதியை வழங்கும்போது புள்ளி அடிப்படையான மாணவர் அனுமதிகள் பெறப்பட்டதா? அல்லது அதிகார தலையீடுகள் காணப்பட்டதா? இவ்வாறு அனுமதிகள் வழங்கப்பட்டால் எத்தனை மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். போன்ற கோள்விகளை எழுப்பியிருந்தார்.

இதற்கு பதில்வழங்கிய கல்வி அமைச்சர் த.குருகுலராஜா அனுமதிகளில் முறைகேடுகளும் பரிந்துரைகளும் இடம்பெறவில்லை. யாழ்.பொஸ்கோ ஆரம்பப் பாடசரலையில் 420 விண்ணப்பங்களில் 198 மாணவர்களும், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் 569 விண்ணப்பங்களில் 205 மாணவர்களும், கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலையில் 580 விண்ணப்பங்களில் 144 மாணவர்களும் புள்ளி அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஆனால் எதிர்கட்சித் தலைவர் ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களை உள்வாங்கியதில் அதிகார தலையீடுகளும், பரிந்துரைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தான் அறிவதாகவும் அவற்றுக் கானஆதாரங்களை முன் வைக்கத் தாம் தயார் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

(து-ஐ-5-ரி5)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதாகி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட 18 மீனவர்களும், கடந்த புதன்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் மூவர் உட்பட 21 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போதே அவர்களை எதிர்வரும்7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன் உத்தரவிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதிஇரண்டு விசைப்படகுகளுடன் கைதான புதுக்கோட்டை ஜெகதாப் பட்டினத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள், மார்ச் மாதம் 10 ஆம் திகதி காரைநகருக்குத் தெற்கே ஒரு விசைப்படகுடன் கைதான தமிழ்நாடு இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்கள், மார்ச் மாதம் 12 ஆம் திகதி ஒரு விசைப்படகுடன் கைதான இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 5 மீனவர்களுக்கும், கடந்த புதன்கிழமை புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தில் இருந்து வந்து நெடுந்தீவுக்கு மேற்கே மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதான 3 இந்திய மீனவர்களுமாக 21 மீனவர்களை விளக்கமறியலில் வைக்க பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை இதே குற்றச்சாட்டில் மன்னாரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 44 மீனவர்களுக்கும் மன்னார் நீதிமன்று விளக்கமறியலை நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீனவர்கள் குறித்த குற்றச் சாட்டில் கைது செய்யப்படுகின்ற போதும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று மீனவர் சங்கங்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கின்றன. இதுதவிர, இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழையும்போது இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கட்டாயம் கைது செய்யவேண்டும் என்றும் வடமராட்சியில் மீனவர்கள் முன்னர் போராட்டம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(து-ஐ-4-107)

# பொது இடத்தில் குழப்பம் விளைவித்தோருக்கு மறியல்

சாவகச்சேரி,மார்ச் 26

பொது இடத்தில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் கைதடி மத்தியைச் சேர்ந்த 10 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

கடந்த 15 ஆம் திகதி கைதடி மத்திப் பகுதியில் இடம்பெற்ற சம்பவமென்று தொடர்பாக 10 பேரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் வைத்து பிணையில் விடுவித்து நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று நீதிமன் றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பத்துப் பேரும் தாம் சுற்றவாளிகள் எனத் தெரிவித்ததால் பத்துப் பேரையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, அனுமதிப் பத்திரமின்றி 32 முதிரைமரக் குற்றிகளை ஏற்றி வந்த லொறிச் சாரதியையும் விளக்க மறியலில் வைக்குமாறு நேற்று உத்தரவிடப் பட்டது.

கடந்த 16 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியில் வந்த லொறியைப் பொலிஸார் மறித்துச் சோதனையிட்ட போது 32 முதிரைமரக் குற்றிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து சாரதியைக் கைது செய்ததுடன் லொறி மரக்குற்றிகளுடன் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

புத்தூரைச் சேர்ந்த சாரதி பொலிஸ் பிணையில் விடுவிக் கப்பட்டு நேற்று நீதிமன்றில் வழக்கு நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ற-ஐ-9)

# திருட்டு, கொள்ளையுடன் தொடர்புடையவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 26

திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகத் தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே குறித்த குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர் என்றும், அவர் பல கொள்ளைகளுடன் தொடர்புடையவர் என்றும் கூறப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பன்னாலையில் உள்ள வீடு ஒன்றினுள் இரவு அத்துமீறி நுழைந்து வீட்டுக்குள் திருடியமை மற்றும் அளவெட்டி பகுதியில் வீதியால் சென்ற பெண் ஒருவரின் தங்கச்சங்கிலியை அறுத்த பல்வேறு குற்றச்செயல்களுடன் இவருக்குத் தொடர்பு உள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்,மற்றும் சாவகச்சேரி நீதிமன்றிலும் குறித்த திருட்டுச் சந்தேக நபருக்கு அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளமை தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற வழக்குத் தவணைக்குச் சென்று விட்டுத் திரும்பும் போது, வெளியில் காத்துநின்று அவரைக் கையும் மெய்யுமாகக் கைது செய்ததாகத் தெல்லிப்பழைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(து-வ-4-107)

# வீட்டில் கள் விற்ற இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மதுவரித்திணைக்களச் சட்டத்தை மீறி வீட்டில் வைத்துக் கள் விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மல்லாகம் நீதிமன்று.

மேலதிகமாக வீட்டில் வைத்து கள் விற்ற சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும், அதே குற்றத்தைப் புரிந்து சட்டத்தரணியுடன் மன்றில் முன்னிலையாகத் தவறிய பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த நபருக்கு 3 ஆயிரம் ரூபாவுமாக 4 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டன.

(து-ஐ-4-107)

# பொதுக் கூட்டம்

வடமராட்சி, மார்ச் 26

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அன்னதானப் பணியை மேற்கொண்டு வரும் கந்தன் கருணை அன்னதான மண்டபத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மண்டபத் தலைவர் கதிரமலை நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம் பெறும்.

(ற-ஐ-173)

# கைக்குண்டுடன் கைதான இளைஞன் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் ராசாவின் தோட்டப் பகுதியில் கைக்குண்டுடன் இளைஞர் ஒருவரை நேற்றுமுன்தினம் அதிகாலைதாம் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் அதே பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குற்றத்தடுப்பு இரகசியப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (து-வ-4-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் பண்ணையாளர்களை உதாசீனம் செய்யும் யாழ்கோ

## வடக்கு மாகாண முதலமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்கோ பால் வழங்குநர் சங்கத்துக்குப் பால் வழங்கும் தாம் பல சிரமங்களை எதிர்கொள்வதாகப் பால் வழங்கும் அங்கத்தவர்கள் குற்றஞ்சாட்டி யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் ஊடாக வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எழுத்து மூலமான அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளனர்.

பால் வழங்கும் அங்கத்தவர்களாக யாழ்கோ நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டவர்களாக இருக்கின்ற நிலையிலும், கடந்த மூன்று வருடங்களாக தாம் படும் பல துயரத்தையும், இன்னல்களையும் நிர்வாகத்துக்கு எடுத்துரைத்தும் இதுவரை தமக்கு எவ்வித விமோசனமும் கிட்டவில்லை எனத் தெரிவித்ததுடன் மேலும் பல குற்றச்சாட்டுக்களையும் அவர்கள் முன் வைத்துள்ளனர்.

கடந்த மூன்று வருடக் கணக்கறிக்கை அங்கத்தவர்களாகிய தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை. சங்கத்தின் கிளைக் குழுக் கூட்டம் ஏதும் இடம்பெறவில்லை. மாறாக தமக்கும் பணியாளர்களுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தும் விதமாகச் சில நியாயமற்ற - முறையற்ற நடவடிக்கைகள் தொடர்பாக கடந்தகால நிர்வாகிகளின் மேல் விசாரணை என்று கூறி தட்டிக்கழித்து வருவதுடன், இல்லாத ஒன்றுக்கு மூன்று வருடமாகக் காரணம் கூறி வருகின்றனர் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்கோவில் இருந்து ஏனைய நிறுவனங்கள் பாலை விலை கூட்டி எடுக்கின்றன. எமது பாலை எடுக்கும்போது விலை கூட்டி எடுப்பதில்லை. அந்த நிறுவனங்களை வளர்ப்பதற்கும், தென்னிலங்கை நிறுவனத்தை உயர்த்துவதற்கும் அமைச்சரால் மேற்கொள்ளப்படும் மறைமுகச் செயற்பாடொன்றாகவே தாம் இதனைக் கருதுவதாகவும், இதை தாம் கதைத்தால் தம்மைப் பிறகட்சிக்காரர் என்று ஏளனம் செய்து பழி சூட்டுகின்றார்கள் எனவும், தாம் உண்மையைக் கூறும்போது தவறு செய்பவர்கள் எம்மைக் தூற்றுகின்றனர் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
எமக்குரிய கடன், பால் அல்லது வேறு ஏதும் தேவைக்குச் சென்றால் கையெழுத்துப் பெறுவதற்கு நாம் படும் துன்பமும் துயரமும் சொல்லில் அடங்காது. இவர்களின் செயற்பாட்டால் எமது பொருளாதாரம் சூறையாடப்பட்டுக் கொண்டே வருகின்றது. எமது வளங்கள் யாவும் இராணுவப் பிடியினுள்தான் இன்னமும் உள்ளன. மாடு வளர்ப்புத் தான் எமது வாழ்வாதாரம் எனக் கூறினார்.

> பால் வழங்கும் அங்கத்தவர்களாக யாழ்கோ நிறுவனத்தில் பதிவு செய்யப் பட்டவர்களாக இருக்கின்ற நிலையிலும், கடந்த மூன்று வருடங்களாக தாம் படும் பல துயரத்தையும், இன்னல்களையும் நிர்வாகத் துக்கு எடுத்துரைத்தும் இதுவரை தமக்கு எந்த விமோசனமும் கிட்டவில்லை.

எனவே தற்போதைய தலைவர் மற்றும் சக உறுப்பினர்களை மாற்றம் செய்து, முன்னைய செயற்றிறன் உள்ளவர்களை மீண்டும் நியமியுங்கள். அவர்களால் ஏதும் அலைச்சல் இல்லை. தற்போதுள்ளவர்களால் தொடர் இன்னல் படுகின்றோம். எமது வளம் தற்போதுள்ளவர்களால் சூறையாடப்படுகின்றது என்று பால் வழங்கும் அங்கத்தவர்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பாக யாழ்கோ நிறுவனத்தின் தலைவர் சர்வேஸ்வராவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-
இவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்களில் எந்தவிதமான உண்மைத் தன்மையும் இல்லை. பழைய நிர்வாகத்தின் பிடியில் உள்ளவர்களால் அப்பாவிப் பால் வழங்கும் அங்கத்தவர்களைக் கொண்டு இந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பழைய நிர்வாகம் உரிய சட்ட விதிகளைப் பின்பற்றாமல் பல ஊழல்கள், மோசடிகளில் ஈடுபட்ட நிலையில் தற்பொழுது அவர்களுக்கான விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் புதிய நிர்வாகத்துக்கு எதிராகப் பழைய நிர்வாகத்தினர் விசாரணையைக் குழப்பும் நோக்கில் இப்படியான குற்றச் சாட்டுக்களை முன் வைத்து வருகின்றனர்.

மேலும் கணக்கறிக்கைகள் இன்று வரை காட்டப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன. 2012 ஆம் ஆண்டுக்குரிய கணக்கறிக்கை பழைய நிர்வாகத்துக்குரிய விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இன்னமும் காட்டப்படவில்லை. தலைவர் என்ற ரீதியில் ஏற்கனவே இயக்குநர் சபைத் தீர்மானங்களின் அடிப்படையில் கூட்டங்களைக் கூட்டுமாறு எழுத்து மூலமாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடந்த பொதுச்சபைக் கூட்டத்தில் பாலின் விலையும் 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தில் அரசியல் காழ்ப்புணர்வு ஏதும் இல்லை.

தற்போது உள்ள புதிய நிர்வாகம் யு.என்.டி.பி. நிறுவனத்தால் கடன் வழங்கும் வட்டி வீதத்தைக் குறைத்ததுடன் கடன் வழங்கும் காலப் பகுதியும் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய வங்கிகளிலும் பால் வழங்கும் அங்கத்தவர்கள் கடன் எடுப்பதற்குரிய வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. மற்றும் பால் வழங்கும் அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தையும், இறப்பு சகாயத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்வாறு இருக்கும் நிலையில் இவர்களின் குற்றச்சாட்டுக்கள் பழைய நிர்வாகத்தின் பிடியில் இருக்கும் சிலரால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என அவர் தெரிவித்தார். (த-ஐ-4-ரி)

## மாடு திருடிய தென்னிலங்கை வாசி கிராம இளைஞர்களிடம் சிக்கினார்

கிளிநொச்சி திருவையாற்றுப் பிரதேசத்தில் அதிகாலை வீடு புகுந்து மாடு திருட முயன்றவேளையில் வீட்டார் விழித்துக் கொண்டதனால் உடைமைகளைக் கை விட்டுத் தப்பியோடிய திருடன் கிராம இளைஞர்களின் முயற்சியால் பிடிபட்டார்.

தென்னிலங்கையைச் சேர்ந்த குறித்த நபர் கிளிநொச்சி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, திருவையாற்றுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை சுமார் 12.30 மணியளவில் வீட்டு வளவுக்குள் பாதுகாப்பாக கட்டி வளர்க்கப்பட்ட ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பால் மாட்டைக் குறித்த நபர் திருட முற்பட்டவேளையில், வீட்டார் விழித்துக் கொண்டமையால் மாட்டைக் கைவிட்டு ஓடும் போது தனது அலைபேசியையும் தவறவிட்டு ஓடித் தப்பியிருந்தார்.

இவ்வாறு திருடன் கைவிட்டுச் சென்ற அலைபேசியில் இருந்த இலக்கங்களைப் பரிசீலித்த இளைஞர்கள், பாவனையில் உள்ள இலக்கங்களுக்கான பெயர்கள் அனைத்தும் சிங்களத்திலேயே காணப்பட்டதால் சிங்களத்தில் உரையாடிக் குறித்த அலைபேசியின் உரிமையாளரை இனம் கண்டனர்.

அதன் பின்பு திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர் தங்கியிருந்த இடத்தை அடையாளம் கண்டு கொண்டனர். அங்கு உள்ள ஒருவரின் உதவியுடன் குறித்த திருட்டு முயற்சியில் ஈடுபட்ட தென்னிலங்கை வாசியைக் கண்டுபிடித்தனர்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவர் கிளிநொச்சிப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். இவரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தான் மாடு திருடவரவில்லையெனவும் தேங்காய் திருடவே வந்ததாகவும் கூறியுள்ளார். (த-ஐ-4-101)

## குருதித்தான முகாம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் குருதித்தான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. முளாய் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (த-ஐ-ரி5)

# கேப்பாப்பிலவு வீதியை திறந்துவிட வேண்டும்

## பாதுகாப்பு அமைச்சுக்கு அரச அதிபர் கடிதம்

முல்லைத்தீவு, மார்ச் 26
முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிரதேச மக்களின் அத்தியாவசிய பாவனையிலுள்ள வீதியான புதுக்குடியிருப்பு-கேப்பாப்பிலவு வீதியை மக்கள் நலன் கருதி புனரமைப்புச் செய்ய அனுமதிக்குமாறு கோரி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

வீதியைப் புனரமைக்க நிதி ஒதுக்கப்பட்டு நிதி கிடைத்த போதும் இராணுவத்தினரின் அனுமதி மறுப்பினால் அங்குள்ள ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வற்றாப்பளை கேப்பாபிலவு - புதுக்குடியிருப்பு வீதி புனரமைப்பில் கேப்பாப்பிலவு இராணுவ முகாம்களினூடாகச் செல்லும் நிரந்தர வீதியைப் புனரமைப்பதற்கு இராணுவம் அனுமதி மறுத்துள்ளது. இதற்கு வற்றாப்பளை, கேப்பாப்பிலவு சமூக மட்ட அமைப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இது பற்றி தெரியவருவதாவது:
ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெருந்தொகை நிதி ஒதுக்கீட்டில் வற்றாப்பளை கேப்பாபிலவு-புதுக்குடியிருப்பு வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனை முன்னெடுக்கும் திணைக்கள அதிகாரிகளால் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தலைமையில் வற்றாப்பளை, கேப்பாபிலவு சமூக மட்ட அமைப்பினருடனான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதில் தம்மால் முன்னெடுக்கப்படும் வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்குச் சமூக மட்ட அமைப்பினரின் பூரண ஒத்துழைப்புக் கோரப்பட்டது. தாம் கேப்பாப்பிலவு இராணுவ முகாம்களினூடாகச் செல்லும் குறுகிய தூரம் கொண்ட நிரந்தர வீதியையே புனரமைப்புச் செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதும், படைத்தரப்பினர் இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது பொதுமக்களின் பாவனைக்காக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக வீதியையே நிரந்தர வீதியாக புனரமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். இதற்குச் சமூக மட்ட அமைப்பினர் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன் அந்தத் தற்காலிக வீதியானது பாதுகாப்பற்றது என்பதனையும் எடுத்துக் கூறினர். இதற்குப் பதிலளித்த அதிகாரிகள் மக்களின் கருத்தை தமது மேலதிகாரிகளுக்கு அறிக்கையிடுவதாகக் கூறிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-
வீதி தொடர்பில் குறித்த பிரதேச மக்கள் சார்பில் பல கோரிக்கைகளும் விடுக்கப்பட்டிருந்தன. இவற்றை நாம் உரிய தரப்புக்கு அனுப்பி வைத்திருந்தோம். எனினும் தற்போது குறித்த வீதிப் புனரமைப்புக்காக ஒரு தொகைப் பணம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் பிரகாரம் மேற்படி வீதியின் மக்களின் பாவனையில் உள்ள பகுதி வீதிப் புனரமைப்பை ஆரம்பித்துள்ளோம்.

அதேபோல் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு கிலோ மீற்றர் வரையிலான வீதியையும் மக்கள் பாவனைக்கோ அல்லது முதல் கட்டமாக உடனடியாக மக்களின் போக்குவரத்துக்காக மட்டும் என்ற அடிப்படையிலாவது குறித்த வீதியைத் திறக்குமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளோம்.

அவ்வாறு திறக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உடனடியாக வீதியைப் புனரமைத்து மக்கள் பாவனைக்காக கையளிக்கத் தயாராகவேயுள்ளோம். ஏனெனில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் வீதியே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் மக்கள் 5 கிலோமீற்றர் மேலதிகமாக சுற்றிப் பயணிப்பதாக எமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வகையில் இதற்கான பதிலையும் எதிர்பார்த்திருக்கின்றோம் - என்றார். (த-ஐ-4-101-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதியானோருக்கு மட்டுமே வீட்டுத்திட்டம் வழங்கப்படும்

## அரசியல்வாதிகளின் பரிந்துரைகளை ஏற்கோம் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,மார்ச் 26
வீட்டுத் திட்டங்கள் எந்த அரசியல்வாதியினதும் பரிந்துரையின் பேரிலன்றி, அமைச்சின் சட்டத்துக்கு உட்பட்ட தகுதியானவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறவுள்ள வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் குடாநாட்டின் அரசியல்வாதிகள் சிலர் தமது அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுவது குறித்துக் கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான முறைப்பாடுகள் எமது கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளன. இருப்பினும் மக்கள் எந்த அரசியல்வாதிகளை நாடினாலும், பட்டியல் இறுதி செய்யும் பொறுப்பு மாவட்டச் செயலகத்தையே சாரும்.

அந்த வகையில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் தகுதியின் அடிப்படையில் மட்டுமே தெரிவுகள் இடம்பெறும். எந்தக் காரணம் கொண்டும் அரசியல்வாதிகளின் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.



அதனால் அரசியல்வாதிகளிடம் பதிவுகளை மேற் கொண்டு காத்திருக்காது, கிராம சேவகரின் ஊடாகப் பிரதேச செயலகங்களுக்கு உங்கள் விண்ணப்பங்களைக் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்ப வேண்டும்.

அவ்வாறு கிடைக்கும் விண்ணப்பங்கள் கூட இந்த முறை பகிரங்கப்படுத்தப்பட்ட பின்பே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். முறைகேடான அல்லது தகுதியற்ற விண்ணப்பங்கள் தொடர்பில் பகிரங்கப்படுத்துவது தொடர்பிலும் ஆராய்கின்றோம்.

மேலும், கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டம் தொடர் பிலும் ஒரு சில அரசியல்வாதிகள் தங்களது தனிப்பட்ட பணியாளர்களை அனுப்பி கிராமத்தில் உள்ள பொது அமைப்புக்களிடம் விவரம் கோருவதாகவும் முறையிடப்படுகின்றது. குறித்த திட்டமானது முழுக்க முழுக்க மக்கள் சார்ந்த திட்டம். இந்தத் திட்டத்தில் அரசியல்வாதிகள் தலையிட முடியாது. மக்களின் கருத்தே இறுதியானது.

அரசியல்வாதிகளுக்கு உரிய நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை ஒதுக்கீடுகளை எவ்வாறு அரச திணைக்களங்கள் கட்டுப்படுத்த முடியாதோ, அதே போல் இந்த நிதியானது மக்கள் திட்டத்துக்குரியது என்ற வகையில் அரசியல்வாதிகள் மக்கள் நலன் சார்ந்த கண்காணிப்பை மட்டுமே மேற்கொள்ள முடியும்.

இதனால் ஒரு சில அரசியல்வாதிகளின் சுயநலத் துக்கான திட்டமாக மாறிவிடும் என்று அச்சப்படத் தேவையில்லை. அதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். -என்றார். (த-ஐ-101)

> அரசியல்வாதிகளுக்கு உரிய நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை ஒதுக்கீடுகளை எவ்வாறு அரச திணைக்களங்கள் கட்டுப்படுத்த முடியாதோ, அதே போல் இந்த நிதியானது மக்கள் திட்டத் துக்குரியது என்ற வகையில் அரசியல்வாதிகள் மக்கள் நலன் சார்ந்த கண்காணிப்பை மட் டுமே மேற்கொள்ள முடியும்.

## உயிர்ப்பு ஞாயிறை முன்னிட்டு விளையாட்டுப் போட்டி நாளை

கொழும்புத்துறை, மார்ச் 26
உயிர்ப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய இளையோர் அமைப்பினால் நடத்தப்படும் இளைஞர் எதிர் குடும்பஸ்தர்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியும், விளையாட்டுப் போட்டிகளும் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 53 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்தப் போட்டிகளில் முற்பகல் 9 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டியை பங்குத்தந்தை அருட்திரு.ஏ.கிறிஸ்தோப்பர் அடிகள் ஆரம்பித்து வைக்க, தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளும், மாலை 2 மணிக்கு துடுப்பாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளதாக இளையோர் ஒன்றியத் தலைவர் ஜோ.ஜெனஸ் கனேஜின் தெரிவித்தார். (த-ஐ-135)

## குடிதண்ணீர் விநியோகம் சீராகியது

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தால் வழங்கப்படும் குடிதண்ணீர் விநியோகம் சீராக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் விநியோகத்தைச் சீராக்கும் பொருட்டு புதிதாக மோட்டர் இயந்திரங்கள் தருவிக்கப்பட்டுப் பொருத்தப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மற்றும் கோண்டாவிலில் உள்ள நன்னீர் கிணறுகள் பகுதியில் புதிதாக எடுத்து வரப்பட்ட மோட்டர் இயந்திரங்கள் மேலதிகமாகப் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த மோட்டர் இயந்திரப் பம்பிகள் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளதால் குடிதண்ணீர் விநியோகத்தில் இடைஞ்சல் தாமதம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று குடிதண்ணீர் விநியோகப் பிரிவினர் தெரிவித்தனர்.

அண்மையில் திருநெல்வேலியில் உள்ள மோட்டர் இயந்திரம் ஒன்று பழுதடைந்ததால் மாநகராட்சி மன்றப் பகுதியில் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இந்த மோட்டர் இயந்திரம் பின்னர் திருத்தியமைக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் சீராக்கப்பட்டது. தற்போது புதிதாக மோட்டர் இயந்திரங்கள் மேலதிகமாகப் பொருத்தப்பட்டுள்ளதால் குடிதண்ணீர் விநியோகம் முழுமையாகச் சீரடைந்துள்ளது. (த-ஐ-17)

## யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் ஏப்ரல் மாதம் புதிய கட்டடத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச் 26
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கெனப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதி எதிர்வரும் 6 ஆம் திகதி சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்கவால் திறந்து வைக்கப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்வர். 294 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் குறித்த புதிய கட்டடத்துக்கான அடிக்கல் 2012 ஆம் ஆண்டு ஜனவரியில் நாட்டப்பட்டு கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வரும் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் எதிர்வரும் 14 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ள நிலையில், அவர் கலந்து கொள்ள இருக்கும் கடைசி பொலிஸ் நிலையத் திறப்பு விழாவாக இது இருக்கலாம் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் முதல் விடுமுறையில் சென்றிருக்கும் பொலிஸ்மா அதிபர் எதிர்வரும் 30 ஆம் திகதி பணிக்குத் திரும்புகிறார். அவர் ஏப்ரல் 14 ஆம் திகதி வரை பொலிஸ்மா அதிபராகப் பதவி வகிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 1927 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ். பொலிஸ் நிலையம், துரையப்பா விளையாட்டரங்குக்கு அருகில் இயங்கி வந்த நிலையில், 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

அதன் பின்னர் யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் தற்காலிகத் தனியார் கட்டடத்தில் இயங்கி வந்த பொலிஸ் நிலையம், புதிய கட்டடத்தில் எதிர்வரும் ஆறாம் திகதியில் இருந்து இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-4-109)

## பொலிஸாரைக் கண்டதும் தப்பினார் கஞ்சா விற்றவர்

8 கிலோ கேரளாக் கஞ்சாவை விற்பனைக்குக் கொண்டு சென்றவர், பொலிஸாரைக் கண்டதும் கஞ்சாப் பொதியைத் தூக்கி எறிந்து விட்டுத் தப்பியோடியுள்ளார். அதனால் அவரைப் பிடிக்க முடியவில்லை என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.கோப்பாய் இராச வீதிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், குறித்த நபரைக் கைது செய்வதற்காக, பொலிஸார் கோப்பாய் மத்திய பகுதிக்குச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த நபர் வீதியில் பொலிஸார் நிற்பதைக் கண்டதும், தான் கொண்டு வந்த 8 கிலோ கஞ்சாப் பொதியை வீதியில் எறிந்து விட்டு தப்பி ஓடிச் சென்று விட்டார். குறித்த நபர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ஐ-4,106)

## மாவட்டச் செயலகங்களில் விவரம் கோருகின்றனர் புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 26
நல்லாட்சி அரசிலும் மாவட்டச் செயலகங்களில், விவரங்களை இரகசியமான முறையில் பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வாளர்கள் கோரி நிற்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் இந்த நடவடிக்கை தற்போதும் தொடர்வதுடன், யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் சென்ற ஒருவர், தான் ஓர் இரகசியப் புலனாய்வாளர் எனவும், மாவட்டச் செயலகத்துக்கு வருகை தரும் சர்வதேச, மற்றும் உள்ளூர் முக்கியஸ்தர்கள், அரசியல்வாதிகளின் விவரங்களைத் தனியே சமர்ப்பிக்குமாறும் கோரியுள்ளார்.

இவ்வாறு தற்போதும் புலனாய்வாளர்கள் விவரம் கோருவதுடன், மாவட்டச் செயலகத்துக்குள்ளும் தலையிடுவதாகக் கூறப்படுவது தொடர்பில் மாவட்ட அரச அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த சம்பவம் தொடர்பில் மேற்படி உத்தியோகத்தர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். குறித்த நபர் இனம் காணப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்டச் செயலகம் என்பதும் ஓர் அரச செயலகம் தான். எனவே எமது அமைச்சின் ஊடாக உரிய நடவடிக்கைகள் இடம்பெறும் எனத் தெரிவித்தார். (த-ஐ-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் குறைபாடுகளைமுறையிடவும்

## கூட்டமைப்பிடம் கூறியது அரசு



கொழும்பு, மார்ச் 26

வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம்வீடுகளை அமைக்கும் அரசின் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை எழுத்து மூலம் பிரதமரிடம் முறையிடுமாறு எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அமைச்சர் நவீன் திஸாநாயக்க கேட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரண்டாவது நாளாக இடம்பெற்ற பிரதமரின் உரை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு – கிழக்கில் அரசால் நிர்மாணிக்கப்படுகின்ற 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பதாகச் குறிப்பிட்டார்.

இதன்போது குறுக்கீடு செய்து அரசின் சார்பில் கருத்தொன்றை முன்வைத்த பெருந்தோட்டக் கைத்தொழிற்றுறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க, இந்த விடயம் தொடர்பில் கட்சியின் சார்பில் பிரதமருக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள் – என்றார். (த-ஜ-5)

# பண்பாடான எதிர்காலச் சந்ததியை பாடசாலைகள் உருவாக்கவேண்டும்

## ஜனாதிபதி மைத்திரிபால கோரிக்கை



கொழும்பு,மார்ச் 26

பிள்ளைகளதும், தாய்மார்களதும் உயிர்களுக்கு விலை பேசும் மிரு கத்தனமான மனிதர்கள் வாழும் ஒரு சமூகத்தில் பண்பாடுள்ள எதிர்காலச் சந்ததியி னரை உருவாக்குவதில் பாடசாலை கள் முன் னின்று செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

கேகாலை, புனித ஜோசப் மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்,

பௌதீக வளங் களைக் கொண்டு நாடு எவ்வளவு தான் அபிவிருத்தி அடைந்தாலும், அங்குவாழ்கின்ற மனிதர்கள் பண்பாடற்றவர்களாக இருக்குமிடத்து ஏற்படுகின்ற அபிவிருத்தியில் எந்த வித மான பயனையும் அடைய முடியாது. நாட்டின் இலவசக் கல்வியைப் பலப்படுத்துவதற்கு அரசு தற்போது நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். அத்துடன் தொழிற் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ஆகியவற்றின் அபிவிருத்திக்காக தேசிய மட்டத்தில் பல கல்வி நிறுவனங்களை இந்த ஆண்டில் ஆரம்பிக்க இருக்கிறோம்.

இன்று எமது தேசிய பொருளாதாரத்துக்கு அதிகபட்ச பங்களிப்பையும், ஆகக் கூடிய அந்நியச் செலாவணியையும் பெண்களே ஈட்டித் தருகின்றனர். பொருளாதார அபிவிருத்திக்காக மனித வளத்தை அபிவிருத்தி செய்து நாட்டின் தொழிற் படையை பயிற்றப்பட்ட தொழிற் படையாக மாற்றியமைப்பதும் அரசின் நோக்கமாகவுள்ளது.-என்றார். (ஜ-4,ரி2)

# ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, மார்ச் 26

அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி உரையாற்றும்போதே மகிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி ஆணைக் குழுவின் அறிக்கை யைச் சபையில் சமர்ப்பிப்பேன் என்று கூறியிருந்தேன். அதன் பிரகாரம் அதைச் சமர்ப்பிக்கின்றேன். அத்துடன், மற்றுமொரு விடயத்தையும் கூற விரும் புகின்றேன்.காணி அமைச்சரிடம் எழுப்பட்ட கேள்விகளுக்கு அதன் செயலாளர் பதில் வழங்கியிருந்தார். ஆனால், அந்தப் பதிலை விடுத்து, அதற்கு முர ணான வகையில் தகவல்களைக் காணி அமைச்சர் இந்தச் சபையில் வெளியிட்டு நாடாளுமன்றத்தைத் தவறாக வழி நடத்தியுள்ளார். இதனால், அவர் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. ஆகவே, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் – என்றார்.

நாவலப்பிட்டி தேர்தல் ஆளுகைப் பிரதேசத்தில், பஸ்பாகே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இம்புல்பிட்டிவத்த காணியில், காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவினது அங்கீகாரத்தின் கீழ் சட்டரீதியான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆசிரியர் கிராமத்தை அகற்றி, காணியைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்று கடந்த புதன்கிழமை சபையில் காணி அமைச்சரிடம் மகிந் தானந்த கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு அமைச்சர் பதிலளித்த போது இரு வருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ஜ-5)

# நாடாளுமன்றுக்கு ஒரே நாளில் 7 ஆயிரம் மாணவர்கள்

கொழும்பு, மார்ச் 26

நாடாளுமன்றத்துக்கு ஒரேநாளில், மாணவ, மாணவிகள் 7 ஆயிரம் பேர் வருகைதந்தனர் என்று படைக்கல சேவிதர் திணைக்களம் அறிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள 40 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளே நாடாளுமன்றத்துக்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை சென்றிருந்தனர்.பாடசாலை மாணவர்களுக்கு மேலதிகமாக, நாடாளுமன்றத்தை பார்வையிடுவதற்கு பொதுமக்கள், ஆயிரம் பேரும் சென்றுள்ளனர். நாடாளுமன்றம், நேற்று முன் தினம் காலை 9.30 மணிக்கு கூடி, இரவு 7.30 மணிக்கு நிறைவடைந்தது. காலை முதல் இரவு வரையிலும், மக்கள் கலரி நிரம்பியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்து வீட்டில் வெடிப்பு

## ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டினார் சுமந்திரன் எம்.பி

கொழும்பு, மார்ச் 26

மீள்குடியேற்ற அமைச்சால் அமைக்கப்பட்டுள்ள பொருத்து வீட்டில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இது தொடர்பிலான ஒளிப்படங்களையும் நாடாளுமன்றத்தின் சபாபீடத்தில் சமர்ப்பித்தார்.


நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டு ஆதாரங்களை நாடாளுமன்றத்தில்சமர்ப் பித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை அரசு நிர்மாணிக்கின்றது. ஆனால், இங்கு ஒரு லட்சத்து 37 ஆயிரம் வீடுகள் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மக்களுக்காக இந்திய அரசு 50 ஆயிரம் வீடுகளை வழங்கியுள்ளது. இந்த நிலையில், இலங்கை அரசின் பங்கு என்ன என்று நாம் கேட்டோம். அதற்கமைய 65 ஆயிரம் வீடுகளைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்கிறது.

இந்திய வீட்டுத் திட்டத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற வீடொன்றுக்காக 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது. ஆனால், அரசின் 65 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்தில் ஒரு வீட்டை நிர்மாணிக்க 21 லட்ச ரூபா செலவிடப்படுகிறது. இது இந்திய வீட்டின் மதிப்பீட்டைவிட 3 மடங்கு தொகையாகும்.

வடக்கு - கிழக்குக்கு ஒரு லட்சத்து 37 ஆயிரம் வீடுகள் தேவையாக உள்ளன. இந்த நிலையில், ஒரு வீட்டை அமைக்கும் செலவில் 2 வீடுகளை அமைக்க முடியும். கல் வீடுகள் இரண்டு மூன்று சந்ததிக்கு நிலைத்திருக்கும். யாழ்ப்பாணத்தில் எனது பாட்டனார் காலத்தில் கட்டப்பட்ட எமது கல் வீடு இன்றும் உள்ளது. நான் அந்த வீட்டில்தான் தற்போதும் வசிக்கின்றேன்.

இந்த நிலையில், நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகள் குறித்து நாம் பார்க்கவேண்டும். இது தொடர்பில் பலர் கருத்துகளை வெளியிட்டிருந்தனர். இதனால் அந்த வீடுகளை நான் கடந்த செவ்வாய்க்கிழமை நேரில் சென்று பார்வையிட்டேன்.



அந்த வீடுகளை ஒளிப்படமும் எடுத்துள்ளேன். இந்த வீடுகளில் இடைவெளிகள் காணப்படுகின்றன. உடையும் நிலையும் இருக்கின்றது. அது தொடர்பான ஒளிப்படங்களை நான் இந்தச் சபையில் சமர்ப்பிக்கின்றேன். இதில் பயன்படுத்தியுள்ள சில பொருள்களைஅசைத்துப் பார்க்கும்போது அசைகின்றன. சூட்டைத் தணிப்பதாகக் கூறப்படுகின்றபோதும், அவை முழுமையாக இடியக்கூடும்.

எமதுமக்களுக்குஅரசு 65ஆயிரம்வீடுகளை இலவசமாக வழங்குகின்றதற்கு நாம் நன்றி கூறுகின்றோம். அதை நாம் எதிர்க்கவில்லை ஆனால் வீடுகள்வழங்கப்படுகின்றது என்பதற்காக அதிலுள்ள குறைபாடுகளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

வீடுகள்பெற்றுக்கொண்டவர்கள் சந்தோசமடைகின்றனர். தளபாடங் கள் வழங்கப்பட் டுள்ளன. ஆனால், வீட்டை நிர்மாணிக்க பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருளை இங்கு வாங்க முடியாது. இதேவேளை – வீடுகளின் பெறுமதி தகுதியானதா என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்த வீடுகள் 5 ஆண்டுகள் கூட நிலைக்குமா என்று தெரியவில்லை என பொறியியலாளர்கள் கூறுகின்றனர்.

65 ஆயிரம் வீடுகள் கட்டப்படுகின்றன என்றால், அவை நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். எனவே, அரசு இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இந்த வீட்டுத் திட்டத்துக்கான கேள்விமனுக் கோரலிலும் பிரச்சினை இருக்கின்றது. அது தெரிந்த விடயம். அதனால் அதை நான் அதைப் பதிவு செய்ய விரும்பவில்லை.

பல உருக்கு உற்பத்தி நிறுவனங்கள்தமதுகழிவுகளைவெளியேற்ற இடங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றன. அதற்குநீங்கள் இடமளிக்கப் போகின்றீர்களா ? நிர்மாணிக்கப்படுகின்ற வீட்டுக்கு தளபாடங்களும் வழங்கப்படுகின்றன. எமது தேவை அதுவல்ல. ஒரு வீடு தான் எமக் குத்தேவை. அது நீண்டகால பயன்பாட்டுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். எனவே, நீங்கள் உங்கள்நிலைகுறித்துமீளாய்வுசெய்ய வேண்டும் - என்றார். (த-ஐ-5)

# பொருத்து வீட்டின் மதிப்பீடு 21 லட்சமாக உயர்ந்தது ஏன்?

## நாடாளுமன்றில் அநுரகுமார கேள்வி

கொழும்பு, மார்ச் 26

மீள்குடியேற்ற அமைச்சின் பொருத்துவீடுநிர்மாணிப்பதற்கு ஆரம்பத்தில் 12 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் 21 லட்சமாக அதனை அதிகரித்தது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்கா, இந்த வீட்டுத் திட்டத்தை எதிர்க்கின்ற அரச அதிகாரிகளை இட மாற்றம் செய்யவும் அமைச்சு முற்படுவதாக நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீள்குடியேற்றஅமைச்சுத்தொடர்பில் விசேட கூற்று ஒன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அகதிகளை வடக்கு - கிழக்குப் பகுதி களில் மீள்குடியமர்த்துவதற்காக 65ஆயிரம்வீடுகளை அமைக்கும் திட்டத்துக்காக நீண்டகால வெளி நாட்டுக் கடன் பெறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்காக வெளிப்படையான விலை மனுக் கோரல் கோரப்பட்ட போதும், தேர்வுப் பணிகள் மற்றும் ஒதுக்கீட்டு நடவடிக் கைகள் இரகசியமாகவும், வெளிப்படைத் தன்மையற்ற முறையிலும் இடம்பெற்றுள்ளன. இதனூடாக பெரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீடொன்றைக் கட்டுவதற்கான செலவாக 12 லட்சம் ரூபா முதலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும் இந்தத் தொகை 21 லட்சமாக பின்னர் அதிகரிக்கப்பட்டிருந்தது.

இந்திய வீட்டுத்திட்டத்தில் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியில் நிர்மாணிக்கப்படுகின்ற வீடொன்றுக்காக 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் செலவிடப்படுகின்ற நிலையில், இந்தத் திட்டத்தில் வீடொன்றுக்கான செலவுச் சந்தேகத்துக்குரியதாயுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படும் அதிகாரிகளை இடமாற்றுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிய முடிகின்றது. எனவே, இந்தப் பின்னணியில் எழுந்துள்ள கேள்விகளுக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சரிட மிருந்து பதிலை எதிர்பார்க்கின்றேன்.

வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்துக்காக முறையான ஒதுக்கீட்டு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டனவா? வீடொன்றை நிர்மாணிப்பதற்காக முதலில் குறிப்பிடப்பட்ட 12 லட்சம் ரூபா, 21 லட்சமாக அதிகரிப்பதற்கான காரணம் என்ன ? இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் மோசடி இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியுமா ? என்று கேள்விகளை எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சுவாமிநாதன் இதில் எந்தவொரு மோசடிகளும் இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டார். (த-ஐ-5)

# பொருத்து வீட்டமைப்புக்கு பொதுமக்களிடம் வரவேற்பு

## சொல்கிறார் அமைச்சர் சுவாமிநாதன்



கொழும்பு, மார்ச் 26

எமது பொருத்து வீட்டுத் திட்டம் தொடர்பில் பொது மக்களிடமிருந்து சிறப்பான கருத்துக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ள அமைச்சர் சுவாமிநாதன், இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு தளபாடங்கள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவே 9 லட்சம் ரூபா அதிகமாக செலவாகின்றது என்று குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் அநுரகுமார திஸாநாயக்காக எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் தொடர்பிலும் சில தவறான கருத்துகள் வெளியிடப்படுகின்றன.

இந்த வீட்டுத்திட்டத்துக்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டது. திட்டத்துக்கான கேள்வி மனு பத்திரத்துக்குப் பல நிறுவனங்கள் முன்மொழிவுகளை முன்வைத்திருந்த போதும், உறுதியான நிதியிடல் வசதிகளைப் பெரும்பாலானவை வெளியிடவில்லை. எனவேதான் உறுதியான நிதியிடல் வசதியுள்ள நிறுவனத்தை நாம் தெரிவு செய்து வழங்கினோம்.

வீடொன்றுக்கு வைபை வசதி, குழாய்க் கிணறு, தளபாடங்கள் முதலான பொது வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்தத் தொகை (12 லட்சத்திலிருந்து 21 லட்சமாக) அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை அதிகரிக்கப்பட்டதன் ஊடாக அந்தப் பயனாளிகளுக்கு நாம் மேலதிக வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்.

மேலும், இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இதற்கமைய இரண்டு மாதிரி வீடுகள் பொதுமக்களினூடாக பரிசீலிக்கப்பட்டன. இதுவரை மக்களிடமிருந்து சாதகமான கருத்துகளே கிடைத்துள்ளன. மேலும், ஜனாதிபதியும் இந்த வீடுகளைப் பரிசீலித்துள்ளார்.

இந்த வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவானது, நலன்புரி நிலையங்களில் வாழ்வோர், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், விசேட தேவையுடையோரின் குடும்பங்கள், காணாமற்போனோரின் குடும்பங்கள், வதிவிடங்களை இழந்து வாழும் குடும்பங்கள் என்ற அடிப்படையில் இடம்பெறுகின்றது.

மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களும் ஆராயப்பட்டே இந்தத் திட்டத்துக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நிலையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதை ஏற்க முடியாது - என்றார். (ஐ-5)

# நாட்டில் ஒரு லட்சம் மக்கள் தொழில் இழப்பர்

நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. விரைவில் ஒரு லட்சம் பேர் தொழில்களை இழக்கும் ஆபத்து ஏற்படும் என்று மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம்வியாழக்கிழமை இரண்டாவது நாளாக இடம் பெற்ற பிரதமரின் பொருளாதார உரை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டுஉரையாற்றியபோதுமேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ரூபாவின் மதிப்பு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்கிறது. நிதி நெருக்கடி தலை தூக்கியுள்ளது. அரசு முன் வைத்த வரவு - செலவுத் திட்டத்துக்கு மேலதிகமாக இன்னுமொருபுதிய வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்க அரசு முயற்சிகளை முன்னெடுக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்திடமும், அமெரிக்காவிடமும் மண்டியிட்டு பிச்சை கேட்கும் நிலைக்கு அரசு வீழ்ச்சி கண்டுள்ளது. இந்த அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் கண்காட்சியாக மாறியுள்ளன.

பொருளாதாரம் தொடர்பில் மாயாஜாலம் காட்டப்படுகிறது. அரச வங்கிகளை தனியார் மயமாக்கி, அரசநிறுவனங்களையும் தனியார் மயமாக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அரசு அடிபணிந்துள்ளது -என்றார் (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் மனங்களை நெருடும் நல்லாட்சி அரசின் கபடம்...

எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் எனும் வாசகம், எமது பேச்சு வழக்குத் தமிழில் ஒன்று. நல்லாட்சி என்று நாடகம் நடத்தும் இப்போதைய இலங்கை அரசின்--மைத்திரியின் ஆட்சியின்--செயற்பாடுகளில் மிகப் பலவும் அந்த வகை சார்ந்தே முளைத்து எழுகின்றன, உயர்கின்றன.

இலங்கையின் முந்திய அரசுகள் பலவும், தமிழ் மக்கள் இந்த நாட்டின் இரண்டாம் தரப் பிரசைகளே என்ற உள்ளார்ந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே, தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய அரசியல், குடியியல், வாழ்வியல் உரிமைகளைத் தட்டிப் பறிப்பதிலும், துவம்சம் செய்வதிலும் கடந்த எழுபது ஆண்டுகளாக அக்கிரமம் உட்பட்ட பலப்பல அநீதிகளை இழைத்து வருகின்றன. அவை யாவும் சேர்ந்து, தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரசைகள் என்றதொரு கண்ணோக்கு வெளிப்படையாகவும் உள்ளூரவும் பொங்கிப் பெருகி வருகின்றது.

அவற்றில் முதன்மை இடம் பிடித்திருப்பது, தமிழ் மக்கள் எண்பது சதவீதம், அண்ணளவாக 90 சதவீதம் வாழும் பிரதேசத்தில், (சிங்கள) இராணுவத்தினரை, குடியேற்றும் உள்நோக்கம் உயர்ந்து எழுகிறதோ என்ற தவிர்க்க இயலாத பெரும் ஐயத்தைத் தோற்றுவிக்கிறது.

அதனை, நடுநிலை சார்ந்த எந்தத் தரப்பாலும் புறக்கணித்து உதாசீனம் செய்துவிட முடியாது. அது திட்டவட்டமானது. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்துக் கடைசியாக ஆளைக் கடிக்கும் போக்கில், வடக்கு- கிழக்கு மாகாணங்களின் எல்லைக் கிராமங்களை, தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை-காணிகளை-கபளீகரம் செய்யும் செயற்பாடுகள் ஓங்கி உயர்ந்து வருகின்றன.

அந்த நாச நோக்குடைய கோட்பாடு, பயங்கரம் மெல்ல மெல்ல அரசினால் மேலுயர்த்தப்படுகிறது.

அதாவது, தமிழ் மக்கள் வாழ்ந்த எல்லைப் பிரதேசங்களைக் கபளீகரம் செய்துவிட்டு, அவர்களின் மையப்பகுதிகளையும் மெல்ல மெல்ல விழுங்கும் கபடத்தனமே, நடவடிக்கைகளே மும்முரமாக முன்னெடுக்கப்படுகின்றன!!

நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை இயற்றுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் முன்னர், நல்லாட்சி என்ற போர்வையினால்--


அனைத்துலக ஆட்சியாளர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, பேரினவாதத்தை ஊன்றி விதைக்க, நல்லிணக்க அரசின் ஆட்சிப் பிரதானிகள் கபட நாடகத்தை அறிமுகம் பண்ணத் தொடங்கி விட்டார்கள் என்பதைத் தவிர்த்து--

வேறு எந்த உவமான, உவமேயங்களைச் சொல்ல இயலும்...?

மகிந்த அரசின் வேகத்தைவிட மிகக் கூடிய "சக்தி" உள்ள இனவாதத் தீ நல்லாட்சி அரசால் மூட்டப்படுமோ என்ற ஏக்கமே தமிழ் மக்களின் மனங்களை நெருடுகிறது.

# நல்லாட்சி அரசின் சகல வலி நிவாரணி மகிந்த

சிங்கள மூலம்
சந்துன் ஜீவந்த
தமிழில் வீ.எஸ்.ரீ.



என்னுடைய அம்மாவின் ஊர் மாத்தறை. எங்களுடைய சின்ன வயதில் பள்ளிக்கூட விடுமுறைக்கு நாங்கள் மாத்தறைக்குப் போவோம். அம்மம்மா வீட்டுக்கு றுகுணுகுமாரி புகையிரதத்தில் போய் வருவது எங்களுக்குச் சந்தோசமான பயணம். அம்மாவின் தாய், அம்மம்மாவின் படுக்கைக்குப் பக்கத்தில் சின்ன மேசையொன்று இருந்தது. அதன் மீது எப்போதும் ஒரு தைலப்போத்தலொன்று இருக்கும். தோள் மூட்டில் நோவு ஏற்பட்டால் அம்மம்மா அந்தத் தைலத்தில் சிறிதைக் கையில் ஊற்றிப் பூசுவார். காலில் உழைவு ஏற்பட்டால் அதே தைலத்தைத்தான் பூசுவார். தலையிடி வந்தாலும் அதே தைலத்தை மூக்கில் பூசி மூச்சு இழுத்து விடுவார். உண்மையில் சொல்வதானால் அம்மம்மாவுக்கு உடம்பில் ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் மருந்து அந்தத் தைலம்தான். அந்த வகையில் எல்லா நோய்களுக்குமான நோய் நிவாரணி அந்தத் தைலமே. உண்மையில் அந்தப் போத்தல் தைலத்தை அம்மம்மா எவ்வளவுதான் பாவித்தாலும் அம்மம்மாவின் நோய் என்னமோ ஒருபோதும் குணமானதில்லை.

### அம்மம்மாவின் தைலப் போத்தல்

அம்மம்மாவின் தைலப் போத்தலைப் போன்றதொன்று இன்றைய நல்லாட்சி அரசிடமும் உள்ளது. அது வேறொன்றுமல்ல; மகிந்த ராஜபக்சவே. இன்று நல்லாட்சி அரசு தனக்கு ஏற்படும் 99 வீத நோய்களுக்கும் பயன்படுத்தும், சகலவற்றுக்குமான நோய் நிவாரணி மகிந்த ராஜபக்சவே. சுருங்கக் கூறினால் மகிந்தவின் பெயரை உச்சரிக்காமல் அரச தரப்பினரால் வேறெந்தக் காரண காரியங்களையும் செய்ய இயலாது.

இதற்கு அண்மைய மின்வெட்டு பொருத்தமான உதாரணம். மின்வெட்டு ஏற்பட முக்கிய காரணம் மகிந்தவே என்பது நல்லாட்சி அரசுத் தரப்பினர் பலரது குற்றச்சாட்டு. நாட்டு மக்களுக்கு இன்று உரிய வகையில் மின்சாரம், குடிதண்ணீர் வசதிகளை வழங்க இயலாத தமது கையாலாகாத் தனத்தை மூடிமறைக்க நல்லாட்சி அரசுத் தரப்பினர் தமது கையில் எடுத்துள்ள துரும்பு, இவையெல்லாம் மகிந்தவின் சதி என்பதே.


நல்லாட்சி அரசு இன்று நாட்டு மக்கள் மீது பெரும் சுமையைச் சுமத்தியுள்ளது. வற்வரியை 15 வீதமாக அதிகரித்துள்ளது. வருமான வரியும் உயர்த்தப்பட்டுள்ளது. வற்வரி அதிகரிப்பு பொது மக்களது அன்றாடப் பாவனைப் பொருள்களில் விலை அதிகரிப்பையும், சேவைகளுக்கான கட்டணங்களின் அதிகரிப்பையும் ஏற்படுத்துமொன்று. மகிந்த அரசு பெற்ற வெளிநாட்டுக் கடன்களையும் அவற்றுக்கான வட்டியையும் செலுத்த நேர்ந்

> "மகிந்த அரசு பெற்ற வெளிநாட்டுக் கடன்களையும் அவற்றுக்கான வட்டியையும் செலுத்த நேர்ந்துள்ளமையே இந்தவரிகளை அதிகரிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தி உள்ளதாக நல்லாட்சித் தரப்பு குற்றம் சுமத்துகிறது."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





துள்ளமையே இந்தவரிகளை அதிகரிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தி உள்ளதாக நல்லாட்சித் தரப்பு குற்றம் சுமத்துகிறது. கடன்பட்ட போதிலும், பொதுமக்கள் மீதான வரிகளை அதிகரிக்காது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள மகிந்தவால் முடிந்திருந்த நிலையில், எந்தவித புதிய அபிவிருத்திகளையும் மேற்கொள்ளாது நல்லாட்சி நிர்வாகம் பொதுமக்கள் மீது வரிச்சுமையை அதிகரித்தது ஏன் என்று மக்கள் முணுமுணுக்கத் தொடங்கியுள்ளனர்.
நாட்டின் விவசாயிகளுக்கு மகிந்தவால் உரமானியமாக 350 ரூபாவுக்கு உரத்தை வழங்க முடிந்திருக்கையில், இன்று நல்லாட்சி அரசில் உரத்தின் விலை 2,500 ரூபாவுக்கு உயர்த்தப்பட்டதேன் எனகேள்விஎழுப்பத்தொடங்கியுள்ளனர். அதற்கும்கூட, மகிந்த பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதால் உரத்தை மானிய விலையில்; 350 ரூபாவுக்கு வழங்க இயலாதென நல்லாட்சி அரசின் பிரமுகர்கள் சிலர் தெரிவிப்பது வேடிக்கைக்கு உரியதொன்றே.

> "இன்று நல்லாட்சி அரசு தனது சகல நோய்களுக்குமான ஒரே வலி நிவாரணத் தைலமென மகிந்தவின் பெயரைப் பயன்படுத்துவது போன்றே முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் தனது அரசின் சகலபின்னடைவுகளுக்கும், நோய் நிவாரணியாக பிரபாகரன் என்ற தைலத்தைப் பயன்படுத்தி வந்துள்ளார்."

**நெல்லை விற்க முடியாத நிலை**

இன்று விவசாயிகள் தாம் விளைவித்த நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய இயலாதுள்ளது, அரசு அவர்களது நெல்லை கட்டுப்பாட்டு விலைக்குக் கொள்வனவு செய்ய முன்வராமையால் தனியாருக்கு அறா விலைக்கு விற்று நட்டமடைய நேர்ந்துள்ளதாகப் புலம்புகின்றனர். கிலோ ஒன்று 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதாக வாக்குறுதியளித்த நல்லாட்சி அரசு, இப்போது மகிந்த திறைசேரியைக் காலி செய்துவிட்டுப் போயிருப்பதால் தன்னால் விவசாயிகளிடமுள்ள பெருந்தொகை நெல்லைக் கொள்வனவு செய்ய இயலாதுள்ளதாக நொண்டிச் சாக்குக் கூறுகிறது.
இவ்விதம் நாளொன்றின் 24 மணித்தியாலங்களும் மகிந்த திறைசேரியைக் காலி செய்துவிட்டுப் போயுள்ளார் என ஐ.தே.கட்சியினர் பரப்புரை மேற்கொண்டு வரும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான படிகளின் கொடுப்பனவுத் தொகைகளை நல்லாட்சி அரசு அதிகரித்து வழங்க முடிவு செய்துள்ளது. அதுவும் ஒன்றிரண்டோ, கொஞ்ச நஞ்சமோ அல்ல. தொலைபேசிப் பாவனைக் கட்டணம், வீட்டு வாடகை, அலுவலகமொன்றை நடத்துவதற்கான செலவு, அரசமைப்புச் சபை, நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்கான விசேட படிகள் என நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்குமான சம்பளம் தவிர்ந்த மேலதிக படிகளின் கொடுப்பனவுகளை நல்லாட்சி அரசு பெருமளவில் அதிகரித்துள்ளது. விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் 350 ரூபாவுக்கு உரத்தை வழங்க திறைசேரியில் நிதி இல்லையெனக் கூறும் அரசுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் லட்சக் கணக்கில் அதிகரித்த படிகள் வழங்க நிதி எங்கிருந்து கிடைக்கிறது? இதனை அரச பிரதானிகள் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்து வார்களா?

**ஒரே வலி நிவாரணி**

இன்று நல்லாட்சி அரசு தனது சகல நோய்களுக்குமான ஒரே வலி நிவாரணத் தைலமென மகிந்தவின் பெயரைப் பயன்படுத்துவது போன்றே முன்னர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் தனது அரசின் சகல பின்னடைவுகளுக்கும், நோய் நிவாரணியாக பிரபாகரன் என்ற தைலத்தைப் பயன்படுத்தி வந்துள்ளார். உண்மையில் 1999 இல் ரணிலைத் தோற்கடித்து சந்திரிகாவால் ஜனாதிபதியாக முடிந்தமை, பிரபாகரனது குண்டுத் தாக்குதலால் காயமடைந்ததால் கிட்டிய மக்கள் அனுதாபம் காரணமாகவே. பிரபாகரன் என்ற சகல வலி நிவாரணத் தைலத்தால் தமது இரண்டாவது பதவிக் காலத்தைச் சுவைத்த சந்திரிகா, 1994 இல் தமது முத லாவது தடவையான பதவியைப் பெற பிரேமதாச என்ற சகல வலி நிவாரணத்தைலத்தையேபயன்படுத்திக் கொண்டார். கடைசியில் வரலாற்றில் தோல்வி கண்டதொரு தலைவியாகவே சந்திரிகா தமது அரசியல் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.
அதே விதத்தில்தான், இன்றைய நல்லாட்சி அரசும் தனது தவறுகளை மூடி மறைக்க, இயலாமையை மூடிமறைக்க மகிந்த என்ற சகலவலிநிவாரணத் தைலத்தைப் பயன்படுத்தி வருகிறது. கடைசியில் சந்திரிகாவுக்கு ஏற்பட்ட கதியே நல்லாட்சி அரசுக்கும் ஏற்படக்கூடும்.
2005 ஆம் ஆண்டில் நாட்டுக்கு, நாட்டு மக்களது சுபீட்சத்துக்குத் தாம் என்ன செய்தோம் என்று கூறஇயலாத தொரு நிலையிலேயே சந்திரிகா பதவியை விட்டு விலக நேர்ந்தது. இன்றைய நல்லாட்சி அரசும் தான் பதவியைவிட்டு வெளி யேறும்போது சந்திரிகா போன்று நாட்டுக்கு என்ன செய்தோம் என்று கூற இயலாததொரு நிலையிலேயே பதவியிலிருந்து அகல வேண்டி ஏற்படும். வேண்டுமானால், நாங்கள் மின்சாரத்தை வெட்டினோம். தண்ணீர் விநியோகத்தை வழங்கத் தவறினோம். விவசாயிகளது உரமானியத்தை நிறுத்தினோம், ஓய்வூதியத்தைக் குறைத்தோம், பெறுமதி சேர் வரியான வட் வரியை அதிகரித்தோம், இறக்குமதி வரியைக் குறைத்தோம், இவற்றுக்கெல்லாம் மேலாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்தப் படியை இரண்டு லட்சம் வரை அதிகரித்தோம் என்று நல்லாட்சி அரசால் கூறிக்கொள்ள இயலும்.

## அறநெறிக்கல்வியின் முக்கியத்துவம்

அறநெறிப் பாடசாலைகளை உருவாக்குவோம். அறநெறிப் பாடசாலைகள் என்பது வெறுமனே ஆலயங்களோடு இயங்கும் கல்விக் கூடங்கள் அல்ல. மானிடப் பண்புகளுக்கு வித்திடும் விளைவு கூடங்களின் அடிப்படை நாதமாக இவை விளங்குகின்றன. வாழ்க்கையின் ஆரம்பப் பணிக்காக வித்திடும் கல்வியிலே அறநெறிப் பாடசாலைகளினுடைய கல்வியானது மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டியது காலத்தின் கட்டாயமானதாகும்.
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் நிலைநிறுத்த வேண்டிய மானுடப்பண்புகள் எல்லாம் மனிதத்துவத்திலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கின்றன. கல்வியியல் செயன்முறையிலே, இயந்திரமயமான வாழ்க்கை முறையிலே அறநெறிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது குறைவாகவே காணப்படுகின்றது.
பிரதேச ரீதியாக அறநெறிப் பாடசாலைகள் பல தோற்றம் பெற்றாலும் அவை இன்று யாழ்ப்பாணக்குடாநாட்டின் பெயரளவில் மட்டும் இயங்கும் நிறுவனங்களாகவே காணப்படுகின்றன. அறநெறிப்பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்ற மதிப்பு குறை வாகவே காணப்படுகின்றது. மிகக் குறைந்த வேதனத்தடன் பணியாற்றும் இவர்களுடைய அர்ப்பணிப்புமிக்க வாழ்க்கைக்கு வேறு எடுத்துக் காட்டுகளே இல்லை என்றே கூறவேண்டும்.
இயந்திரமயமான வாழ்க்கைமுறையும், மானிட பண்பாட்டின் விழுமியங்கள் பேணப்படாமையும், நகரத்தை நோக்கிய மக்களின் இடப்பெயர்வுகளும், மானிட வாழ்க்கையில் ஊடுருவிய தொழில்நுட்ப சாதனங்களின் முன்னேற்றம் இளைய தலைமுறையினர்களை சீரழிக்கத் தொடங்கி விட்டன. சீரழிக்கப்பட்ட மனித சமுதாயத்தின் மனங்களை வெற்றி கொள்வதற்கு போதிய அறநெறிக்கல்வி அவசியமாகின்றது. ஆறுமுகநாவலர் பிறந்த யாழ்ப்பாண மண்ணிலே அறம் சார்ந்து பணிகள் நடக்கவில்லை என்பது வேதனையளிக்கிறது.
அறத்தாற்றின் வழிநின்று உலகில் பேறு பெற்றவர்கள் எத்தனையோ பேர். அவர்களின் வழியைப் பின்பற்றி வாழ்ந்த நல்லோர்களினாலே தான் உலகம் இன்றும் நிலைபேறாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது. நல்லோரை உருவாக்கம் செய்கின்ற பணியிலே பாடசாலைகள் மட்டும் பங்கெடுத்துக் கொள்ள முடியாது. பண்புடனே உயரும் பிள்ளைகள் யாவரும் உலகில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவும், தீமைகளை விலக்கிக் கொண்டு வாழவும், மண்ணிலே நற்பண்புகளைப் பெற்றுக் கொள்ளவும் மனிதர்களிடத்திலே பண்புகள் வளர அறநெறிப் பாடசாலைகளை உருவாக்கி மனித சமுதாயத்தை செழுமையுறச் செய்வோமாக

**கே.குகதாசன், ஆசிரியர்**

## காலதாமதமாகும் கல்வியியற் கல்லூரி அனுமதிகள்

2013/2014 ஆம் கல்வியாண்டுக்கான கல்வியியற்கல்லூரி அனுமதிக்கான நேர்முகத் தேர்வுகள் நடந்து முடிந்த நிலையில் அவற்றுக்கான பெறுபேறுகள் (அனுமதிக்கான கடிதங்கள்) இன்னும் அனுப்பி வைக்கப்படாததால் மாணவர் கள் கவலைக்குள்ளாகியுள்ளனர்.
2012/2013 ஆம் கல்வியாண்டுக்கான அனுமதிகள் 2013 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில், புரட்டாதி மாதமளவில் வழங்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கதாகும்.
மேலும், நேர்முகத் தேர்வுகளுக்கு தோற்றிய மாணவர்களது பெறுபேறுகள் இன்னமும் அனுப்பப்படாத நிலையில் அவர்கள் ஏனைய கற்கை நெறிகளைத் தொடர்வது தொடர்பாகச் சரியான தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.
தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரிகள் போன்றவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அனுமதிகளும், பதிவுகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அதற்கான சந்தர்ப்பங்களையும் இந்த மாணவர்கள் தவறவிட்ட நிலையில் காணப்படுகின்றனர்.
மேலும், கல்வியியற் கல்லூரியின் அனுமதிக்கான நேர்முகத் தேர்வுப் பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்கள் தெரிவு செய்யப்படாதவிடத்து மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு அனுமதிப்பதற்காக மீண்டும் ஒருவருடகாலம் விரயமாக்கப்பட வேண்டும் என்பதை மிகவும் மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டு அனுமதிக்கான கடிதங்களை விரைவாக அனுப்பி உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**பாதிக்கப்பட்டவர்களின் சார்பில், மாணவி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தகாரில் தாக்குதல்; ஏழு பொலிஸார் சாவு!

காபூல், மார்ச் 26
ஆப்கானின் தென் மாகாண மான கந்தகாரில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், குறைந்தது ஏழு பொலிஸார் உயிரிழந்ததுடன், அவர்களது சகாக்களினாலேயே குறித்த பொலிஸார் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.
காந்தகார் மாகாணத்தின் ஆர் கன்டாப் மாவட்டத்தில் ஆப்கா னிய உள்ளூர் பொலிஸாரில் தீவிரவாதிகளுடன் தொடர்பு டைய மூன்று பொலிஸார், தம் முடன் பணிபுரியும் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டபோதே இந்த உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ள தாகத் தெரிய வருகின்றது.
இது தொடர்பில் கருத்து வெளி யிட்ட காந்தகார் மாகாண ஆளு நரின் பேச்சாளர், குறித்த சம்ப வம் தொடர்பில் விசாரணை களை நடத்துவதற்காக, ஆர் கன்டாப் மாவட்டத்துக்கு விசா ரணைக் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரி வித்தார். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத் தில், துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட ஏ.எல்.பி பிரிவின் முன் னாள் தளபதி ஒருவர், அந்தப் பகு தியில் இருந்து தப்பிச் சென்றுள் ளதாக அந்தப்பிராந்திய பாது காப்பு அதிகாரி ஒருவர் குறிப் பிட்டார்.
இதேவேளை- சுமார் ஒரு மாதத் துக்கு முன்னர் கந்தகார் மாகா ணத்தை உருஸகன் மாகாணத் துடன் இணைக்கும் பிரதான வீதியில் நடத்தப்பட்ட தாக்குத லில், 4 பொலிஸார் கொல்லப் பட்ட சம்பவத்துக்கு தலிபான் தீவிர வாதிகள் பொறுப்பேற்றிருந்த னர். ஆப்கானில் தலிபான் தீவிர வாதிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான முன்னெ டுப்புக்கள் இடம்பெற்று வரு கின்ற போதும், அது இன்னமும் வெற்றியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## பெல்ஜியம் தாக்குதல்; 6 பேர் கைது

பிரஸ்சல்ஸ், மார்ச் 26
பெல்ஜியத்தின் பிரஸ்சல்ஸ் நகரில் 4 நாள்களுக்கு முன்னர் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 2 பேரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். சுமார் 40 நாடுகளைச் சேர்ந்த மக்கள் இந்தத் தாக்கு தலில் உயிரிழந்தும் காயமடைந்தும் இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பயங்கரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து மார்ச் 27 வரை பிரஸ்சல்ஸ் விமான நிலையம் பயணிகள் பயன்பாட்டுக்கு மூடப்பட்டுள்ளது. (தி)

## கடும் காயத்துடன் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்தார் பெண்

### உலகம் முழுவதிலுமிருந்து பாராட்டு



பாங்கொக், மார்ச் 26
தாய்லாந்தில் கை, கால் உடைந்து, தலையில் பலத்த காயத் துடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காகக் காத்திருந்த வேளையில் தாய் ஒருவர், தனது 6 மாதக் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டிய சம்பவம் உலக அளவில் தற்பொழுது அனைவராலும் கௌரவிக்கப்படும் ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது.
குறித்த தாய், அண்மையில், கை மற்றும் கால் உடைந்த நிலையில், தலையில் பலத்த காயத்தோடு மார்பில் இரத்தக் கறையோடு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அந்த வேளையிலும், தன் காயங்களைப் பொருட்படுத்தாது, ஆறு மாத ஆண் குழந்தைக்கு அவனது பசியைப் போக்கத் தாய்ப் பால் கொடுத்துள்ளார்.
இந்தச் சம்பவத்தை எவரோ ஒருவர் புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவு செய்துள்ளார். இப்பொழுது அந்தப் புகைப்படம் 'அம்மா அன்பின் சக்தி' என்ற தலைப்பில் தாய் லாந்து ஊடகங்களில் செய்தியாக வெளியாகியுள்ளது. இது தற்பொழுது முழு உலகிலும் வேகமாகப் பரவியுள்ள ஒரு செய்தி யாக உள்ளது.
இந்த மாபெரும் செயலை செய்த குறித்த தாயும், அவரது மக னும் தற்பொழுது நலமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், இந்தப் பெண்ணுக்கு எப்படி இவ்வாறு பலத்த காயம் ஏற்பட்டது என்பது குறித்த தகவல்கள் எதுவும் இன்னமும் வெளியாகவில்லை. (தி)

# ரோமில் முஸ்லி
# கால்களைக் கழு

## பெரிய வியாழன் பிரா

> பிரார்த்தனை நிகழ்வின்போது அவர் ஆற்றிய உரையில், பாப்பரசர் பிரான்ஸிஸ் ,பிரஸ்ஸல்ஸ் தாக்குதல் களை இரத்த வெறி பிடித்தவர்கள் செய்யும், போருக்கான சமிக்ஞை என்று வர்ணித்தார். குண்டுத்தாக்குதல் நடத்தி யவர்களின் உலகப் பார்வையை தனது கூட்டத்தில் கூடியிருந்தோரின் மனப்பாங்குடன் மாறுபடுத்தி ஒப்பிட்டு அவர் பேசினார்.



வத்திக்கான் சிற்றி, மார்ச் 26
ரோம் நகரில் அகதிகள் முகாம் ஒன்றில், கத்தோலிக்க திருச் சபையின் ஈஸ்ரர் பண்டிகைக் கொண்டாட்டங்களின் தொடக் கத்தைக் குறிக்கும் பெரிய வியாழன் பிரார்த்தனை நிகழ்வு ஒன் றின்போது, பாப்பரசர் பிரான்ஸிஸ் முஸ்லிம் மற்றும் பிறகுடியேறிகளின் கால்களைக் கழுவினார்.
கேஸ்டல்நுவோ டி போர்டோ என்ற இடத்தில் உள்ள , தஞ்சம் கோரி களின் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் முகாம் ஒன்றுக்கு அவர் பயணம் செய்தபோது இது இடம்பெற்றது.
பாரிஸ் மற்றும் பிரஸ்சல்ஸ் நகரங்களில் இடம்பெற்ற தாக்குதல் களை அடுத்து எழுந்திருக்கும் கொந்தளிப்பான உணர்வுகள் நிலவும் சூழலில் இந்த பயணம் இடம்பெற்றது.
பிரார்த்தனை நிகழ்வின்போது தாம் ஆற்றிய உரையில், பிரஸ்ஸல்ஸ் தாக்குதல்களை இரத்த வெறி பிடித்தவர்கள் செய்யும், போருக்கான சமிக்ஞை என்று பாப்பரசர் வர்ணித் தார். குண்டுத்தாக்குதல் நடத்தியவர்களின் உலகப் பார்வையை தனது கூட்டத்தில் கூடியிருந்தோரின் மனப்பாங்குடன் மாறுபடுத்தி ஒப்பிட்டு அவர் பேசினார்.
எம்மிடம் பல கலாசாரங்களும், மதங்களும் இருக்கின்றன. ஆனால், நாம் எல்லோரும் சகோதரர்கள் , அமைதியாக வாழவே விரும்புகிறோம்- என்றார்-அவர். (தி)

## சிரியாவின் புதிய அரசமைப்பு வரைவை
## தயாரிக்க அமெரிக்கா-ரஷ்யா இணக்க



எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் சிரியாவின் புதிய அரசமைப்புத் தொடர்பான நகல் வரைவொன்றை ஏற் படுத்துவதற்கு, அமெ ரிக்கா மற்றும் ரஷ்யா என்பவை இணக்கம் கண்டுள்ளதாக அமெரிக்க இராஜாங் கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.
ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின் கிரெம்ளினில் ரஷ்ய ஜனாதிபதி விளா டிமிர் புட்டினுடன் இடம் பெற்ற நான்கு மணி நேரக் கலந்து ரையாடலை அடுத்து, கருத்து தெரிவிக் கையிலேயே கெரி இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், அரசியல் மாற்றம் என்ற அடிப்படையில் ஜெனிவாவில் நடைபெற்று வரும் சமா தானப் பேச்சுக்களைத் துரிதப்படுத்த சிரிய அரச தரப்பு மற்றும் எதிர்த் தரப்பினர் இணக்கம் கண்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார். இதேவேளை- தற்போது நடைபெற்ற சமா தானப் பேச்சுக்களின் புதிய சுற்று தொடர்பில் கருத்து வெளியிட்ட சிரியாவுக்கான ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் ஸ்ரபான் டி மிஸ்ருரா, இரு தரப்பினரிடையேயும் ப யங்களில் பொதுவான நிலைப்பாடுகள் காணப்படு வும், தற்போது இந்த சமாதானப் பேச்சுக்கள் முன் கரமான பாதையில் நகர்வதாக வும் குறிப்பிட்டார். மேலும், தற்போது இந்தப் பேச்சு வார்த்தைகளு கலந்துரையாடல்கள் இடை நிறுத்தப்பட்டிருப் அடுத்த சுற்றுப் பேச்சுக்களை எதிர்வரும் ஏப்ரல் ம வில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாவும் மிஸ்ரூரா பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிம் அகதிகளின்
# வினார் பாப்பரசர்

## ார்த்தனையின்போது



## சிகா வைரஸுக்கு தடுப்பூசி கண்டறிய இந்தியா உள்ளிட்ட 5 நாடுகள் முயற்சி

புதுடில்லி, மார்ச் 26
சிகா வைரஸுக்கான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சி யில் இந்தியா உள்ளிட்ட 5 நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.
சிகா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் 38 நாடுகளில் பரவியுள்ளது. குறிப்பாக கர்ப்பிணிகளை அதிக அளவில் தாக்குகிறது. 1947 ஆம் ஆண்டு உகாண்டா நாட்டில்தான் முதன்முதலில் இந்த வைரஸ் பரவியது. ஆபிரிக்க நாடுகளில் டெங்கு காய்ச்சலைப் பரப்பும் கொசுவுக்குப் பெயர் ஏடிஸ் எஜிப்டி. இந்த கொசு மூலமாகத்தான் சிகா வைரஸும் பரவி வருகிறது.
சிகா வைரஸ் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஆரம்ப நாள்களில் காய்ச்சல் குறைவாகத்தான் இருக்கும். தோல் கடுமையாகப் பாதிக்கப்படும். இரண்டு முதல் ஏழு நாள்கள் வரை இந்தக் காய்ச்சல் இருக்கும். இந்த வைரஸைத் தடுப்பதற்கு தடுப்பூசி இல்லை. சிகா வைரஸ் ஒருவருக்குப் பரவினால் காய்ச்சல் மட்டுமன்றி மூட்டு இணைப்புகளிலும் வலி ஏற்படும். இதனால் இந்த நோயைக் கண்டறிவதற்கான சோதனை முறைகள் மற்றும் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அமெரிக்கா, பிரான்ஸ், பிரேஸில், இந்தியா மற்றும் ஆஸ்திரியா ஆகிய 5 நாடுகள் சிகா வைரஸுக்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக, உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் மார்கரெட் சான் கூறியுள்ளார். (தி)

## பாகிஸ்தானில் போலி மது குடித்த 45 பேர் உயிரிழப்பு

கராச்சி, மார்ச் 26
பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில் போலி மதுபானம் அருந்தியதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளது.
பழைய ஐதராபாத் நகரம் அமைந்துள்ள டண்டோ முகமது கான் மாவட்டத்தில், ஹோலிப் பண்டிகையையொட்டி கடந்த திங்கட்கிழமை இரவு போலி மதுபானம் அருந்திய சுமார் 120 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 6 பெண்கள் உட்பட 24 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தனர்.
இந்த நிலையில், போலி மதுபான உயிரிழப்பு எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. இவர்களில் 10 பெண்கள் உட்பட 35 பேர் இந்துக்கள் எனத் தெரியவந்துள்ளது.
இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு தலா 2 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இன்னும் 35 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை ஐம்பதைக் கடக்கும் என நம்பப்படுகிறது. பொலிஸ் நடவடிக்கை மற்றும் வழக்கு அலைச்சலுக்குப் பயந்து பலர் தங்கள் உறவினர்களின் இறப்பைப் பற்றி எவருக்கும் தெரிவிக்காமல், பிணங்களை இரகசியமாகப் புதைத்து விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (தி)

வ
கம்



யும் பல விட
னப்படுவதாக
முன்னேற்ற
ட்டார்.
தகளுக்கான
ருப்பதுடன்,
ரல் மாதமள
ஸ்ருரா குறிப்
(தி)

# சாம்பரான பிரதேசமாக சியோலை மாற்றுவோம்

## வடகொரிய ஜனாதிபதி எச்சரிக்கை

பியொங்யாங், மார்ச் 26
தென் கொரிய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தாக்குதல் நடத்துவதைப் போன்ற ஐந்து ஒத்திகைத் தாக்குதல் பயிற்சிகளில், வட கொரிய இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக வட கொரியா உத்தியோகபூர்வ தொலைக்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.
இது தொடர்பில் வட கொரிய ஜனாதிபதி கிம் யொங்-உன் தெரிவித்த கருத்தையும் அந்தத் தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. எதிரிகள் எமக்குச் சவால் என்றால்.. எங்கள் பீரங்கிப் படைகள், இரக்கமற்ற பதிலடி நடவடிக்கையாக சியோலை இடிந்த மற்றும் சாம்பரான பிரதேசமாக மாற்றும் எனத் தெரிவித்துள்ளதாக அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் வட கொரிய அரச தொலைக்காட்சி வெளியிட்டுள்ள செய்தியில், தென் கொரிய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் சியோலில் உள்ள இன்னும் சில முக்கிய அரச நிலையங்கள் ஆகியவற்றை இலக்கு வைத்து தாக்குவது போன்ற ஒத்திகைத் தாக்குதல் பயிற்சிகளை, வட கொரிய இராணுவம் முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
தென் கொரிய தலைநகர் சியோலில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமானது நீல மாளிகை என அழைக்கப்படுகின்றது.
மேலும், அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- குறித்த இராணுவ ஒத்திகைத் தாக்குதல் பயிற்சிகளை மேற்கொள்ள வட கொரிய ஜனாதிபதி கிம் யொங்-உன் உத்தரவைப் பிறப்பித்திருந்ததோடு, அவரது நேரடி மேற்பார்வையின் கீழ் இந்தப் பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிகளின்போது, பல வகையான, நூற்றுக் கணக்கிலான நீண்ட தூரம் பயணிக்கக் கூடிய ஆட்டிலறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் பீரங்கிக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
தென்கொரியா அமெரிக்க பெரிய கூட்டு இராணுவப் பயிற்சிகளை தமது எச்சரிக்கையையும் மீறி, தமது ஆத்திரத்தைத் தூண்டும் வகையில் தொடர்ந்தும் இந்த இரு நாடுகளும் முன்னெடுத்து வருவதற்கான பதில் நடவடிக்கைகள், மிகப் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என வட கொரியா அந்த இரு தினங்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்



*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் மகரம் ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள் இன்றும் தொடர்கின்றன)*

## மகரம்

**கேதுவின் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு மூன்றாவது வீட்டில் அமர்ந்து கொண்டு எதையும் தாங்கும் மனப் பக்குவத்தையும், விடாமுயற்சியையும் கொடுத்து வந்த கேது இப்போது உங்கள் ராசிக்கு இரண்டாவது வீட்டுக்குள் நுழைகிறார். எனவே இனி வீரியத்தை விட்டுவிட்டு காரியத்தில் கவனம் செலுத்தப் பாருங்கள். எதையும் அறிவுபூர்வமாக அணுகுவது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள். பல் வலி, காது வலி வந்து போகும். கண்ணைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். மருத்துவ்ரை கலந்தாலோசிப்பது நல்லது. சிலர் மூக்குக் கண்ணாடி அணிய வாய்ப்பிருக்கிறது. முன்கோபத்துடன் பேசி சொற்குற்றம், பொருள் குற்றத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டிவரும். சிலரது தவறுகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலமாக சச்சரவுகளில் சிக்குவீர்கள். சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசியச் செலவுகள் அதிகமாகும். பேருந்துகளில் படிக்கட்டுகளில் நின்று பயணிக்க வேண்டாம். சிறுசிறு விபத்துக்கள் நிகழக்கூடும். கடந்த கால கசப்பான அனுபவங்களை நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். தேவையற்று மற்றவர்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம்.

**கேதுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்கள் சேவகாதிபதியும்–விரயாதிபதியுமான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் 8.1.2016 முதல் 12.7.2016 வரை கேதுபகவான் செல்வதால் திருமணம், சீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுபச் செலவுகள் அதிகமாகும். இளைய சகோதர வகையில் ஆதாயமடைவீர்கள். ஆன்மிகப் பயணங்களால் புத்துணர்ச்சிப் பெறுவீர்கள். நல்லவர்களின் நட்பு, கிடைக்கும். ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் 13.7.2016 முதல் 20.3.2017 வரை கேதுபகவான் செல்வதால் வேலைச்சுமையால் உடல் அசதி, மனச் சோர்வு வந்து நீங்கும். அடுத்தவர்களைக் குறை கூறுவதை நிறுத்துங்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப் பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்கள் சுக–லாபாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 21.3.2017 முதல் 25.7.2017 வரை கேதுபகவான் செல்வதால் தடைபட்ட காரியங்க ளெல்லாம் முடிவடையும். இழுபறியான வழக்குகளில் சாதகமான நிலை உண்டாகும். அடைவிலிருந்த பத்திரங்கள், நகைகளை மீட்பீர்கள்.

காணாமற்போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும். எதிர்பார்த்த விலைக்குப் பழைய காலி மனையை விற்று புதுவீடு வாங்குவீர்கள். கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகளைப் போராடி விற்க வேண்டிவரும். வேலையாள்களிடம் கண்டிப்புடன் இருங்கள். புதியவர்களை நம்பிப் பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். உத்யோகத்தில் உங்களைப் பற்றிய வதந்திகள் வரும். இந்த ராகு–கேது மாற்றம், புதிய படிப்பினைகளைத் தருவதாகவும், சமூகத்திலும், வாழ்க்கையிலும் வெற்றி பெற வேண்டுமென்றால் கொஞ்சம் நெளிவு, சுளிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதாக அமையும்.

(தொடரும்)

# வில்வம் வீட்டுக்குச் செல்வம்

கே.எஸ்.சிவஞானராஜா

சிவனுக்கும் சீவனுக்கும் சேத்திர மகிமையைத் தருவது செகமெலாம் போற்றும் வில்வ மரமாகும் தல விருட்சமாகவும், தண்ணருள் தருவதாகவும், நில மடந்தையின் நித்தில முத்தாகவும், பழ மரங்களுக்குள் பத்தியமான சத்துணவாகவும், பாருக்குள்ளே நல்ல சாத்தியமான தோத்திர மரமாகவும், தன்னைச் சரணடைந்தவர்களைக் காக்கும் அபயமரமாகவும், ஆயுளை அள்ளித்தரும் அற்புதப் பேறாகவும், சகலரோக நிவாரணியாகவும் வில்வமரமானது அதன் இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வேர், பட்டை, பிசின், தண்டு, மரம், தளிர் என எல்லாவற்றையும் எமக்கு வரமாக்கியுள்ளது. கற்பக தருவாம் பனையைப்போல, சைவ சமயத்தின் ஆணிவேராகவும், அச்சாணியாகவும், ஆரோக்கியத்தின் மகாராணியாகவும், மகா சிவராத்திரியின் தாற்பரிய கார ணியாகவும் வில்வமரம் வாழ்க்கையின் பரிபூரண அமிர்தவர்ஷினியாகவும் இலங்கையிலும், இந்தியாவிலும் சைவ மக்களால் போற்றி வணங்கப்படு கிறது. உண்மையாகவே தினமும் ஒரு புஷ்பமதை இதன் அடியில் வைத்து வணங்கி வருவோமாக இருந்தால் , வீட்டில் செல்வமும், மாங்கல்யமும், ஆயுளும் நிலைத்து நிற்கும்.

**நிவாரணி**

வில்வம் பழைமானது, நீரிழிவு, இரத்த உயர் அழுத்தம், கொலஸ்ரோல், இரத்த மூலம், வாய்ப்புண், குடற்புண், வாதக்காய்ச்சல், விஷம், மலட்டுத் தன்மை, மலட்டுப் புத்தி, கணச்சூடு, பித்த வெடிப்பு, கரு உற்பத்தியின்மை, செமிபாடின்மை, ஊழைச் சதை, முடியுதிர்தல், மூர்க்க குணம், மங்கல் பார்வை, மந்த புத்தி, உடல் மெலிவு முதலிய அத்தகை ஏக்கங்களையும் குணமாக்கி உடலையும், உள்ளத்தையும், உணர்வையும் சமநிலையில் பேணிப்பாது காக்கும் வில்வம் பழத்தை வேறு பெயர்களாலும் அழைப்பர். இதனைப் பயன்படுத்துபவர்களுக்கு புற்று நோயணுகாது.

**வேறுபெயர்கள்**

சிவப்பழம், மஞ்சள் கனி, சஞ்சீவி, சதாசிவக்கனி, சாத்வீகப்பாகு, கூவிளம், சிவாசத்துருவம், நீள்மலி, நின்மலி, வான்முகி, கலாமுகி, பயோதரபாலி, தனமுனி, (Aegle marmelos) எனப் பல பெயர்களால் அடுத்தடுத்த சந்ததிக்காக ஞாபகம் செய்யப்பட்டு, அழைக்கப்படுகிறது.

**மகிமை**

கொடுங்காட்டிலே அகப்பட்ட வேடனாம் கிராமவாசிக்கு விடியும் வரை வாழ்வளித்த விருட்சமே வில்வமரமாகும். ஒவ்வொரு வில்வ பத்திரமும் லிங்கத்துக்கு விடியும் வரை அருச்சனையாகி, மலைபோலக் குவிந்து சிவபிரானை மகிழ்வித்தது. இதுவே தற்போதும் அனுஷ்டிக்கப்பட்டு வரும் மகா சிவராத்திரி விரதமாகும். பத்திர புஷ்பங்களில் சிறந்தது வில்வமாகும். சிவனுக்கு மிகவும் பிடித்த பத்திரம் வில்வமிலையாகும். முள் நிறைந்த மரமாகையால் வளர்ந்தவர்கள் மட்டும் பற்றுவதும், போற்றுவதும், பறிப்பதும், வணங்குவதும் இறைவனுக்கு வாலாயமானதாகும். சிவபிரானுக்கு வில்வமிலையால் அர்ச்சனை செய்வதனால் ஏனைய தெய்வங்களும் மகிழ்வடையும் என்பது உறுதியானதாகும்.

**குறிப்பு**

வில்வமரத்தைப் பெரும்பாலும் வீடுகளுக்கப்பால் வளவுகளிலேயே போற்றி



வளர்த்தல் நன்மை பயக்கும். கண்ட கண்ட இடங்களில் இதனை வளர்ப்பது ஆரோக்கியமற்றதாகும். காரணம் புனிதம் கெட்டுவிடக்கூடாது. மற்றும் தோஷமுள்ளவர்கள் இந்த மரத்தைத் தீண்டுதல் ஆகாது. அவ்வாறு தீண்டினாலும் எந்த மரமாகினாலும் கோபித்துக்கொள்ளாது. பயபக்தி குறைந்து விடும் என்பதற்காகவே.

**சஞ்சீவி**

வில்வம் இலை, துளிர்,பூ, பிஞ்சு, காய், பழம், வேர்ப்பட்டை, சதை ஆகிய ஒன்பது பொக்கிசங்களையும் சம அளவில் எடுத்துக் காயவைத்து அரைத்துப் பொடியாக்கி, துணியிலே அரித்துப்பெற்ற வில்வப்பொடியை, சுத்தமான கண்ணாடிப் போத்தலில் இட்டு, தினமும் வெறும் வயிற்றில் மூன்று சிட்டிகை தண்ணீருடன் கலந்து பருகி வந்தால், வீட்டில் ஆரோக்கியம் பூத்துக் குலுங்கும். பணமோ அல்லது நலமோ செல்வம் என்றால் நலந்தான் வீட்டுக்குச் செல்வம். பணம் அடுத்தபடியாகும். எவர் இதைச் செய்யப் போகிறார்கள்? நாம் செய்யவேமாட்டோம். காரணம் சோம்பலே. சஞ்சீவி ஆகாது. சஞ்சீவி சோம்பலை விரட்டும்.

**வெல்வோம்**

உடலையும், உள்ளத்தையும்,சமநிலையில் பேணவல்லது வில்வமாகும். சகல நோய்களுக்கும் நிவாரணியாக அமைவது வில்வமாகும். வில்வத்தை எண்ணினால் வீட்டிலே வில்வம் முளைக்கும். தேடுங்கள் வில்வம் பழம் கிடைக்கும். சாப்பிட்ட பின்னர் சொல்லுங்கள். மேனி பளபளக்கும். நோய் பறக்கும். இது பொய்யல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவர்க்கு மாடல்ல மற்றையவை

செ.உமாசுதன்

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வம். அதற்கொப்பான செல்வமென்று வேறு எதனையும் சொல்லிவிட முடியாது. அத்தகைய சிறப்பும், சீர்மைத்துவமும் நன் முறையிலே வளம் பெற மாணவர்களின் கடின உழைப்பு ஊதியமாக்கப்படுகின்றது. அதற்கேற்ற நல் ஆசிரியங்களின் முடிவற்ற ஆத்மார்த்தமான கற்பித்தல் செயன்முறைகள், அறிவின் செறிவூட்டங்கள் வரமாக வழங்கப்படுகின்றன. இத்தகைய மாணவர்களின் உழைப்பும் ஆசிரியங்களின் அறிவூட்டமும் அர்த்தப்படுகின்றபோது தான் ஓர் சமூகத்தின் விடுதலைக்கான விழிகள் விழிப்படைகின்றன. சிந்தனைகள் எதிர்காலம் நோக்கிய திட்டமிடலுக்கு விழிப்பூட்டுகின்றன. கல்வி எனும் விழி விழிப்பாகி இனத்துவத்துக்கும் அந்த இனத்தின் கலை, கலாசார சமூக விழுமியங்களின் செல் நெறிக்கும் அர்த்தம்தருகின்றது. நிலைபேறாக நிலைத்திருக்கச் செய்து அடையாளம் தருகின்றது.

அந்தவகையிலே கடந்த காலங்களில் தமிழரின் கல்வியைத் திட்டமிட்ட வகையில் இலங்கை அரசு புறக்கணித்தது. எத்தனையோ நெருக்கடிகள் இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு எமது மாணவர் சமூகம் கல்வியைக் கற்க வேண்டியிருந்தது. தமது ஆர்வத்தினாலும் திறமையினாலும் கடும் உழைப்பினாலும் கல்வி கற்றுப் பொதுத் தேர்வுக்குத் தயாரானாலும் உரிய காலத்தில் அவை நடைபெறுவதில்லை.

தேர்வு நடைபெறும் காலங்களிலும் அரச படைகள் அமைதியைக் குலைத்தன. இத்தனை தடைகளையும் தாண்டித்தான் எமது மாணவர்கள் தேர்வுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அத்தனை தடைகளையும் தாண்டி மாணவர்கள் தமது நிலையை நிலைத்திருப்பை நிரூபித்துக் காட்டினர். தற்போதும் மிகுந்த சிரமங்களின் மத்தியிலே பெற்றோரின் தியாகங்களின் கூட்டிணைவிலே கல்வி என்கின்ற தமிழினத் தின் மூலதனமான சொத்தை முயற்சி யால் முதலீடாக்கி முதலாளித்துவம் செய்கின்றனர் - காத்துவருகின்றனர்.

இந்த நிலையிலே 2009 போர் முடிவடைந்ததன் பிற்பாடு அதற்கு முன்பிருந்த கட்டுப்பாடுகளை, சீர்மைத்துவங்களை மீளக்கட்டியெழுப்ப முடியாத தாற்பரியங்கள் தற்போது தமிழீழத்தின் கல்வித்துறையில், கல்வி நிர்வாகத்துறையில் சீரழிவுகளாக தலைதூக்கத் தொடங்கியுள்ளன. சீரழிந்து செல்கின்ற நிலை தோற்றம் பெற ஆரம்பித்திருக்கிறது. முன்பு மட்டற்ற அரசியல் தலையீடுகளுக்குள் ஆர்ப்பாட்டமாக, அட்டகாசமாக, உலாவித்திரிந்த பல அதிகாரிகள் மீண்டும் தற்போதைய தமிழ் அரசியல் தலைமைத்துவங்களின் கண்டுகொள்ளாத்தனத்தை, அவர்களின் ஒத்தூதும் தன்மையைச் சாட்டாக்கி தலையில் ஏறி உட்கார்ந்து அவர்களை வழிநடத்துகின்றனர். பங்கு போட்டுப் பகிர்ந்துண்ணவும் தொடங்கிவிட்டனர். இந்தச் செயல் நிலைகள் கல்வி நிர்வாக அதிகாரிகளின் எதேச்சாதிகாரத் தொனியை திட்டமிட்ட முறையிலே ஆசிரியர்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக கட்டவிழ்த்துவிட்டுள்ளன. இவை மாணவர்களின் சுதந்திரமான கற்றலிலும் மிகப்பிரதானமாக அவர்களின் அடைவு மட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டிருக்கின்றன. ஆசிரியர்களின் ஆத்மார்த்தமான, விசுவாசமான கற்பித்தல் நடவடிக்கைகளில் இடையூறுகளைத் திணித்துவிட்டுள்ளன.

துணுக்காய், முல்லைத்தீவு மாவட்டத்தினுள் வருகின்ற ஒரு கல்வி வலயம். இந்த வலயத்திலே மொத்தமாக 64 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இவற்றில் தேசிய பாடசாலைகளும் உள்ளடங்குகின்றன. 6000 மாணவர்கள் வரையிலே கல்வி கற்றுவருகின்றனர். நடைபெற்று ஓய்ந்த மிகப் பெரிய மனித அவலங்கள் அரங்கேறிய மாவட்டத்தினுள் வருகின்ற ஒரு பிரதேசம். போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி என்பது இங்கு பிரதானப்படுத்தப்படுவதுடன் அது தொடர்பான மேம்பாடு கரிசனையோடு எடுத்து நோக்கப்பட வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் சுதந்திரமான கற்பித்தல் செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் ஆத்மார்த்தமான கல்விபுகட்டலுக்கு இடையூறுகள் அற்ற, அச்சுறுத்தல் அற்ற சூழமைவுகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும்.

> **"போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி என்பது இங்கு பிரதானப்படுத்தப்படுவதுடன் அது தொடர்பான மேம்பாடு கரிசனையோடு எடுத்து நோக்கப்பட வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் சுதந்திரமான கற்பித்தல் செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்."**

இதற்கான உந்து சக்திகளாக இருக்க வேண்டியவர்கள் கல்விச்செயற்பாடுகள் தொடர்பிலான நிர்வாகத்தினரே. இவர்களை வழிப்படுத்துகின்ற கல்வி அமைச்சு சார்ந்த உத்தியோகத்தர்களே. இவர்களின் நேரடி வழி நடத்தலின் கீழ் இயங்கிவருகின்ற கோட்டமட்ட, வலயமட்ட அதிகார மட்டத்தினரே. இவர்கள் தவிர்ந்த பாடசாலை மட்டத்திலே முன்னிறுத்தப்படுகின்ற அதிபர்களே. இந்தநிலையிலே முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தின் கீழ் வருகின்ற துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரின் மேற்போந்த எதேச்சாதிகாரத் தொனி, ஆசிரியர்களுக்கு எதிரான அடக்கு முறைகள், பண மோசடிகள், மாணவர்கள் மீதான பாலியல் ரீதியான தொந்தரவுகள் தொடர்பில் கண்டு கொள்ளாத தன்மை என்பவற்றுக்கு எதிராகவும் கடந்த இரண்டு வருடங்களாக பல தடவைகள் எழுத்து மூலமான முறைப்பாடுகளையும் ஆதாரங்களையும் கல்வி அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியிருந்தும், இதுவரை எந்தவித முறையான விசாரணைகளும் மேற்கொள்ளப்படாதமை தொடர்பில் அதிருப்தியடைந்து ஆசிரியர்கள் அனைவரும் வீதிக்கு இறங்கிப் போராட வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நேற்று முன்தினம் கல்வி அமைச்சின் முன்பாக ஒன்றுதிரண்ட துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும். அவருக்கு எதிரான ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களுக்கு நீதியான விசாரணைகளை மேற்கொண்டு தீர்வை வழங்க வேண்டும் எனக் கோரி ஒருமித்த குரலில் சுகவீன கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் கடந்த இரண்டாண்டுகளாக எதிர்கொண்ட அழுத்தங்களின் வெளிக்கிளம்புகையும் அந்த வலயத்தைச் சேர்ந்த அந்தக் குறிப்பிட்ட பெண் கல்விப் பணிப்பாளரின் குடைச்சலால் ஏற்பட்ட மன விரக்தியின் ஆக்ரோசத்தையும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களின் கருத்து வெளிப்பாட்டிலிருந்து உய்த்துணர முடிந்தது. உண்மையில் அந்த ஆசிரியர்களின் கோரிக்கைகள் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியவை.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பிலும் இடம்பெற்ற நிதி மோசடிகள், முறைகேடுகள் தொடர்பிலும் கருத்துரைத்த ஆசிரியர் பிரதீபன், கடந்த இரண்டு வருடகாலமாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எதிராகவும் அவர் செய்து வருகின்ற அடக்கு முறைகளுக்கு எதிராகவும் பல தடவைகள் எழுத்து மூலமான முறைப்பாடுகளையும் ஆதாரங்களையும் சம்பந்தப்பட்ட கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கிறோம் - என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை வென்ற பிளாக்கி



காகக் குஞ்சுகளான ஆஷாவுக்கும் பிளாக்கிக்கும் சிறகுகள் முளைத்து விட்டன. அவை பறக்கும் பக்குவத்தைப் பெற்று விட்டன. முதலில் ஆஷா காகம் கூட்டை விட்டுத் தத்தித் தத்தி வெளியே வந்தது. இதைப் பார்த்த அம்மாக்காகமான பிரவுனி, ஆஷாவை உற்சாகப்படுத்தியது. "பரவாயில்லையே! உடலைச் சமநிலைப் படுத்திக் கிளையில் அமர்ந்துவிட்டாயே! கவனமாகப் பறந்துபோ பறந்துபோ!" என்றது.

அம்மாவின் பேச்சைக் கேட்டு சட்டென்று சிறகை விரித்து ஆஷா பறந்து ஒரு மரத்தின் நுனிக் கிளையில் உட்கார்ந்தது. முதல்முறை பறந்ததால் உடலைச் சமநிலைக்குக் கொண்டுவர அது கஷ்டப் பட்டது. ஆனாலும், நான் வானில் பறக்கப் போகிறேன்! என்ற எண்ணம் அதற்கு உற் சாகத்தைக் கொடுத்தது.

கிளையிலிருந்து மேலெழும்பி ஒரு வீட்டின் சுவரில் உட்கார முயற்சித்தபோது தடுமாறிக் கீழே விழுந்தது.

அம்மா பிரவுனி பதறினாலும், அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் ஆஷா அருகே பறந்து வந்து, "முதல் முறை அப்படித்தான் இருக்கும். போகப் போகத் தரை இறங்கக் கற்றுக்கொள்வாய். ம்... பறந்து பழகு!" என்றது.

மீண்டும் எழுந்து ஆஷா பறந்தது. உயரமாகப் பறக்காமல் தாழ்வாகப் பறந்து தரையில் நிலைகொள்ளச் சீக்கிரமே பழகியது. அடுத்து, கொஞ்சம் உயரமாகப் பறந்தது. அப்புறம், இருப்பிடத்தைத் துல்லியமாக அடையாளம் கண்டு தனது கூடு இருக்கும் மரத்துக்கு ஆஷா வந்தடைந்தது.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த இன்னொரு காகக் குஞ்சான பிளாக்கிக்குச் சந்தேகம் வந்தது. ஆஷாவைப் போலப் பறக்க என்னாலும் முடியுமா? என நினைத்தது.

அப்போது அம்மா பிரவுனி அருகில் வந்து, "ஏய் பிளாக்கி! ஆஷாவைப் பார்த்தாயா? எவ்வளவு அழகாய்ப் பறக்கிறது! நீயும் போ" என்றது.

"அம்மா! என்னால் பறக்க முடியுமா?" என்று கேட்டது பிளாக்கி.

ஏன் முடியாது? உன்னோடு பிறந்தவள் தானே ஆஷா. அவள் பறக்கவில்லையா? எல்லோரும் பிறக்கும்போதே கற்றுக் கொண்டு பறப்பதில்லை. முயற்சி, செய்து தான் கற்றுக்கொள்ள முடியும் என்றது பிரவுனி.

''எனக்குத்தான் கறுப்பான கழுத்து இருக்கே. என்னால் எப்படிப் பறக்க முடியும்?"

''அதனால் என்ன? நிறத்துக்கும் பறப்பதற்கும் என்ன சம்பந்தம்?" என்றது பிரவுனி.

"இருக்கிறதம்மா. ஒரு நாள், மரத்தடியில் இரண்டு மனிதர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டேன். அதில் ஒருவன் சிவப்பாக இருந்தான். இன்னொருவன் கறுப்பாக இருந்தான். சிவப்பாக இருந்தவன், கறுப்பாக இருந்தவனை அடிமை போல நடத்தினான். கறுப்பு நிறம் உள்ளவர்களை திறமையற்றவர்கள் என்ற தொனியில் அவன் பேசினானே" என்றது பிளாக்கி.

"மனிதர்கள் பேசுவதை நாம் அப்படியே எடுத்துக்கொள்ளக்கூடாது. தங்கள் சுயநலத்துக்காகச் சிலரை இப்படி மட்டம் தட்டுவார்கள்" என்றது பிரவுனி.

மறு நாள்...

மழை வருவதற்கான அறிகுறி வானத்தில் தெரிந்தது. கருமேகங்கள் திரண்டன. சிறிது நேரத்தில் மழை கொட்டியது. அன்று முழுவதும் பெய்த மழை, மறுநாளும் தொடர்ந்தது. மனிதர்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள். இலை கிளைகளைத் தாண்டி கூட்டுக்குள்ளும் மழைத்துளிகள் விழுந்ததால் ஆஷா மறைவான இடத்துக்குப் பறந்து போனது. அம்மா பிரவுனியும் கிளம்பத் தயாரானது.

"பிளாக்கி! இப்போதாவது உன் பயத்தையும் தாழ்வு மனப்பான்மையையும் விட்டு விட்டுப் பறந்து வா!" என்றது பிரவுனி.

மழையில் நனைந்துகொண்டிருந்த பிளாக்கி எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தது. அதற்கு இன்னமும் பயம் விலகவில்லை. சில நொடிகள் காத்திருந்த பிரவுனியும் வேறு இடத்துக்குப் பறந்து போனது.

அந்த மரத்திலிருந்து சிறிது தூரத்தில் ஏரி ஒன்று இருந்தது. அது, மழை நீராலும், காட்டாற்று வெள்ளத்தாலும் நிரம்பி வழிந்தது. அதிக நீரின் அழுத்தத்தால் ஏரியின் கரை உடைந்தது. வெள்ளம் ஊருக்குள் நுழைந்தது. வந்த வேகத்தில் எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு போனது வெள்ளம்.


பிளாக்கியின் கூடு இருந்த மரம் அதிக வயதானது. அதனால் வெள்ளத்தின் வேகத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மரம் வேரோடு சாய்ந்தது. சாய்ந்த வேகத்தில் பிளாக்கியின் கூடு இருந்த கிளை முறிந்து வெள்ளத்தில் வேகமாக அடித்துச் செல்லப்பட்டது. பிளாக்கிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வெள்ள நீரில் நனைந்ததால் குளிரில் நடுங்கியது.

கிளை சென்ற வழியில் பெரிய பாறாங்கல் ஒன்று குறுக்கிட்டது. கிளை வந்த வேகத்தில் அந்தப் பாறாங்கல்லில் மோதினால் கூடு சுக்கு நூறாக உடைந்து விடும்.

அய்யோ, கூடு உடைந்துவிட்டால், தண்ணீரில் மூழ்கிவிடுவேனே? என்ற பயம் ஏற்பட்டதும், தன்னிச்சைச் செயலாக பிளாக்கி தனது சிறகுகளில் இருந்த நீரை ஒரு உதறு உதறியது. சட்டென்று தாவி வேகமாகச் சென்றுகொண்டிருந்த மரக்கிளையில் அமர்ந்தது. அடுத்து சட்டென்று சிறகை விரித்து வேகமாக மேலும் கீழுமாக அசைத்தது. அட, பிளாக்கி பறக்கிறது.

பறந்து சென்ற பிளாக்கி அருகிலிருந்த சிமெண்ட் மேடையில் உடலைச் சமநிலைப் படுத்தி இறங்கியது. ரொம்பத் தடுமாறியது. ஆனாலும் சுதாரித்துக்கொண்டது. வெள்ள நீர் அந்த சிமெண்ட் மேடையையும் மூழ்கடிக்க வாய்ப்பிருப்பதை உணர்ந்த பிளாக்கி, அங்கிருந்து பறந்து அருகிலிருந்த மரத்தின் கிளையில் சரியாக உட்கார்ந்தது.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# வெயிலின் கொடுமை



வெயிலோ வெயில்
வெப்பமான வெயில்
வீசுகின்ற காற்றும்
மறைந்து போனதால்
உடல் முழுவதும்
வியர்வைத் துளிகள்
பாடசாலை விட்டு
வீடு செல்லும்போது
கொதிக்கும் வெயிலில்
கலங்கி நிற்கின்றோம்
அம்மாவும் என் கூட
வெயிலில் வாடுகின்ற
நிலைதான் மாறாதா

*சு.ரிஷானிகா*

# வரலாற்றில் இன்றைய தினம்

1552 - குரு அமர்தாஸ் 3ஆவது சீக்கியக் குரு ஆனார்.
1636 - நெதர்லாந்து உற்றொக் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
1881 - தெஸ்ஸலி விடுவிக்கப்பட்டு, கிரீஸின் ஒரு பகுதியாக மீண்டும் இணைக்கப்பட்டது.
1931 - சுவிற்சர்லாந்தின் தேசிய விமான சேவையான சுவிஸ் ஏயர் தொடங்கப்பட்டது.
1931 - ஹோசிமின் இளைஞர் கம்யூனிஸ்ட் ஒன்றியம் வியட்னாமில் தொடங்கப்பட்டது.
1942 - இரண்டாம் உலக மகாயுத்தம். ஜேர்மனியர் நிலைகொண்ட போலந்து ஒஸ்விச் கைதிகள் தடுப்பு முகாமுக்கு முதற் தடவையாக கொண்டு வரப்பட்டனர்.
1971 - பாகிஸ்தானிலிருந்து சுதந்திரம் பெற்றதாக கிழக்கு பாகிஸ்தான் பிரகடனம் செய்தது.
1975 - உயிரியல் ஆயுதம் சம்பந்தமான பட்டயம் நடைமுறைக்கு வந்தது.
1979 - அன்வர் அல் சதாத், முக் மெனாசம் பெகின், ஜிம்மி கார்ட்டர் ஆகியோர் எகிப்து - இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்தில் வோஷிங்டனில் வைத்து கைச்சாத்து இட்டனர்.
1981 - இங்கிலாந்தில் சமூக ஜனநாயகக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது..
1991 - தென் கொரியாவில் மூன்று தசாப்தங்களின் பின்னர் மைய அதிகாரத்திலிருந்து உள்ளூர் சுய ஆட்சி முறை மீளக் கொண்டுவரப்பட்டது.
2002 - ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தில் 2000 பேர் உயிரிழப்பு
2008 - ஷியா போராளிகள், அமெரிக்க கூட்டுப்படை இடையே பாக்தாத் தென் நகரில் கடும் சண்டை.
2009 - இலங்கையின் மனிதாபிமான நிலை குறித்து ஐ.நா. செயலாளருடன் பிரிட்டன் பிரதமர் பேச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவிலூர் கலா



# பெண்களால் பெண்களுக்குப் பாதுகாப்பு

பெண்கள் மீதான வன்முறை என்பது முற்றுப்புள்ளியிடப்படாத தொடர்கதை, பன்முக வளர்ச்சியின் சிகரத்தைப் பெண்ணினம் தொட்டபோதும், வன்புணர்வுக் கலாசாரத்தால் அச்சத்தோடு வாழும் அவலம் இன்று நிலவுகிறது. பெண்களின் பாதுகாப்பு என்பது முயற்கொம்பே. சமுதாயத்தில் அரங்கேறுகின்ற பாலியல் வன்கொடுமைகளை உற்றுநோக்கின், பெண்களின் சுயம் ஆண்களால் அபகரிக்கப்படுகிறது என்பது தெளிவாகின்றது. அறிவு வளர்ச்சியில் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே பெண்கள் பறந்து சாதனை படைத்தபோதிலும், வன்கொடுமைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். அடுக்களைக்குள் முடங்கிய பெண்கள் அகிலத்தையே ஆள்கின்றனர். குடும்பம் தொட்டு சமுதாயம் வரை தமது சேவையை சுயநலமின்றி முழுமையாக வழங்குகின்றனர். ஆனாலும், சுயமாக வாழ முடியவில்லை. பெண்ணின் சக்தியை முழுமையாக உறிஞ்சும் ஆணினம் அவளது உடலையும் உள்ளத்தையும் வதை செய்வது ஏன்? பெண்ணின் உரிமைகள் மறுக்கப்படுவதுஏன்? அவளது உணர்வுகளை கொன்று போடுவது ஏன்? பெண்களைப் போகப் பொருளாகநினைத்துக் கிள்ளுக் கீரையாக முகர்ந்து ருசிக்கின்றனர். எத்தனையோ இளம் பெண்கள், சிறுமிகள் ஆண்களின் அருவருப்பான செயல்களுக்குப் பலியாகி படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மனநோயாளிகள் ஆகியுள்ளனர். சமுதாயத்தில் பெண்களுக்கான நீதி மந்தகதியிலேயே உள்ளது. நீதி தேவதையின் கண்கள் இறுக்கிக் கட்டப்பட்டுள்ளன. சட்டத்தில் நீதியின் பக்கங்கள் தூசு தட்டப்படாத நிலையிலேயே உள்ளன. பெண்கள் ஆண்களின் வன்கொடுமைகளுக்கு ஆளாகும் பரிதாப நிலை தொடருமானால், அவலங்களும், கண்ணீருமே சமுதாயத்தை அரவணைக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. பெண்களை வன்முறைகளில் இருந்து பாதுகாக்க வேண்டும். இன்று பாதுகாப்புப் பெண்களின் கட்டாயத் தேவையாகும்.

பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவது யார்? சிறு வயதில் பெற்றோரும், நடுவயதில் கணவனும், முதிர்வயதில் பிள்ளைகளும் பாதுகாப்பு வழங்க வேண்டும். பெற்றோர் சிறுவயதிலேயே பிள்ளைகள் மீதான அடுத்தவர் தொடுகைகளை தெளிவுபடுத்த வேண்டும். எந்த உறவாக இருப்பினும் ஆண்களின் உறவை, பிள்ளை நெருங்கிப் பழகுவதை, தனியே அழைத்துச் செல்வதைத் தடை செய்ய வேண்டும். பிள்ளையின் மனமாற்றத்தை, செயற்பாடுகளை அவதானிக்க வேண்டும். அண்ணா, அப்பா, மாமா, தாத்தா எல்லாமே ஆண் உறவுகள் என்பதையும், மூன்று வயதின் பின்னரான பெண் பிள்ளைகள் மீது அவர்களது தொடுகைகளையும் நிறுத்த வேண்டும். முடிந்த வரை எந்த ஆண் உறவுகளுடன் தனித்திருப்பதைத் தவிர்ப்பது நல்லது. பருவம் அடைந்த பெண் பிள்ளைகள்கூட, ஆண் உறவுகளுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும். இன்று அனேகமான பெண் பிள்ளைகளின் தப்பான நடத்தைகளுக்கு பெற்றோரே காரணமாகின்றனர். பெண் பிள்ளைகளுக்கான ஆண்களின் உறவுக்குச் சந்தர்ப்பம் பெற்றோராலேயே ஏற்படுகின்றது. வீட்டில் தாய்மகள் உறவு நல்லதொரு நட்புறவாக இருக்க வேண்டியது கட்டாயமாகும். ஒளிவு மறைவு இல்லாத அன்பான உறவாக இருக்க வேண்டும்.

பருவப் பெண்கள் தமக்கான பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்த வேண்டும். வீட்டை விட்டு வெளியே செல்லும்போது எங்கு, எதற்காக செல்கிறீர்கள் என்கிற உண்மையை பெற்றோரிடம் கூறிவிட்டுச் செல்லுங்கள். நட்புறவுகளை இனங்காணுங்கள். ஆண் நட்புகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தனியாக நீண்டதூரப் பயணம் செய்வதையும் நட்புறவுகளுடன் பயணம் செய்வது, விடுதிகளில் சந்திப்பது, இரவுநேரப் பயணம் போன்றவை வேண்டவே வேண்டாம். கைபேசிக்கான ஏரிஎம் அட்டை ஒன்றுபோதும். அதுவும் பெற்றோர் அனுமதியுடன் வைத்திருக்க வேண் டும். அநாமதேய அழைப்புக்களைக் கவனத்தில் கொள்ளாதீர்கள். பேருந்துகளில் பயணம் செய் யும்போது, சீண்டல் உரசல்களுக்குத் தயாராக நிற்கும் ஆண்களை அடக்கவும், உரிய தண்டனை வழங்கவும் எப்போதும் தயாராக இருங்கள். ஆகவே, பெண்களே, உங்களுக்கு மட்டுமல்ல உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பாதுகாப்பைக் கொடுங்கள். அடுத்தவர்களிடமோ, சட்டத்திடமோ பாதுகாப்புக்கு கையேந்துவதை விடுத்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள். பாதுகாப்பு என்பது பாரச்சுமையல்ல. அது அமைதியான அடக்கமான வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளது. எனவே, நேரிய பாதையில் பயணியுங்கள். பெண்களோடு பெண்களாகக் கைகோர்த்து நின்று உரிமைக்காகப் போராடுங்கள். பெண்மையை மாசுபடுத்த பெண்களே எழுந்துவிடாது, பெண்மையை மேன்மைப்படுத்த நேரிய வழியில் நடவுங்கள். பெண்களே நீங்கள் தயாரா...?

## மன்னிப்பது மகத்தான குணம்




இறை தூதரான இயேசு பூலோக மக்களின் துன்பங்களையெல்லாம் ஏற்று மீட்சி அளிக்கும் பொருட்டு இந்த மண்ணில் வந்துதித்தார்.

அவர் பாவிகளுக்கு மீட்சி அளித்தார். துன்பங்களைச் சுமந்து நின்றவர்களுக்கு ஆதரவு நல்கினார். ஏழை, எளிய மக்களின் அவல நிலை கண்டு இரங்கிய இயேசுபிரான் அவற்றையெல்லாம் களைந்து அருளாட்சி புரிந்தார்.

சவுக்கடிகள் அவரது புனித மேனியை ரணகளமாக்கின. தான் அறையப்படப்போகும் பாரமான சிலுவையை அவரே தாங்கிச் சென்றார். சவுக்கடிபட்டு இயேசுவின் உடலிலிருந்து குருதி வடிந்தது. அந்த நிலையிலும் தன்னைச் சவுக்கால் அடித்தவர்களை அவர் சபிக்கவில்லை. மாறாக ஆண்டவரே இவர்களை மன்னித்துவிடும். இவர்கள் தாம் என்ன செய்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளாத நிலையில் உள்ளனர். இவர்களை மன்னித்தருள வேண்டும் என அவர் ஆண்டவரிடம் வேண்டினார். இயேசுவின் சகிப்புத்தன்மை எமக்கெல்லாம் என்றும் வழிகாட்டி நிற்க வேண்டும். எமக்குத் துன்பம் விளைவிப்போர்களைத் தண்டிப்பதற்கு நாம் முயற்சி செய்யக்கூடாது. இதற்கு மாறாக அவர்களை மன்னித்துவிட்டால் ஆண்டவரும் எமது குற்றங்களை மன்னித்துவிடுவார்.

# தீவிரவாதத்தின் பிடியில் சிக்கியுள்ள பெல்ஜியம்

பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்சல்ஸ் விமான நிலையத்தைக் குறி வைத்துத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 35 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தாக்குதலை அடுத்து ஐரோப்பிய நாடுகள் அச்சத்தில் உறைந்துள்ளன. தீவிரவாதிகளின் அடுத்த இலக்கு எந்த நாடு என்று தெரியாமல் ஐரோப்பிய நாடுகள் விழி பிதுங்கிப் போயுள்ளன.

பெல்ஜியத்தைத் தீவிரவாதிகள் தேர்ந்தெடுக்க வேறொரு காரணமும் இருக்க வாய்ப்பு உண்டு.

ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள இஸ்லாமியப் பின்னணிக்கும் பெல்ஜியத்தில் உள்ள இஸ்லாமியப் பின்னணிக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. இங்கு உள்ளூர் மதத்தலைவர்கள் (இமாம்) குறைவாகவே உள்ளனர். பெரும்பாலும் வெளிநாட்டிலிருந்து வருகிறார்கள் இவர்கள். ஐரோப்பியப் பின்னணியோடு ஒன்றுவதைவிட சவூதி அரேபியா போன்ற நாடுகளிலுள்ள மதச்சார்பு எண்ணங்களை பெல்ஜிய இளைஞர்களிடையே விதைக்கிறார்கள்.

மேலும், பெல்ஜியத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அவ்வளவு பலமாக இல்லை என்கிறார்கள். நேட்டோ உட்பட பலவித சர்வதேச அமைப்புகளின் தலைமையகமாக விளங்கும் பெல்ஜியத்துக்கு அதற்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. சமீபத்திய புள்ளி விவரத்தின்படி சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள ஜிகாதிகளுக்கு ஆதரவாகப் போரிட பெல்ஜியத்திலிருந்து 250 பேர் சென்றிருக்கிறார்கள்.

பாரிஸ் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் மூன்று பேராவது பெல்ஜியத்தில் வசித்தவர்கள் என்று செய்தி கிடைத்தது. பாரிஸ் தாக்குதல் நடைபெறுவதற்கு மூன்று நாள்களுக்கு முன் பெல்ஜியத்தின் பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சர் ஜென் ஜம்போன் இது குறித்துப் பேசினார். அரசின் சவால்களில் ஒன்றாக உருவாகியுள்ளது பெல்ஜியம் இன ரீதியாகப் பிரிந்திருப்பது -என்றார்.

காவல்துறையினரும் மாவட்ட மேயர்களும் ஒருவருக்கொருவர் சரியான தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதில்லை- என்றார். அத்துடன் தீவிரவாதக் குழுக்களில் சேரும் பெல்ஜிய நாட்டைச் சேர்ந்தவர்கள், வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் அல்ல, உள்நாட்டுக்காரர்கள். அவர்களது குடும்பங்கள் தலைமுறைகளாக பெல்ஜியத்தில் வாழ்ந்தவை. எனவே, அவர்களின் கடவுச் சீட்டுக்களை முடக்கி வைப்பதில் அதிகாரிகளுக்குத் தயக்கம் இருக்கிறது.

பாரிஸ் தாக்குதல்களுக்கு மூல காரணமாகச் செயற்பட்ட அப்தெல் அகமது அபவட் என்ற 27 வயது இளைஞன் பெல்ஜிய நாட்டுக் குடிமகன் என்று அறிவித்துள்ளனர் பிரான்ஸ் அதிகாரிகள்.

பாரிஸ் பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியதில் இப்ராஹிம் அப்டெஸ்லாம் என்பவர் இறந்திருக்கிறார். முகமது என்ற மற்றொருவர் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளார். சலா என்ற மூன்றாவது நபரைப் பிடிக்க பொது மக்களின் உதவியை நாடியுள்ளது பொலிஸ். அவன் மிகவும் அபாயகரமானவன். எந்தச் சூழலிலும் நீங்கள் அவனை நேரடியாகக் கையாள வேண்டாம். காட்டிக் கொடுங்கள் போதும் என்று பொது அறிவிப்புக்களை வெளியிட்டிருக்கிறது.




ஜிகாதிகளுடன் பெல்ஜியத்துக்கு உள்ள தொடர்பு முன்பு வேறொரு விதத்திலும் வெளியானது உண்டு.

முறியல் என்ற பெண்மணி (அதற்கு முந்தைய காலகட்டத்தில் இஸ்லாமுக்கு மாறியவர்) மனித வெடிகுண்டாக மாறி பலரை இறக்கவும் வைத்தார்.

தீவிரவாதத்துக்கு எதிராகத் தீவிர நடவடிக்கைகளை எடுப்பதில் சில சிக்கல்கள் இருப்பதை அந் நாட்டின் பிரதமர் சார்லஸ் மிஷேல் ஒத்துக் கொண்டிருக்கிறார். நாங்கள் இன்னும் சிறப்பாகச் செயற்பட வேண்டும். தீவிரவாதத்துக்கு எதிராகப் பல புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஒத்துக் கொள்கிறோம் -என்றார்.

பல வருடங்களாகவே நீதித்துறைக்கும், பொலிஸ் துறைக்கும் அதிக பட்ஜெட்டை பெல்ஜியம் ஒதுக்க வேண்டும் என்ற குரல்கள் தலைதூக்கி வருகின்றன. என்றாலும், சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் அதற்கெல்லாம் பெல்ஜியம் அரசு செவி சாய்க்காமல் இருந்து வந்திருக்கிறது.

இன்னொரு முக்கிய சிக்கலும் இதில் இருக்கிறது. அந்த நாட்டின் பொலிஸார், தேசத்தின் எல் லைகளைத் தாண்டிச் செல்ல முடியாது. அப்படி எந்த ஒப்பந்தமும் அவர்களை அனுமதிப்பதாக இல்லை. ஆனால், தீவிரவாதிகளால் பெல்ஜிய எல்லையை எளிதில் தாண்டிச் செல்ல முடிகிறது. காரணம் செங்கன் நுழைவு விசைவு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 2 | 3 | | |
| 1 | | | | | 7 | 8 | | |
| | 7 | 2 | 3 | | | | 5 | |
| 5 | | 9 | | | | | 8 | |
| | | | | | | | | |
| | 4 | | | | | 5 | | 1 |
| | 2 | | | | 3 | 7 | 4 | |
| | | 8 | 7 | | | | | 3 |
| | | 7 | 5 | | | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 2 | 6 | 7 | 4 | 5 | 9 | 1 |
| 7 | 9 | 1 | 5 | 8 | 2 | 6 | 3 | 4 |
| 4 | 5 | 6 | 1 | 3 | 9 | 8 | 7 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 1 | 8 | 9 | 6 | 5 |
| 5 | 8 | 7 | 2 | 9 | 6 | 1 | 4 | 3 |
| 1 | 6 | 9 | 4 | 5 | 3 | 2 | 8 | 7 |
| 9 | 1 | 8 | 3 | 2 | 7 | 4 | 5 | 6 |
| 6 | 7 | 5 | 9 | 4 | 1 | 3 | 2 | 8 |
| 3 | 2 | 4 | 8 | 6 | 5 | 7 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ரஜினியைப் பற்றி புத்தகம் எழுதும் ஐஸ்.

தனுஷ் நடித்த "3", கௌதம் கார்த்திக் நடித்த "வை ராஜா வை" படங்களை இயக்கினார், ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யா தனுஷ். புதிய படம் இயக்குவதை நிறுத்தி வைத்திருக்கும் அவர், தற்போது ரஜினி பற்றிய புத்தகம் ஒன்றை எழுதுகிறார்.

இதுபற்றி ஐஸ்வர்யா கூறியது:- எனது தந்தை பற்றிய உண்மைப்பதிவுகளை புத்தகமாக எழுதுகிறேன். சிறு வயதிலிருந்து அவரிடமிருந்து எனக்கு கிடைத்த அன்பு, அறிவுரை போன்றவை இதில் அடங்கி இருக்கும். இதுவொரு நாள்குறிப்பு என்றும் கூறலாம்.

கடந்த 5 வருடமாக எழுதி வருகிறேன். சில நண்பர்கள் படித்தபோது, அவர்கள் தான் இதைப் புத்தகமாக வெளியிட பரிந்துரை செய்தனர். புத்தகத்தில் நகைச்சுவை உணர்வும் பொதிந்திருக்கும். ஆனால், முழுமையாக அது மட்டுமே இருக்காது, ஏனென்றால் நான் நகைச்சுவையான ஆள் கிடையாது. எனக்குத் தத்துவங்கள் அதிகம் பிடிக்கும். எனது தந்தை நிறையத் தத்துவங்களை எனக்கு விளக்கியுள்ளார். அந்தப் பாணியுடன் கோபம், நன்றியுணர்வு எனப் பலதரப்பட்ட உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் புத்தகம் இருக்கும். இவ்வாறு ஐஸ்வர்யா கூறியுள்ளார்.



## புறாவின் வாய் ஜாலம்!

சாலமன் மிகப்பெரிய அறிவாளி. அவருக்குப் பறவைகள் மற்றும் மிருகங்கள் பேசும் மொழியும் புரியும். ஒருமுறை அரண்மனையில் உட்கார்ந்து கொண்டு வெளியே பார்த்தார். இரு புறாக்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்தன. அப்போது ஆண் புறா, பெண் புறாவிடம் கோபமாக, "என்னை என்னவென்று நினைத்தாய்? நான் மனம் வைத்தால் இந்த மன்னரின் அரண்மனையையே இடித்து நிர்மூலமாக்கி விடுவேன்" என்று கூறியது. இதனைக் கேட்ட சாலமன் மன்னர், அந்த ஆண் புறாவைத் தனது அருகில் அழைத்தார். அருகில் வந்த புறாவிடம், "என்ன புறாவே.... இந்த அரண்மனையை இடித்து விடுகிறேன் என்றாயே.... எப்படி உன்னால் முடியும்?" என்று கேட்டார். அதற்கு அந்த ஆண்புறா, "மன்னரே.... என்னால் எப்படி முடியும்? ஏதோ எனது மனைவியைத் திருப்தி செய்ய அப்படிக் கூறினேன். அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாதீர்கள்" என்று கூறிவிட்டு தனது மனைவியிடம் சென்றது. "மன்னர் கூப்பிட்டாரே.... எதற்குக் கூப்பிட்டார்?" என்று பெண் புறா கேட்டது. "நான் அரண்மனையைத் தகர்த்து விடுவேன் என்று உன்னிடம் சொன்னதை மன்னர் கேட்டுப் பயந்து விட்டார். எனவே தான் என்னைக் கூப்பிட்டு அப்படியெல்லாம் செய்து விடாதே... என்று என்னிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்" என்றதாம் ஆண்புறா. புறாவுக்குக் கூட மனைவி என்றால் இளக்காரம்.... ம்... ம்.. ம்...



படித்ததில் பிடித்தது

### பெண்களுக்கு



காஞ்சிப் பட்டு
சாமுத்ரிகா பட்டு
பனாரஸ் பட்டு

### ஆண்களுக்கு



துன்பப் பட்டு
துயரப் பட்டு
கஷ்டப் பட்டு



**உங்களை உங்கள் சம்பளம் பணக்காரர் ஆக மாற்றாது. உங்களின் செலவிடும் குணம்தான் உங்களை பணக்காரராக மாற்றும்.**

**நாட்டுப்புறத்தான்**
தன் எதிரியை வீழ்த்தி தான் வெற்றி பெறுவது மடத்தனம்...
தன் எதிரியை வீழ்த்த இன்னொருவரை வெற்றி பெற வைப்பது கோமாளித்தனம்!

**அன்ரனி**
குடிசையில் வாழ்ந்த நாள்களில் இருந்த நிம்மதி மாடியிலே ஏனோ கிடைக்கவில்லை !!!







**மேடம்:** செயல்களில் நேர்மை வெளிப்படும். தொழில் உற்பத்தியால், விற்பனை பெருகும். பணவரவு அதிகரிக்கும். சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



**இடபம்:** குடும்பத்தினர் உங்களின் நற்குணத்தை அறிந்து கொள்வர். தொழிலில், நிலுவைப் பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். பணவரவு திருப்திகரமாகும். பெண்கள், ஆடை அணிகலன் வாங்குவர்.



**மிதுனம்:** பணிகளில் கவனக்குறைவு ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, நண்பர்கள் உதவுவர். பெண்கள், ஆடம்பரச் செலவு செய்ய வேண்டாம். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.



**கடகம்:** நண்பர் மனதில் நல்ல மாற்றத்தை உருவாக்குவீர்கள். தொழில், வியாபாரம், மந்த கதியில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும். புத்திரரின் நற்செயல், மனதை மகிழ்விக்கும்.



**சிங்கம்:** மனதில், புத்துணர்வும் நம்பிக்கையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனம் செய்வீர்கள். நிலுவைப்பணம் கிடைக்கும். உறவினர் வருகையால், குடும்ப மகிழ்ச்சி கூடும்.



**கன்னி:** சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழிலில் இலக்கை அடைய, கால அவகாசம் தேவைப்படும். பணச்செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்ப்பது நல்லது.



**துலாம்:** அனைவரிடமும் இனிமையாகப் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.



**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழிலில், உற்பத்தி, விற்பனை செழிக்க, அதிக உழைப்புத் தேவைப்படும். குடும்பத்துக்கான பணச்செலவு கூடும். வெளியூர்ப் பயணம் நன்மையைத் தரும்.



**தனுசு:** உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில், விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் அழகுணர்வுடன் செயற்படுவர். மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.



**மகரம்:** எதிராகச் செயற்பட்டவர் விலகிச் செல்வர். தொழிலில், எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.



**கும்பம்:** நண்பரின் ஆலோசனையால், நன்மை அடைவீர்கள். தொழில் சீராக, நேரம் தவறாமையைப் பின்பற்றுவது அவசியம். மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், ஆடம்பரச் செலவு செய்வதைத் தவிர்க்கவும்.



**மீனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகலாம். தொழிலில், சீரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



**நாளை**
**பங்குனி -14**
ஞாயிற்றுக்கிழமை 27.03.2016
திதி: சதுர்த்தி பி.இ.01.30 வரை
நட்சத்திரம்: விசாகம் பி.இ.05.03 வரை
ராகுகாலம்: 04.44-06.14 வரை
சுபநேரம்: 09.14-10.44 வரை
சங்கடஹர சதுர்த்தி

## ஆபரண கிளிப்



இது புதுசு



ஆபரண அமைப்பில் கிளிப்புகள் அறிமுகம். புராதன தலை அலங்காரப் பொருள்களைப் போன்று கற்கள் பதித்த கிளிப்புகள் வெவ்வேறு நிறங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 90 ரூபா ஆகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொழும்பு | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 750 | 800 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 600 | – | – |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | 400 | 300 |
| விளை | 600 | 500 | 400 | 500 | 450 | 300 | 350 |
| முரல் | 300 | 300 | 350 | 450 | 300 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | – | 250 |
| கிளாக்கன் | 500 | 200 | – | – | 400 | – | – |
| ஓரா | 400 | 350 | – | – | 300 | 400 | – |
| திரளி | 250 | 200 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 200 | – | – | 300 | – | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 250 | 200 | 150 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | – | 120 |
| மதனம் | 150 | 200 | 180 | 350 | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 100 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 400 | 350 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 250 | – | 300 |



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 80 | 50 | 40 | 40 | 40 | 20 | 25 |
| கத்தரி | 80 | 40 | 100 | 80 | 80 | 120 | 60 | 80 |
| கரட் | 80 | 100 | 80–200 | 80 | 80 | 200 | 80 | 80 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 100 | 80 | 100 | 80–100 | 120 | 70 | 50 |
| பாகல் | 150 | 100 | 140 | 120 | 120 | 160 | 100 | 110 |
| கருணைக்கிழங்கு | 100 | 70 | 80 | – | 70 | – | 50 | 20 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 70 | 80 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 80 | 60 | 80 | 60 | 65 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 40 | 60 | 25 | 35 |
| தக்காளி | 40 | 40 | 30 | 60 | 40 | 80 | 25 | 25 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 40 | 60 | 45 | 40 |
| கீரை | 40 | 50 | 40 | 20 | 40 | 40 | 20 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 25 | 40 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 100 | 130 | 120 | 120 | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 | 60 | 60 | 30 | 50 |
| கோவா | 40 | 60 | 50 | 80 | 60 | 80 | 35 | |
| வெண்டி | 80 | 60 | 60 | 80 | 80 | 60 | 60 | 60 |
| போஞ்சி | 150 | 120 | 120 | 160 | 120 | 120 | 75 | 70 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 140 | 100 | 160 | 70 | 70 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 30 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 70 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 140 | 140 | 160 | 110 | 110 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 140 | 120 | 160 | 70 | 80 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 160 | 160 | – | – | 110 |
| முருங்கைக்காய் | 700 | 350 | 800 | 400 | 300 | – | 350 | 400 |
| பனங்கிழங்கு | 05 | 05 | – | – | 07 | – | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமைக்கும் போது

- எண்ணெய், கடுகு, கறிவேப்பிலை, பெருங்காயம், பச்சை மிளகாய் அல்லது செத்தல் மிளகாய், உளுத்தம்பருப்பு முதலியவைகளைத் தாளித்து, நறுக்கிய காய்களைப் போட்டு உப்பு, மஞ்சள்பொடி போட்டு, மூடி வைத்து, வெந்தவுடன் அரைக்கப் துருவிய தேங்காய் போட்டு, வதக்கினால், எந்தவித சாம்பார், ரசம் கூடவும் சாப்பிட ஏற்ற இணை உணவாக இருக்கும். விற்றமின்களும், நார்ச்சத்தும் நிறைந்தது.
- சோடா உப்பு சமையலில் சேர்த்தால் அது விற்றமின் சத்துக்களை அழித்து விடுமாதலால் கூடுமானவரை சேர்க்காமல் இருப்பதே நலம்.
- கேக் செய்ததும் ஓவனிலிருந்து உடனேயே வெளியில் எடுக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் மிக உஷ்ணமான பகுதியிலிருந்து உடனே அறை உஷ்ணத்துக்கு மாற்றப்படுவதால், நடுவில் குழிவு ஏற்படும்.கேக் பேக் செய்யும்போது, அடிக்கடி ஓவன் கதவைத்திறந்து திறந்து மூடினாலும் இதேகதிதான்.கேக் கலவை மிகவும் தளர இருந்தாலும் இவ்வாறு நடுவில் குழி ஏற்படும்.




### தேவையானவை

ஆட்டுக்கால் - 4
சீரகம் - 2 தேக்கரண்டி
வெங்காயம் - 4
தக்காளி - 1
மிளகு - 3 தேக்கரண்டி
இஞ்சி - 1 துண்டு
பூண்டு - 10 பல்
மஞ்சள் தூள் - 1 சிட்டிகை
உப்பு - சிறிது

### செய்யும் முறை

- ஆட்டுக்கால்களைச் சுத்தம் செய்து அடுப்பில் வைக்கவும்.
- மிளகு, சீரகம், வெங்காயம், பூண்டு, இஞ்சி ஆகியவற்றை விழுதாக அரைத்து அடுப்பில் வைக்கவும்.
- தேவையான அளவுக் குத் தண்ணீர் ஊற்றி, நறுக்கிய வெங்காயம், தக்காளி, மஞ்சள் தூள், உப்புச் சேர்த்து அடுப்பில் வைக்கவும்.
- 8 முதல் 10 விசில்கள் வைத்து வேக விடவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி, சோம்பு, கறிவேப்பிலை போட்டு தாளித்து வேக வைத்த ஆட்டுக் கால் சூப்புடன் சேர்த்துப் பரிமாறவும்.

# நுட்பம்



## வெகு விரைவில் அறிமுகமாகிறது அப்பின் புதிய மடிக் கணினி

அப்பிள் நிறுவனமானது, கடந்த வருட இறுதியில் 12 அங்குல அளவை உடைய அல்றா தின் மடிக் கணினியை அறிமுகம் செய்திருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் 13 அங்குல அளவு மற்றும் 15 அங்குல அளவுகளை உடைய அல்றா தின் மடிக் கணினிகளை அறிமுகம் செய்யவுள்ளது.

கடந்த வருடம் அறிமுகம் செய்யப்பட்ட 12 அங்குல மடிக்கணினிகள் சில்வர், கோல்ட் மற்றும் ஸ்பேஸ் கிறே ஆகிய 3 வர்ணங்களில் வடி வமைக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது அறிமுகம் செய்யப்படவுள்ள மடிக்கணினிகள் இவற்றுக்கு மேலதிகமாக றோஸ் கோல்ட் வர்ணத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பான மேலதிக தகவல்கள் எதிர்வரும் ஜூன் மாதம் இடம்பெறவுள்ளமாநாட்டில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நு)



## நீர் இன்றிச் செயற்படும் அதி நவீன கழிப்பறை

கடந்த 2012ம் ஆண்டு மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் தனது மெலின்டா கேட்ஸ் பவுண்டேசன் ஊடாக நனோ மெம்பிறேன் கழிப்பறையை உருவாக்கும் முயற்சியை ஆரம்பித்து வைத்தார்.

கிறான்பீல்ட் பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்துக்காக சுமார் 710,000 அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

ஐந்து வருடங்களின் பின்னர் தற்போது குறித்த முயற்சி வெற்றியளித்துள்ளது. நீர் இன்றிச் செயற் படக்கூடிய இந்தக் கழிப்பறை மனிதக் கழிவிலிருந்து சக்திகளை பிறப்பிக்கவல்லது.

மிகவும் மலிவான விலையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தக் கழிப்பறை நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மார்ச் 22ஆம் திகதி உலக நீர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் உலகெங்கிலும் 2.4 பில்லியன் மக்கள் நீர்ப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாகவும், இவ்வாறானவர்களுக்கு இந்த நவீன கழிப்பறைகள் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நு)

# "கூல் கேஷ்" நிகழ்ச்சியை அறிமுகமாக்கிய ஸ்பிரைட்

கொக்கா-கோலா நிறுவனத்தின் இரண்டாவது பாரிய குளிர்பான வகையான ஸ்பிரைட், அண்மையில் தமது அற்புதமான கூல் கேஷ் நிகழ்ச்சியைத் தமது கிரீட பரப்புரையின் கீழ் அறிமுகப் படுத்தியது. 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம்திகதி வரை இதற்கான பரப் புரைக் காலமாகும். தற்போது நுகர்வோர் ஸ்பிரைட்டின் குளிரான மற்றும் புத்துணர்ச்சி தரும் தோடம்பழ மற்றும் எலுமிச்சைச் சுவைப் பானத்தை சுவைக்க முடியும். அத்துடன், மொத்தமாக ரூ.10 மில்லியன் பெறுமதியான பணப் பரிசுகளையும் வெல்ல முடியும்.




கொக்கோ-கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்காவின் பொது விவகாரங்கள் மற்றும் தொடர்பாடல் முகாமையாளர் லக்ஸான் மதுரசிங்க மற்றும் மேல் மாகாண வருமான வரித் திணைக்களத்தின் சிரேஷ்ட வரி அதிகாரி ரி.ஏ.வை.பி. தென்னக்கோன் ஆகியோரினால் பியகமவில் அண்மையில் முதலாவது பரிசுக் குலுக்கல் நடத்தப்பட்டது.

175 மி.லீ மற்றும் 300 மி.லீ ஸ்பிரைட், கொக்கோ-கோலா, பென்டா ஓரஞ்ச், பென்டா போர்ட்டலோ, பென்டா கிறீம் சோடா மற்றும் லயன் சோடா 300 மி.லீ போத்தல்களை வாங்குபவர்கள் இந்த நாடளாவிய நிகழ்ச்சியில் பங்கு பற்ற முடியும். ரூ. 20, ரூ. 50 அல்லது. ரூ. 100 குறியீட்டுடன் தங்கக்கிரீடத்தைக் காண்பவர்கள், குளிர்பானம் வாங்கிய இடத்திலேயே அந்த தொகையை கழித்துக் கொள்ள முடியும். இதற்கு மேலதிக பெறுமதியாக, எமது தங்கக்கிரீடம், த.பெ 6, பியகம என்ற முகவரிக்கு அனுப்பி வைத்து, நாளாந்தம் ரூ. 100,000 பாரிய பரிசுக் குலுக்கலில் கலந்து கொள்ள முடியும். பரப்புரைக் காலப்பகுதி முழுவதிலும், வாராந்த குலுக்கலில் தலா ஒருவருக்கு ரூ. 100,000 வழங்க வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர்;.

இதில் கலந்து கொள்வதற்கு எந்தவொரு விற்பனையாளரிடம் இருந்தாவது ஸ்பிரைட் குளிர்பானத்தை வாங்கி, தங்கக்கிரீடத்தைக் கண்டறிய வேண்டும். உடனடிப் பணப் பரிசுகளை வெல்வதற்கு அனைத்துத் தங்கக்கிரீடங்களையும் பயன்படுத்த முடியும் (குளிர் பானம் வாங்கிய கடையிலேயே அதனைக் குறைத்துக் கொள்ள முடியும்). அத்துடன், நுகர்வோர் தமது தங்கக்கிரீடத்தை பாரிய குலுக்கலில் கலந்து கொள்வதற்கும் பயன்படுத்த முடியும். தாகத்தைத் தணிப்பதற்கான பிரபலமான அனைவரதும் தெரிவாக ஸ்பிரைட் உள்ளது. எவ்வித கலப்புமின்றி, நேர்மையான மற்றும் தூய்மையான உளப்பாங்குடன், இளைஞர்களின் தெரிவுப்பானமாகக் கட்டமைத்துள்ளது. நாடெங்கிலும், உலகெங்கிலும் பெரும் எண்ணிக்கையிலான நுகர்வோரின் இதயங்களை வென்றுள்ளது.

இந்தப் பரப்புரை நிகழ்ச்சி குறித்து கருத்துத் தெரிவித்த கொக்கோ-கோலா பார் ஈஸ்ட் லிமிடட் ஸ்ரீலங்காவின் வதிவிட முகாமையாளர், சோனு க்ரோவர், கொக்கோ-கோலா உற்பத்திகளில் அதிகம் விரும்பப்படும் பானங்களில் ஒன்றான ஸ்பிரைட்டுக்கான கிரீடத்துக்கு கீழே நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துவதில் நாம் மகிழ்ச் சியடைகின்றோம். பல தசாப்தங்களாக நுகர்வோரின் புத்துணர்ச்சிக்கான உயரிய தெரிவாக ஸ்பிரைட் உள்ளது. அத்துடன், சந்தோசம் மற்றும் இளம் உணர்வைத் தரும் உற்பத்தியாக அது உள்ளது. எமது உற்பத்தியின் விற்பனையை இந்த நிகழ்ச்சி பேணும் அதேவேளை, இலங்கையில் ஸ்பிரைட் உற்பத்திகளின் புதிய உத் வேகத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் என நாம் நம்புகின்றோம் என்றார்.

இந்த நிகழ்ச்சிக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், தேவையான அனைத்து தரப்பும் மாபெரும் பரிசுக் குலுக்கலுக்காக விண்ணப்பிக்க முடியும். அத்துடன், அனைத்து வெற்றியாளர்களுக்கும் தொலைபேசி ஊடாக தகவல் அறிவிக்கப்படும். உலகின் பிரபல மான தோடம்-எலுமிச்சை சோடா வகையாக ஸ்பிரைட் உள்ளது. உலகிலும், இலங்கையிலும் கொக்கோ-கோலா உற்பத்திகளின் மிகவும் முக்கியமான அங்கங்களில் ஒன்றாக உள்ளது. உள்ளூரில், நாடெங்கிலும் நுகர் வோருக்கு ஸ்பிரைட் புத்துணர்ச்சியை பல தசாப் தங்களாக வழங்கி வருகின்றது. (நு)

# டிமோ அனுசரணையில் மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்பு

இலங்கையில் முன்னணி வகிக்கும் மோட்டார் வாகன நிறுவனங்களுள் ஒன்றான டிமோ இந்த வருடத்தின் பிற்பகுதியில் ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெறவுள்ள உலகின் மிகப் பெரிய மாணவர் மோட்டார் விளையாட்டுப் போட்டியான போர்முலா ஸ்ருடன்ற் 2016 இல் பங்கேற்கவுள்ள மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இயந்திரவியல் பொறியியல் பிரிவைச் சார்ந்த பொறியியல் மாணவர்களுக்கு அனுசரணையளிக்க முன்வந்துள்ளது.



இயந்திரவியல் பொறியியலாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற போர்முலா ஸ்ருடன்ற் போட்டியானது ஐரோப்பாவில் இடம்பெறுகின்ற மிகவும் பிரபலமான கல்விசார் மோட்டார் விளையாட்டுப் போட்டியாகத் திகழ்வதுடன், தொழிற்றுறை மற்றும் பிரபல பொறியியலாளர்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உலகெங்கிலுமுள்ள பல்கலைக்கழக பொறியியல் பட்டப் படிப்பு மாணவர்கள் மத்தியில், நிலையான மற்றும் பெரிய நிகழ்வுகளில் போட்டியிடக்கூடிய தனி ஆசனம் ஒன்றைக் கொண்டுள்ள பந்தயக் கார் ஒன்றை வடிவமைப்புச் செய்து, அதனைத் தயாரித்து, போட்டியிடும் வகையில் சிறந்த புரிந்துணர்வையும், பந்தயக் கார் தொடர்பான பெறுபேற்றுத்திறனையும் சோதித்து, அதற்கமைவாகச் சிறந்த காரை வடிவமைக்கும் போட்டியாக இது ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

போர்முலா ஸ்ருடன்ற் போட்டிகளில் பங்குபற்றிய பழைய மாணவர்களுள் பல டசின் கணக்கானோர் போர்முலா 1 போட்டிகளில் கலந்து கொள்ளும் அளவுக்குத் தமது திறமைகளை வளர்த்துக் கொண்டுள்ளதுடன், மேலும் பல நூற்றுக்கணக்கானோர் உலகில் முன்னணி வகிக்கும் மோட்டார் வாகன நிறுவனங்களில் பணிபுரிந்து வருவதுடன், எதிர்காலத்திற்கு உகந்த கார் வண்டிகளை வடிவமைப்பதற்கும் உதவி வருகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் உலகம் முழுவதிலுமுள்ள அணிகளிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதுடன், பிரித்தானியாவில் மோட்டார் விளையாட்டுக்களின் தாயகம் என்று பேசப்படும் அளவுக்கு பிரசித்தி பெற்ற சில்வர்ஸ்ரோன் சேர்கிற்றில் போட்டியிடுவதற்கு 156 அணிகள் வெற்றிகரமாகத் தமது இடங்களை உறுதி செய்துள்ளன.

மொரட்டுவைப் பல்கலைக்கழத்தின் சார்பில் கலந்து கொள்ளும் சார்க் அணி, போர்முலா ஸ்ருடன்ற் போட்டியில் இலங்கையிலிருந்து கலந்துகொள்ளும் முதலாவது அணியாகத் திகழ்வதுடன், இதற்கான முற்றுமுழுதான அனுசரணையை டிமோ வழங்கவுள்ளது. காரை வடிவமைப்பதற்குத் தேவையான நிதியுதவியை நிறுவனம் வழங்கவுள்ளதுடன், ஜூலையில் இடம்பெறவுள்ள போட்டியில் கலந்துகொள்ளும் அணியை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளுக்கும் உதவும். மேலும், இந்தக்காரை வடிவமைப்பதற்கு சியம்பலாபே என்ற இடத்திலுள்ள டிமோ தொழிற்சாலை வளாகத்திலுள்ள வசதிகள் அனைத்தையும் ரீம் சார்க் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினையும் வழங்கும். (நு)

வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்ட கணவர் இன்றுவரை வீடு திரும்பவில்லை

## மனைவி கண்ணீருடன் சாட்சியம்

முல்லைத்தீவு. மார்ச் 26
விடுதலைப்புலிகளிடம் பாஸ் எடுத்து வெளிநாடு செல்வதற்காக வவுனியா சென்ற வேளை, விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டவர் இன்றுவரை வீடுதிரும்பவில்லை என்று காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக் குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது,

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில், அவரது மனைவி இவ்வாறு சாட்சியமளித்துள்ளார்.

இதன்போது, அவர் தனது சாட்சியத்தில்:-

எனது கணவன் முன்னர் விடுதலைப் புலிகளிடம் பாஸ் எடுத்து வெளிநாடு செல்வதற்காக வவுனியா சென்ற வேளை, இயக்கத்தில் இருந்தனியா என்று இராணுவத்தினர் விசாரித்தனர். இதனால் பயத்தின் காரணத்தால், எனது கணவனான தர்மலிங்கம் தர்மேந்திரன் திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் விசாரித்துவிட்டு விடுவதாக கூறி கூட்டிச் சென்றார்கள். அதன் பின்னர் இன்றுவரை அவரைக் காணவில்லை.

எழுத்துக்கொப்பி, பிள்ளைகளின் புகைப்படம் எல்லாவற்றையும் காட்டி நான் திருமணம் செய்து எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள், வெளிநாடு செல்வதற்காகவே வந்தேன் என்று கூறிய போதும், விசாரித்துவிட்டு விடுவதாகக் கூறியே அழைத்துச் சென்றனர்.

இங்கிருந்து கடந்த 2008 ஆம் ஆண்டுஏப்ரல் 30 ஆம் திகதி சென்றவர். அதே ஆண்டும் மே மாதம் 4ஆம் திகதி என்னுடன் போன் கதைத்தவர். மறுநாள் கைது செய்யபப்பட்டார். சின்ன வயதில் விடுதலைப்புலிகளில் இணைந்து



பின்பு விலகி வந்து வருவாய்த் துறையில் கணக்காளராக வேலை செய்தவர். பின்னர் வவுனியாவில் வரிளடுத்தவர். பின்னர் விலகி கடைசியாக தச்சுப் பட்டறையை நடத்தி வந்தார்.

அப்பா வருவார் என்று பிள்ளைகளும் எதிர்பார்த்துக்கொண்டு தான் இருக்கின்றனர். அவர்கள் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். நாங்களும் நம்பிக்கையோட தான் இருக்கிறோம் என தனது சாட்சியத்தில் தர்மேந்திரன் சசிகலா கண்ணீருடன் முறையிட்டார்.

(வ-4,ரி7)

---

### போர்க்குற்ற

போரின் போதும், அதன் பின்னரும் சில அரசியல் தரப்புகள் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தவே முயற்சித்து வருகின்றனர். போர் காரணமாக உறவுகளைப் பிரிந்தவர்கள், காணாமற்போனவர்கள் வடக்கு, கிழக் கில் மட்டும் இல்லை. தெற்கிலும் இருக்கின்றார்கள்.

புதிய அரசு உண்மையைக் கண்டறிவது தொடர்பிலான பொறிமுறைமையை உரு வாக்கி வருகின்றது. கடந்த காலங்களில் வெறுமனே ஆணைக் குழுக்கள் நியமிக்கப் பட்டபோதிலும், உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றார். (த-வ-சி)

### மக்களுக்கு

இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை – சம்பூர் பிரதேசத்தில் கடற்படை முகாம் இருந்த சம்பூர் மகா வித்தியாலயம், ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளும், விநாயகர் ஆலயம், விவசாய சம்மேளனக் கட்டடம், பலநோக்கு கூட்டுறவுச்சங்கக் கட்டடம், நூல் நிலையம், மூதூர் பிரதேச சபை, உப அலுவலகம் உள்ளிட்ட பல பொதுக்கட்டடங்களும், 546 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளும் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று சம்பூர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஷீர் அஹமட் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இந்நிகழ்வில் உரையாற்றுகையில்:-

சம்பூரைச் சேர்ந்த பலர் தினமும் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அனல்மின் நிலையம் பற்றிய பிரச்சினைகளைக் கலந்துரையாடுகின்றனர். நான் நினைத்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனோ அல்லது பிரதமருடனோ அல்லது இந்தியப் பிரதமருடனோ கலந்துரையாடி அனல் மின் நிலையத்தை நிறுத்தியிருக்கலாம். ஆனால், சம்பந்தன் ஐயா இதைச் செய்கிறார் இல்லை என அவர்கள் கூறுகின்றனர்.

அனல் மின் நிலையம் தொடர்பிலும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலும் நான் விசாரித்துள்ளேன். இதனால், இரண்டு வகையான பாதிப்புகளே ஏற்படும். நிலக்கரியை எரிப்பதால் ஏற்படும் தூசியும், இதனால் பரவக்கூடிய சாம்பல் ஆகியனவே இப் பாதிப்புகளாகும். எனவே, இவ்வாறான தீமைகள் ஏற்படவும் எமது மக்களுக்கு அநீதி ஏற்படவும் நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம்.

சுற்றுப்புறச்சூழல் தொடர்பாக, அரசுக்கும் எமக்கும் பல பொறுப்புகள் உள்ளன. இந்தவிடயம் தொடர்பாக மீண்டுமொரு முறை சம்பூர் மக்களை நாம் சந்திப்போம். அப்போது மக்களின் கருத்துகள் தொடர்பிலும் நிபுணர்களின் கருத்துகள் தொடர்பிலும் ஆராயப்படும். இந்தவிடயம் தொடர்பாக அனைவரும் நிதானமாகச் சிந்திக்கவேண்டும்.

திருகோணமலை மாவட்டத்துக்குப் பல்வேறு புதிய திட்டங்கள் பல நாடுகளின் மூலம் கிடைத்த வண்ணமுள்ளன. அண்மையில் சிங்கப்பூர் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் என்னை இரண்டு தடவைகள் சந்தித்துள்ளார். திருகோணமலை மாவட்டத்தில் அபிவிருத்தி தொடர்பாக பெரியளவிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளனர். இவ்வாறான திட்டங்கள் இலங்கைக்கு இன்று தேவை – என்றார். (வ-சி)

### சீன

அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

அத்துடன், குறித்த சீன அதிகாரிகள் குழுவினர், இலங்கை விமானப் படையின் சில தளங்களுக்கும் சென்று பார்வையிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

எனினும், சீன உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளின் பயணத்தின் நோக்கம் குறித்த தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

இதேவேளை, இந்தப் பயணம் தொடர்பான தகவல்களை இருநாடுகளும் இரகசியமாக வைத்திருந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### ஐ.எஸ்.

வருடத்தில் இலங்கையிலிருந்து சிரியாவுக்கு ஆள்களை வரவழைக்க முடியுமாக இருந்தமையும், அவ்வாறானவர்கள் மூலம் இலங்கையில் தொடர்புகளை வைத்திருக்க முடியுமாக இருந்தமையும் இந்தமுறை வரைபடத்தில் இலங்கையைச் சேர்ப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளதாகக் குறித்த ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (வ-5)

### பாதிக்கப்பட்ட

மிகவும் அவசியமானது.

உலகில் பாதிப்புகளை எதிர்நோக்கிய தனிப்பட்ட நபர்கள் மற்றும் தரப்புகள் உண்மையை அறிந்துகொள்ள உரிமையுடையவர்கள். வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் மீளவும் இடம்பெறாமல் இருப்பதைத் தடுக்கவேண்டியது மிகவும் அவசியமானது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-சி)

### கல்லாறு

கல்லாறு கடற்கரை பகுதியில் தூக்கி எறிந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளனர். இதனால் சுமார் 14 பொதிகளில் அடைக்கப்பட்ட கேரளா கஞ்சாப்பொதிகளை மாத்திரம் மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சாப்பொதிகள் சுமார் 51 கிலோ 500 கிராம் எடை கொண்டன எனவும், சுமார் 52 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்தவை எனவும் மன்னார் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தற்போது, குறித்த கஞ்சாப் பொதிகள் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும்,குறித்த கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி உதவி பொலிஸ் பரிசோதகர் எச்.எம்.டபிள்யு.ஹெரத் தெரிவித்தார்.

கஞ்சாக் கடத்தலானது யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களின் கரையோரங்களில் தாராளமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-4,56)

### மூளைக்

சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தான்.

எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை 8.30 மணி அளவில் உயிரிழந்தான். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணையை மேற்கொண்டார். (வ-4)

### நான்கு

பொதுமக்கள் நண்பகல் 12 முதல் 3 மணிவரை வெளியே நடமாடுவதைக் குறைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளைக்கு 3 லீற்றருக்கு குறையாமல் தண்ணீர் குடிக்க வேண்டும். மாமிச உணவுகளைத் தவிர்த்து மரக்கறி மற்றும் பழங்கள் சேர்ந்த உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும்.

குளிர்ந்த நீரில் அடிக்கடி உடம்பை கழுவுவதுடன், வீட்டின் உட்புற வெப்ப நிலையினைக் குறைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். இவற்றைத் தொடராத விடத்து, உடலுறுப்புக்களின் செயலிழப்பு, திடீர் மயக்கம் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-சி)

---

ஓம்விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்கள்

### சிவலோகநாதன் ஸ்ரீசங்கர்

(தனுஷன் ஜீவல்லறி - சாவகச்சேரி)



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் ஸ்ரீசங்கர் 24.03.2016 வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் சிவலோகநாதன் - சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், செல்வராசா - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகனும் கௌசல்யாவின் பாசமிகு கணவரும் ஸ்ரீசுதர்சினி, ஸ்ரீதுஷ்யந்தி (ஆஸ்திரேலியா), குகரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சொரூபநாதன், தயாளன்(ஆஸ்திரேலியா), யசோதை (யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்), இராகுலன் (சவுதி), கோகிலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் துரைராசா (தேங்காய் வியாபாரி), சுசீலாதேவி, தர்மராசா, சொர்ணமலர் ஆகியோரின் மருமகனும் கிருஷ்ணசாமி, ஜெயதேவி ஆகியோரின் பெறாமகனும் மாலினி (லண்டன்), குணசீலன், சிந்துஜா, நிலோஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் டேனுஜா, லோஜனா, சதீஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கம்சவேணி, தரண்ஜன், ஹர்சிகா, ஹஸ்விகா ஆகியோரின் அன்பு மாமனாரு மாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
எஸ்.துரைராசா(தாய் மாமன்)
தேங்காய் வியாபாரி - சாவகச்சேரி

### கணபதிப்பிள்ளை இராமநாதன்



இந்துக்கல்லூரி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், பென்சில்வேனியா அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராமநாதன் கடந்த (14.03.2016) திங்கட்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாதேவன்(பராசக்தி விலாஷ் - அநுராதபுரம்), கந்தசாமி, லோகநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரனும், யசோதரதேவி, பவானி, வாணிஸ்ரீ ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீதேவி, ஸ்ரீமோகன், கீர்த்தனா ஆகியோரின் சித்தப்பாவும், தர்மிகாவின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அவரது இல்லமான வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக்கல்லூரிவீதி,
வடலியடைப்பு,பண்டத்தரிப்பு.

(70835)
(11,10)

தகவல்:
சகோதரன்
க.கந்தசாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் மூத்த உறுப்பினரான

**V.ஞானகுரு**

(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)

அவர்கள் தென்னிந்தியா, திருச்சியில் காலமான செய்தி கேட்டு எமது சங்கத்தின் சார்பில் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் (வடபகுதி)**



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
02 . 02 . 1946

மறைவு
25 . 02 . 2016

கடந்த 25.02.2016 சிவபதமடைந்த

அமரர் **நாகேஸ்வரி சின்னத்துரை**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (26.03.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அந்நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

121/1, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


# பொது மக்களின் உரிமைகளை மறுப்பதுதான் நல்லாட்சியா?

## சாந்தி எம்.பி. கேள்வி



யாழ்ப்பாணம், மார்ச் 26

பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்து, அவர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்து அவர்களின் உரிமைகளை மறுப்பது தான் நல்லாட்சியா?

இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ் காந்தராசா.

இராணுவத்தினரால் பல்வேறுபட்ட வகையிலும் ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகின்ற கேப்பாப்பிலவு கிராமத்து மக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் தொடர்பில், அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இங்கு பூர்வீகமாக வாழ்ந்த மக்களை வெளியேற்றி, அந்தமக்களின் வாழ்க்கையை முடக்கும் வகையில் செயற்படுகின்றனர். வீதிப்போக்குவரத்துக்களை முடக்கி, அந்த மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கும், தமது தொழில்களை செய்து வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் பெரியளவில் தடையாக இராணுவம் இருந்துவருகின்றது.

கேப்பாபிலவு கிராமசேவகர் பிரிவின் சூரிபுரம், கேப்பாபிலவு, பிலவுகுடியிருப்பு ஆகிய மூன்று கிராமங்களிலுள்ள 520 ஏக்கர் காணி, இராணுவத்தினரின் கைவசம் உள்ள நிலையில், இந்தக் கிராமங்களைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், மாதிரிக் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றன.

மீள்குடியேற்றம் இடம்பெற்று ஏழு வருடங்கள் கடந்தும், இராணுவத்தினர் பயன்படுத்திவருகின்ற புதுக்குடியிருப்பில் இருந்து கேப்பாப்பிலவினூடாக வற்றாப்பளை செல்கின்ற 3 கிலோ மீற்றர் வரையான வீதியானது, மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாத நிலையில், குறித்த பகுதி மக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளுக்காக தூரம் கூடிய செப்பனிடப்படாத பாதுகாப்பற்ற மாற்று வழியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் குறித்த வீதியை மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கமுடியாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளமையின் மூலமாக, தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகள் மீதான மட்டுப்பாடுகளை இந்த அரசு மேற்கொள்கின்றது என்பதற்கு இது சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். இதனை நாம் எதிர்க்கின்றோம். எமது மக்களின் இயல்பு வாழ்வை பறிக்கும் குறித்த செயலானது கண்டனத்திற்குரியதாகும். அந்த வீதி மக்கள் போக்குவரத்துக்காக அனுமதிக்கப்பட வேண்டும்.

கேப்பாப்பிலவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள், பாடசாலை, பொதுமண்டபம், கோயில்கள், வீதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக காணப்படும் பெருமளவான நிலப்பரப்புக்களும் விடுவிக்கப்பட்டு எமது மக்கள் தமது சொந்த நிலங்களில் இயல்பு வாழ்க்கை வாழ வழியேற்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, அந்தப்பகுதி மக்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

உண்மையில் கடந்த அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டதாக பொய்ப்பரப்புரை செய்ததைப்போலவே, தற்போதைய அரசும் தம்மை நல்லாட்சி என்று கூறிக்கொண்டு எமது மக்களை தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்குள்ளாக்கி வருகின்றது. எமது மக்களின் காணிகளும் நிலங்களும் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிற்குள் தொடர்ச்சியாக இருந்து வரும் நிலையானது, நல்லாட்சி அரசுக்கோட்பாட்டிற்கு எதிர்மறையான இயல்புகளையே வெளிப்படுத்துகின்றன. இந்த நிலையானது தமிழ் மக்களின் மனங்களில்அரசின் மீதான அதிருப்தி அலைகளைத் தோற்றுவித்துள்ளது.

இன்றும் எமது மக்கள் தமது நிலங்களுக்காக போராடி வருகின்ற இந்தச் சூழ்நிலையில் இனவாத சிந்தையுடையோர் எமது மக்களின் சாத்வீக போராட்டங்களை திசைதிருப்பிவிட முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர். எமது மக்கள் இன்றும் தமது சொந்த நிலங்களையே கோரி போராடுகின்றனர். இதனைக்கூட இந்த அரசால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை. பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்து அவர்களின் வாழ்வாதாரத்தைப் பறித்து அவர்களின் உரிமைகளை மறுப்பதுதான் நல்லாட்சியா? என அந்த அறிக்கையில் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

(வ-4)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
18 . 11 . 1937

உதிர்வு
27 . 02 . 2016

அமரர் திருமதி

**துளசிஅம்மா (துளசி) ஆறுமுகசாமி**

கடந்த 27.02.2016 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி துளசிஅம்மா (துளசி) ஆறுமுகசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி ஊறணி தீர்த்தக் கடற்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொத்தியால் லேன்,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

(65960)(10.17.18)


# அதிகரித்த வெப்பநிலை தொடர்பில் கர்ப்பிணித் தாய்மார்கள் அவதானம்

## எச்சரிக்கிறார் மருத்துவ வல்லுநர் ருவான் சில்வா

கொழும்பு, மார்ச் 26

நாட்டில் தற்போது வெப்ப நிலை அதிகரித்துள்ள நிலையில், கர்ப்பிணிப் பெண்கள் தமது சாதாரண உடல் வெப்பநிலை அதிகரித்தால், அது கருவை பாதிக்கும் என மகப்பேற்று மருத்துவ வல்லுநர் ருவான் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கர்ப்பிணித்தாய்மாரின் உடல் வெப்பநிலை 38 பாகை செல்சியஸ் அல்லது அதற்கு மேல் உயர்வடைந்தால், கரு கலையக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. 38 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் கர்ப்பிணிகள் நான்கு மணித்தியாலத்திற்கு மேல் இருந்தால், அது கருவில் இருக்கும் சிசுவைப் போன்றே தாய்மாரையும் பாதிக்கும். அதிக வெப்ப நிலை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தடுக்க கர்ப்பிணி தாய்மார் அதிகளவு நீரைப் பருக வேண்டும் - என்றார்.

இதேவேளை, கடந்த 136 ஆண்டுகளை ஒப்பிடும்போது, கடந்த பெப்ரவரி மாதம் தான் அதிகளவு வெப்பம் பதிவாகியுள்ளதாக நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், கடந்த 136 ஆண்டுகளை ஒப்பிடும் போது, கடந்த மாதம்தான் அதிகளவு வெப்பம் பதிவானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஜனவரி மாதத்தில் வழக்கத்தைவிட 1.14 பாகை செல்சியஸ் வெப்பம் கூடுதலாக பதிவானதாகவும், அது பெப்ரவரி மாதத்தில் 1.35 பாகை செல்சியஸாக அதிகரித்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 136 ஆண்டுகளை ஒப்பிடும் போது, பெப்ரவரி மாதத்தில் பதிவானது அதிகளவு வெப்பநிலை என நாசா தெரிவித்துள்ளது.

மனிதர்களால் வெளியான அசுத்த வாயுக்களால், பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டு, புவியில் வெப்பம் அதிகரித்ததாகவும், எல்நினோ காரணமாக இந்த பருவநிலை மாறுபாடு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

1880ஆம் ஆண்டு முதல் உலக அளவிலான வெப்ப நிலை மாற்றம், மழை அளவு உள்ளிட்டவை பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யவும்

## வலியுறுத்துகிறது ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியரைத் தாக்கும் விதத்தில் ரவுடிக் கும்பலினால், ஆசிரியரின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட காடைத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த தாக்குதலில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைது செய்து, சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் எனவும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:-

மாணவர்களின் நலன் சார்ந்து ஆசிரியர்கள் சில தண்டனைகளை வழங்கும்போது, அதனை மாணவர் உரிமை மீறலாக நடைமுறைப்படுத்தும் நீதித்துறையானது, மாணவர்களினால் ஆசிரியர்கள் தாக்கப்படக்கூடிய அளவுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் தரப்பினருக்கு உரிய தண்டனைகளை வழங்கி, எதிர்காலத்தில் தமிழ் மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியம் சிதைவடையாத வகையில் முன்னுதாரணமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியரினை அச்சுறுத்தும் விதத்தில் வாள்களுடனும் பொல்லுகளுடனும் ரவுடிக்கும்பல், அவரது வீட்டில் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறித்த தாக்குதலில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைது செய்து, சட்டத்தின் முன்நிறுத்தவேண்டும். எதிர்காலத்தில் ஆசிரியர்கள் அச்சுறுத்தலின்றி பணியாற்றக்கூடிய சூழலை நீதித்துறையும் ஏற்படுத்தி கொடுக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-4)



# ஏ-9 வீதியை மறித்து நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, மார்ச் 26

வவுனியா - கலாபோகஸ்வெல கிராமத்துக்கான பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி ஏ-9 வீதியை மறித்து நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா சிங்களப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமல் உள்ளது.

இதனால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்து, அப்பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், ஊர்வலமாகச் சென்று வீதியை மறித்தும் போக்குவரத்துத் தடையையும் ஏற்படுத்தினர்.

மாமடுச் சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஹொரவப் பொத்தான வீதி வழியாக ஊர்வலமாகச் சென்றனர்.

அத்துடன், வவுனியா மணிக் கூட்டுக் கோபுரப் பகுதி மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 5 மணி நேரமாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் அசம்பாவிதங்கள் இடம்பெறாமல் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை அந்த இடத்துக்கு வருகை தந்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் கந்துன் நெத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(கு-ஐ-4)

## மரண அறிவித்தல்

### கதிரிப்பிள்ளை நடராசா



புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி கொட்டகேனா கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை நடராசா 23.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தேவியின் பாசமிகு கணவரும் சந்திராதேவி (நோர்வே), சந்திரபவானி, அருள்நேசன் (நோர்வே), காலஞ்சென்ற சந்திரலோசினி மற்றும் ஆனந்தராஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, இரத்தினம், சின்னம்மா, செல்லத்துரை ஆகியோரின் சகோதரனும் கேசவன்(நோர்வே), மகேந்திரன், புஸ்பலட்சுமி (நோர் வே), நேசரஜனி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஜதுசிகா, ஜான்சிகா, கேதாரணி-சயந்தன், காலஞ்சென்ற லக்ஷன் மற் றும் பிருதுஷன், அருஷன், ராகவி, கவின்லேஸ், ரஜீவன் ஆகியோரின் பேரனும் வேணுஜன், சிவானி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை புன்னாலைக் கட்டுவனில் உள்ள அவரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக் கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


ஆயாக் கடவை
பிள்ளையார் கோயிலடி,
புன்னாலைக் கட்டுவன் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இரட்ணசபாபதி சுந்தரலிங்கம்

பிறந்த திகதி- 29.05.1932 இறந்த திகதி- 25.03.2016



கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், நீலியம்பனை மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணசபாபதி சுந்தரலிங்கம் நேற்று (25.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் சாந்தநாயகி, புண்ணியமூர்த்தி, சத்தியவதி ஆகியோரின் சகோதரனும், றாஜினி (ஜேர்மனி), சுகுமார் (கனடா), இராஜகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் சுரேஸ்குமார் (நோர்வே) ஆகியோரின் அன்புத்தந்தையும் கதிரமலைநாதன், குமுதினி, றஜினி, லக்மாலி ஆகியோரின் மாமனாரும் கோகுலன், துஸ்யந்தி, ஜெனார்த்தனன், மோனுஷா, பற்றிக், டிஸான், சுஜேனா, சஞ்ஜய், அஜய் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
றாஜினி (ஜேர்மனி) 004924529779595
சுகுமார் (கனடா) 004162993965
இராஜகுமார் (சுவிஸ்) 0041796881758
சுரேஸ்குமார் (நோர்வே) 004735603002

தகவல்:
குடும்பத்தினர்.
021 224 1004
(70274)(15.17)

## மரண அறிவித்தல்



### திருமதி பார்வதி வைரவநாதன்

நகுலேஸ்வரா வீதி, கீரிமலை யைப் பிறப்பிடமாகவும், லண்டன் South Hall ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி வைரவநாதன் கடந்த 14.03.2016 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் வைரவநாதனின் (முன்னாள் உரிமையாளர் - திருப்பதி ரெக்ஸ் நவீன சந்தை - யாழ்ப்பாணம், உரிமையாளர் - பிரகலாத் பவன் சைவ உணவகம் கீரிமலை) அன்பு மனைவியும் பிரகலாதன் (கண்ணன் - கனடா), அருண் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை மற்றும் சுப்பிரமணியம், இராசமலர் காலஞ்சென்ற பேபி மற்றும் வைரவநாதன், திருநாவுக்கரசு (திருணன்), நவரட்ணம் (நவம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் செல்லமுத்து, இராசம்மா காலஞ்சென்ற அன்னபாக்கியம் மற்றும் இராஜரட்ணம், பாக்கியலட்சுமி, யோகேஸ்வரி காலஞ்சென்ற கந்தேஸ்வரி மற்றும் சின்னத்தம்பி, சுசிலாதேவி (சுசிலா), சறோஜினி (சறோ) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

தகவல்:
வைரவநாதன் (கணவர்)
கண்ணன், அருண் (மகன்மார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், மார்ச் 26

**இளைஞர் வி.கழகத்தின் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டிசிவகுமரன்விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து சிறி அம்பாள் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து சக்கோட்டை சில்வெஸ்ரர் அணி மோதவுள்ளது.

**தாச்சிச் சங்கத்தின் தொடர்**

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில், பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எத்ர்த்து மயிலிட்டிகலைமகள்விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பெஸ்ட் ஹோம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து 'பி' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் தமிழ் ஒளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை மாயகலட்டி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில்தாவடிகாளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை 'பி' விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23-108)

# வென்றது கிறாஸ்கொப்பர்ஸ்

மாங்குளம், மார்ச் 26

கே.ஸி.ஸி.ஸி. வி.கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுபெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 30 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அஜீத் 78 ஓட்டங்களையும், சரண்ராஜ் 21 ஓட்டங்களையும், கோகுலன் 15 ஓட்டங் களையும் பெற்றனர். பதிலுக்கு துடுபெடுத்தாடிய விக்டோரியன் அணி 26.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 156 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக லோஜன் 34 ஓட்டங்களையும், பிரணவன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-422)

# கிண்ணம் வென்றது சென்.பற்றிக்ஸ் யாழ். வலய கால்பந்தாட்டத்தில்





யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். கல்வி வலய கால்பந்தாட்டத்தொடரில் 19 வயது ஆண்கள் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரிஅணிகிண்ணம்வென்றது.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. எந்த அணியும் தனித்து ஆதிக்கம் செலுத்தாத காரணத்தினால் கோல் கணக்குகள் ஆரம்பிக்கப்படாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியிலும் சம நிலைத் தன்மையென்பது நீடித்துக் கொண்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவடைந்து விட்டபோதிலும், கோல் எதுவும் பதிவாகாததால் சம நிலைத் தவிர்ப்பு உதைகளின் மூலம் கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச்சம்பியனானது. (ம-23)

# அரையிறுதியில் ஞானம்ஸ் நாவலரை அபாரமாக வீழ்த்தி

கரணவாய், மார்ச் 26

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத்தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை நாவலர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நாவலர் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரஜீவன் 22 ஓட்டங்களையும் சோமு 14 ஓட்டங்களையும் பிரகாஸ் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பானு மற்றும் ஸ்ருவன் இருவரும் தலா 2 இலக்குகளையும் சுதன் மற்றும் சுயாந்தன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

76 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நாவலர் விளையாட்டுக் கழகம், ஞானம்ஸ் அணியின் பந்துவீச்சுக்கும் களத்தடுப்பு வியூகங்களுக்கும் முகம் கொடுக்க முடியாமல் 50 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

அதிகபட்சமாக வினோ 11 ஓட்டங்களையும், சின்னா 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சோமு 3 இலக்குகளையும், ஜொனி, தீபன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-108)

# இறுதியில் உடுவில் சலஞ்சர்ஸ்; இமையாணன் மத்தியின் தொடரில்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் பொற்பதி அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகமும் உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம். இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது அந்த அணி. அதிகபட்சமாக பவி 50 ஓட்டங்களையும், சித்து 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தீபன் 3 இலக்குகளையும் ஜோனஸ், சுபாஸ் இருவரும்தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

85 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப்பெற்றுவெறும் 2 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக றொசான் 42 ஓட்டங்களையும், சத்தியா 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரதி சுரேந்திரன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-108)



இலங்கை கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்திஅடைந்த வடமாகாண மத்தியஸ்தர்களுக்கான சன்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி.மனேகரன் தலைமையில் பண்ணையில் அமைந்துள்ள நன்னடத்தை சிறுவர்கள் பாரமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆஸ்திரேலிய அணியின் வெற்றியால் அரையிறுதியை இழந்தது பாகிஸ்தான்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஆஸ்திரேலியாவின் இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பை இழந்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. கவாயா, பின்ஞ் இணை அவ்வளவாக திருப்தி தரவில்லை. 21 ஓட்டங்களுடன் கவாயாவை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் ரியாஸ். 9 ஓட்டங்களுடன் வோர்ணரும் ரியாஸின் பந்துவீச்சில் போல்ட் செய்யப்பட ஆஸியின் ஆரம்பம் ஆட்டம் கண்டது. இமாட் வசிமிடம் போல்ட் ஆனார் பின்ஞ். முதல் மூன்று இலக்குகளும் போல்ட் முறையில் அமைந்தமையால் ஆஸியின் ஏனைய வீரர்கள் சிறிது நிதானிப்பார்கள் என்று வர்ணனையாளர்கள் கணித்திருந்தாலும், பதட்டத்தை வெளிப்படுத்தாது விளையாடினார் சிமித். சிமித்தின் இன்னிங்ஸில் சிக்சர்கள் இருக்கவில்லை. ஆனால் அடிக்கொருதடவை பவுண்டரிகளை விளாசினார். மக்ஸ்வெல்லும் தாக்குப்பிடிக்க நான்காவது இலக்கை இழக்காமல் 12.1 பந்துப்பரிமாற்றங்களில் நூறு ஓட்டங்களை எட்டியது ஆஸ்திரேலியா. 35 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் சிமித். மக்ஸ்வெல் ஆட்டமிழக்க வற்சன் பின்வரிசையில் மிரட்டினார். முன்வரிசை வீரர்களால் வீணடிக்கப்பட்ட பந்துகள் வற்சனால் சரிசெய்யப்பட முடிவில் ஆஸ்திரேலியா 193-4. அதிகபட்சமாக சிமித் ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும், வற்சன் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரியாஸ், இமாட் வசிம் இருவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக்களமிறங்கியது பாகிஸ்தான். ஒரே ஓட்டத்துடன் செசாட் ஆட்டமிழந்தார். இருப்பினும் சர்ஜீல் கான், லடிவ் இருவருமாக இணைந்து நம்பிக்கை கொடுத்தனர். இருப்பினும் இணைப்பாட்டம் நீடிக்க அனுமதிக்கப்படவில்லை. 30 ஓட்டங்களுடன் சர்ஜீலை போல்ட் செய்தார் பல்க்நெர். லடிவ் ஓர் முனையில் நிலைத்து நின்றது ஆறுதலாக அமைந்த போதிலும் அவரது ஆட்டத்தில் இலக்கை எட்டும்படியான சராசரி இருக்கவில்லை. 4 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் லடிவ். அச்சுறுத்திய உமர் அக்மலை வெளியேற்றினார் சாம்பா. மலிக் ஓர் முனையில் இருநூறுக்கும் அதிகமான சராசரியில் சென்றாலும் மறுமுனை பலவீனமாகவே அமைந்தது. இதனால் 20 பந்துப் பரிமாற்றங்களில் பாகிஸ்தான் 8 இலக்குகள் இழப்புக்கு 172 ஓட்டங்களை மட்டுமே பெற்று 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக லடிவ் 46 ஓட்டங்களையும், மலிக் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும், உமர் அக்மல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணியின் சார்பாக பல்க்நெர் 5 இலக்குகளையும், சாம்பா 2 இலக்குகளையும், கசில்வூட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பல்க்நெர் ஆட்டநாயகனானார். (ம)

## தாச்சித்தொடரின் முடிவுகள்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நடத்திவரும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்:

ஆனந்தா விளையாட்டுக்கழக அணிக்கும், சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி 6:4 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றிபெற்றது. உதய தாரகை மாவை கலட்டி அணிக்கும் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக 'பி' அணி 3:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் அரியாலை காந்தி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் மல்வம் ஞானபிரகாசம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணி 11:4 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றிபெற்றது.

இணுவில் அறிஞர் விளையாட்டுக்கழக அணிக்கும் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தென்றல் விளையாட் டுக்கழக அணி 4:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## வல்வை, நவசக்தி அடுத்த சுற்றுக்குள்

கரணவாய், மார்ச் 26

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் வல்வை விளையாட்டுக் கழகம் மற்றும் நவசக்தி விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் குறித்த தொடரில் இளைஞர் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகமும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய வல்வை அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக் கழகமும் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பம் முதல் இறுதிவரை பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் இடம் பெற்ற ஆட்டத்தில் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நவசக்தி. (ம-108)

## போட்டிகள் பிற்போடப்பட்டன

கரணவாய், மார்ச் 26

கரவெட்டி இளைஞர் கழகங்களுக்கு இடையில் இன்று சனிக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு நடத்தப்படவிருந்த போட்டிகள்யாவும் இளைஞர்களுக்கிடையிலான ஜோன்ஸ்புற நிகழ்ச்சி காரணமாக மறுஅறிவித்தல் வரும் வரை பிற்போடப்பட்டுள்ளதாக இளைஞர் சேவை அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை-ஏனைய போட்டிகள் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-108)

# தென்மராட்சி தடகளத்தில் வளர்மதி சம்பியனானது

சாவகச்சேரி, மார்ச் 26

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளத் தொடர்களில் ஒட்டு மொத்த புள்ளிகளின் அடிப்படையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இரண்டாமிடத்தை மீசாலை சீமா விளையாட்டுக் கழகம் தனதாக்கியது.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட் டுக் கழக மைதானத்தில் நடை பெற்ற இந்தப் போட்டிகளில் கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் முதல் இரு இடங்களை முறையே நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழகம், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் என்பனவும், கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் முதல் இரு இடங்களை முறையே மட்டுவில் ஞானதீபம் விளையாட்டுக் கழகம், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் என்பவும் தமதாக்கின.

எல்லேத் தொடரில் முதலிரு இடங்களை முறையே மீசாலை நியூபவர் விளையாட்டுக் கழகம், மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் ஆகியன கைப்பற்றின.

துடுப்பாட்டத் தொடரில் ஆண் கள் பிரிவில் முதலிரு இடங்களை முறையே மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம் என்பனவும் பெண்கள் பிரிவில் முதலிரு இடங்களை முறையே மீசாலை சீமா விளையாட்டுக் கழகம், மட்டுவில் வளர்மதி விளையாட் டுக் கழகம் என்பனவும் கைப்பற்றின.

கபடித் தொடரில் முதலிரு இடங்களை முறையே மீசாலை நியூபவர் விளையாட்டுக் கழகம், சாவகச்சேரி டிறிபேக் தாரகை விளையாட்டுக் கழகம் என்பனவும், வலைப்பந்தாட்டத்தில் முதலிரு இடங்களை முறையே மீசாலை சீமா விளையாட்டுக் கழகம், வரணி இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பனவும், கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் முதலிரு இடங்களை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், மீசாலை சிறி விநாயகர் விளையாட்டுக் கழகம் என்பனவும் கைப்பற்றின.

கழகங்கங்களுக்கிடையிலான போட்டிகள் மட்டுமல்லாமல் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவ மாணவிகளின் தற்காப்பு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் கா.சண்முகதாசனும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை கிராம அலுவலர் க.வாமதேவன் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் ச.கிருஸ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-9

# சம்பியனானது யாழ். மத்தி

மாங்குளம்,மார்ச்26

யாழ். கல்வி வலய கால்பந்தாட்டத் தொடரில் 17வயதுப்பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி நடப்பு வருடத்தின் சம்பினானது.



யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண் டது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் கிடைத்த வாய்ப்புக்களை இரு அணிகளும் தவறவிட சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணம் தீர்மானமாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் யாழ். மத்திய கல்லூரி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் இறுதிவரை போராடியது தெ.ஆபிரிக்கா



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 3 இலக்குகளால் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய தென்னாபிரிக்காவின் ஆரம்ப வீரர்களாக அம்லா மற்றும் குயின்டன் டி ஹொக். ஒரே ஓட்டத்துடன் ரண்அவுட் ஆனார் அம்லா. பிளாசிஸ் 9 ஓட்டங்களுடனும், ரொஸ்சொவ் ஓட்டமெதனையும் பெறாமலும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 20 ஓட்டங்களுக்குள் 3 இலக்குகளை இழந்து நெருக்கடியில் சிக்கியது தென்னாபிரிக்கா. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நெருப்பெடுக்கும் வில்லியர்ஸால் கூட நேற்று பெரிதளவில் முடியவில்லை. அவர் வெறும் 10 ஓட்டங்களுடன் பிராவோவிடம் சிக்கினார். 47 ஓட்டங்களுடன் இன்னிங்ஸை முடித்துக் கொண்டார் குயின்டன் டி ஹொக். இதற்காக அவர் எடுத்துக்கொண்டது 46 பந்துகள். மொத்தத்தில் குயின்டனின் இன்னிங்ஸும் தென்னாபிரிக்காவுக்கு பின்னடைவே. பின்வரிசை வீரர்கள் எவரும் அதிரடியை வெளிப்படுத்தாத நிலையில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் தென்னாபிரிக்கா 8 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக குயின்டன் டி ஹொக் 47 ஓட்டங்களையும், வீஸ் 28 ஓட்டங்களையும், மொறிஸ் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக ரசல், கெயில், பிராவோ மூவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய தீவுகளுக்கும் ஆரம்பம் ஆட்டம் கண்டது. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே கெயிலை போல்ட் ஆக்கினார் ரபாடா. கெயிலின் ஆட்டமிழப்புடன் தீவுகளின் சராசரி சடுதியான வீழ்ச்சி கண்டது. ஆனால் அந்த அணியில் அதிகளவான துடுப்பாட்ட வீரர்கள் என்பதால் பந்துகளை வீணடித்து பதற்றத்தை ஏற்படுத்த முடியாது. தென்னாபிரிக்கா செய்யவேண்டிய ஒரே வியூகம் இலக்குகளை வீழ்த்துவது மட்டுமே. ரண் அவுட் ஆனார் பிளெச்சர். 32 ஓட்டங்களுடன் வெளியேறினார் சாள்ஸ். ஆனால் இதற்காக அவர் 35 பந்துகளை எடுத்துக்கொண்டார். சாமுவேல்ஸ் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் வந்த வேகத்தில் விடைபெற்றார் பிராவோ. 24 பந்துகளில் 23 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தபொழுது பந்து தாகிரிடம் சென்றது. ஓட்டமெதனையும் கொடுக்காமல் ரசல், சமி இருவரையும் அடுத்தடுத்து வெளியேற்றினார். சாமுவேல்ஸும் வெளி யேற்றப்பட்டமையால் ஆட்டம் தென்னா பிரிக்காவிடமே இருந்தது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் ஒன்பது ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் சிக்சரை விளாசி ஆட்டத்தை தீவுகளின் பெயரில் எழுதினார் பிரீத்வைட்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக தாகிர் இரு இலக்குகளையும், ரபாடா, மொறிஸ், வீஸ், பங்கிஸோ நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக சாமுவேல்ஸ் தெரிவானார். (ம)







# "ஆண்களுக்கு அதிக ஊதியம்" மன்னிப்புக்கேட்டார் ஜோகோவிக்



ரென்னிஸில் ஆண்களுக்கு அதிக ஊதியத்தை வலியுறுத்திய ஜோகோவிக், தனது கருத்துக்கு மன்னிப்புக் கேட்டுள்ளதுடன் தனது கருத்துக்கான விளக்கத்தையும் வழங்கியுள்ளார்.

ரென்னிஸ் தொடரில் ஆண்கள் பிரிவினருக்கான ஆட்டங்களே அதிக வருமானத்தைக் கொண்டு வருகின்றன. இதனால் ஆண்கள், பெண்கள் இருபால் பிரிவினருக்குமான பரிசுத் தொகை சமமாக இருக்கக்கூடாது. ஆண்களுக்கு அதிகம் வழங்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார் முதல் நிலை வீரரான ஜோகோவிக். இதனால் பல்வேறு தரப்பினரும் ஜோகோவிக்கின் கருத்து தவறு என்று குறிப்பிட்டனர். இந்த நிலையில் அவர் தனது கருத்துக்கு மன்னிப்புக்கேட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக ஜோகோவிக் தெரிவிக்கையில் எவரையும் காயப்படுத்தும் அல்லது எதிர்மறையான உட்கருத்துகளைக் கொண்டுவரும் எண்ணங்களை நான் எப்போதும் கொண்டிருக்கவில்லை. பாலினங்களுக்கிடை யில் எந்தவிதமான வேறுபாடுகளையும் நான் பார்ப்பதில்லை.விளையாட்டில் சமத்துவத்துக்கு நான் ஆதரவு தெரிவிக்கின்றேன். அதிக வருமானம் ஆண்களின் ஆட்டங்களால் கிடைப்பதால் அவர்களுக்கு அதிகம் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே எனது கருத்தை வலியுறுத்தினேன். ஏதாவதொருவகையில், எனது சக பெண்ரென்னிஸ் வீராங்கனைகளை நான் காயப்படுத்தியிருந்தால், அதற்கு மன்னிப்புக் கோருகின்றேன். அவர்களுடன் நல்ல உறவைக் கொண்டிருக்கின் றேன். அவர்கள் அனைவர் மீதும் உயர்ந்த மதிப்பைக் கொண்டிருக்கின்றேன். என்றார். (ம)



# மீண்டும் மீண்டும் சர்ச்சையில் அப்ரிடி காஷ்மீரை தனியாகக் குறிப்பிட்டதால்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் பின்பு காஷ்மீர் மக்களுக்கு என தனியாக நன்றி கூறியமையால் அப்ரிடி மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

முன்னதாக நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தின் பின்பு அப்ரிடி கருத்துத் தெரிவிக்கையில் - காஷ்மீரை சேர்ந்த மக்கள் நிறையப் பேர் ஆட்டத்தைக்காண வந்து எங்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்-என்று கூறினார். காஷ்மீர் ரசிகர்கள் ஆதரவு குறித்து அப்ரிடி தனியாகப் பிரித்து தெரிவித்த கருத்து சர்ச்சையைக்கிளப்பியது. அவருக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் செயலாளர் அனுராக் தாகூர் கடும் கண்டனம் தெரிவித்தார்.

இந்த நிலையில் நேற்று நடந்து முடிந்த ஆஸ்திரேலியாவிற்கு எதிரான ஆட்டத்துக்குப்பிறகு பேசிய அப்ரிடி,நாங்கள் சரியாக விளையாடவில்லை. கடைசி நேரத்தில் அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுத்துவிட்டோம். ஓய்வு பற்றி பாகிஸ்தான் திரும்பிய பிறகு அறிவிப்பேன். எங்களுக்கு ஆதரவு அளித்த கொல்கத்தா ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் இங்குவந்து எங்களுக்கு ஆதரவு அளித்த காஷ்மீர் மக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

ஏற்கனவே தனிப்பட்ட வகையில் காஷ்மீர் ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்து அதற்காக விமர்சிக்கப்பட்ட அப்ரிடி மீண்டும் காஷ்மீர் ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்பாக, பாகிஸ்தானை விட இந்தியாவில் தான் அதிக அன்பை அனுபவிப்பதாக தெரிவித்து, பாகிஸ்தான் மக்களிடத்தில் முறையாக வாங்கிக் கட்டிய அப்ரிடி,அதிலிருந்து தப்புவதற்காக காஷ்மீர் மக்களை இழுத்திருக்கலாம் என்றும் அபிப்பிராயங்கள் உள்ளன. (ம)

இந்தியன் ரெறாசோ சிப்ஸ் விற்பனை
மொத்தவிலை ரூபா 1100/= - 1200/=
"மாயின்ஸ்"
சுழிபுரம் பத்திரகாளி கோயில் சந்தி.
கண்டாமை. தொல்புரம்.
077 954 1877, 076 703 0343
077 355 3372, 021 225 0186

மொழி வகுப்புக்கள்
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் - Deutsch. நெதர்லாந்து - Dutch, French, Italian, English (LifeSkills - AI)வகுப்புக்கள்நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள் திங்கட்கிழமை 28.03.2016 ஆரம்பமாகின்றன.
விவேகானந்த அக்கடமி
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 2464

A/L தொழில் நுட்பப் பிரிவிற்கு வடக்கு, கிழக்கு மாகணங்களில் வெற்றியைப் பெற்றுக் தந்த ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்.
விஸ்டம்
விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
2018 ▶ பிரிவு - 2 வகுப்புக்கள் ஆரம்பம்
26.03.2016 சனிக்கிழமை காலை 8.00
2016 ▶
பொறியியற் தொழில்நுட்பம்
உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
ICT , விவசாயம், புவியியல், Media
வினாத்தாள் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புக்கு : 0772487774, 021 221 7860

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.